24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை: 30
பக்கங்கள்: 28

சுடர் 33 கதிர் 279 ஆவணி 16ஆம் நாள் சனிக்கிழமை 01 செப்ரெம்பர் 2018 வள்ளுவர் ஆண்டு 2049


# தனிவழி செல்வது குறித்து விக்கி தீவிர பரிசீலனை



யாழ்ப்பாணம், செப்ரெம்பர். 1

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் அரசியலுக்கு அழைத்து வரப்பட்ட வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், அரசியலிருந்து ஒதுங்குவதா அல்லது புதுக் கட்சி ஆரம்பிப்பதா என்பது தொடர்பில் தீவிரமாக ஆராய்ந்து வருகின்றார். அதனை அவரே நேற்று அறிவித்தார்.

தமிழ் மக்கள் பேரவையின் கூட்டத்தில் நேற்று உரையாற்றிய அவர், தனக்கு முன்பாக தற்போது 4 தெரிவுகள் இருப்பதாகக் குறிப்பிட்டார். அவற்றுள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் தொடர்ந்தும் பயணிப்பதை ஒரு தெரிவாக முன்வைக்கவில்லை.

>> 25

## வன்முறைகளை கண்டித்து 4ஆம் திகதி ஆர்ப்பாட்டம்

யாழ்ப்பாணம், செப். 1

வடக்கு மாகாணத்தில் பெண்களுக்கு எதிராக அதிகரித்துள்ள வன்முறைகளைக் கண்டித்து எதிர்வரும் 4ஆம் திகதி செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகம் முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்தப்படவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்துள்ளது.

இது தொடர்பில் அந்த இணையம் அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வடக்கு மாகாணத்தில் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்ந்தும் அதிகரித்து வருகின்றன. இவை தொடர்பான சட்ட நடவடிக்கைகளும் மந்த கதியிலே நடைபெறு

>> 25

## கட்சி அரசியலில் விக்கி தொடரவேண்டும்

### பேரவையினர் கடும் அழுத்தம் தனிக் கட்சிக்கு க.குமார் ஆலோசனை

யாழ்ப்பாணம், செப். 1

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கட்சி அரசியலில் தொடரவேண்டும் என்று தமிழ் மக்கள் பேரவையின் உறுப்பினர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

தமிழ் மக்கள் பேரவையின் நேற்றைய கூட்டத்தில், முதலமைச்சர் நான்கு தெரிவுகளை முன்வைத்திருந்தார்.

திரும்ப என் வீட்டுக்குச் சென்று எனது ஓய்வு வாழ்க்கையைத் தொடர்வது. மற்றையது ஒரு கட்சியுடன் சேர்ந்து தேர்தலில் நிற்பது. மூன்றாவது புதிய கட்சி ஒன்றைத்

>> 22

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தோல்வியடைந்துவிட்டது

### முதலமைச்சர் கூறுகிறார்

யாழ்ப்பாணம், செப். 1

2009ஆம் ஆண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற்றுக் கொண்ட தலைமைப் பாத்திரம் மற்றும் அதன் அணுகுமுறை போன்றவற்றில் அது தோல்வி அடைந்துவிட்டது என்றே கூற வேண்டியுள்ளது. இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

தமிழ் மக்கள் பேரவையின் பணிமனை கந்தர்மடத்தில் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது. அதன் பின்னர் இணைத் தலைமை உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

>> 25

## பெண்கள் மீதான வன்முறையை எதிர்த்து நேற்று ஆர்ப்பாட்டங்கள்



முல்லைத்தீவு, செப். 1

கிளிநொச்சியில் கொலை செய்யப்பட்ட பெண்ணுக்கு நீதி கோரியும், திருமுருகண்டியில் பொலிஸ் நிலையம் அமைக்க வேண்டும் என்று வலியுறுத்தியும் நேற்றுக் கண்டன ஊர்வலம் நடத்தப்பட்டது. கிளிநொச்சியி லும் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

திருமுருகண்டிப் பிள்ளையார் ஆலய வளாகத்தில் இருந்து ஆரம்பமான ஊர்வலம் திருமுருகண்டிப் பொதுநோக்கு மண்டபத்தைச் சென்றடைந்தது. அங்கு கண்டனக் கூட்டம் நடைபெற்றது. திருமுருகண்டி, மத்துபுரம் கிராம மட்டப் பொது அமைப்புக்கள், வணிகர்கள் இணைந்து ஊர்வலத்தை ஏற்பாடு செய்திருந்தனர்.

கண்டனக் கூட்டத்தின் முடிவில் அரச தலைவர், எதிர்க்கட்சித் தலைவர், வடமாகாண முதலமைச்சர், பொலிஸ் மா அதிபர் ஆகியோருக்கான மனுக்கள்

>> 25

## நானே கொலை செய்தேன்

### கைதானவர் ஒப்புதல் வாக்குமூலம் கிளி. பெண் கொலை மர்மம் விலகியது

கிளிநொச்சி, செப். 1

கிளிநொச்சி இளம் குடும்பப் பெண் கொலை செய்யப்பட்டமைக்கான காரணம் கண்டறியப்பட்டுள்ளது.

நித்தியகலாவின் வயிற்றில் வளர்ந்த குழந்தை தன்னுடையது. அந்தக் குழந்தை விவகாரத்தால் அவரது கழுத்தை நெரித்துக் கொலை செய்தேன் என்று நேற்றுக் கைது செய்யப்பட்ட சந்தேகநபர் ஏற்றுக்

>> 22

## போர் முடிவடைந்த பின்னும் பலமாக்கப்பட்ட இராணுவம்

கொழும்பு, செப். 1

இராணுவத்தின் தற்போதைய ஆளணியில் உள்ள 40 வீதமானோர் போர் முடிவுக்கு வந்த பின்னர் சேர்ந்து கொண்டவர்கள் என்று இராணுவத்தின் கிளிநொச்சி படைத் தலைமையகத் தளபதி மேஜர் ஜெனரல் நிசங்க ரணவான தெரிவித்துள்ளார்.

இலங்கை இராணுவம் நடத்தவுள்ள நீர்க்காகம் கூட்டுப் பயிற்சி தொடர்பாக கொழும்பில் நேற்றுமுன்தினம் விளக்கமளிக்

>> 25

## குடைந்து மணல் அகழ்ந்தவர் வித்தன் சரிந்து வீழ்ந்ததில் சாவு

முல்லைத்தீவு, செப். 1

ஆற்றின் இருகரையிலும் உள்ள வித்தனை (உயரமான பிட்டி) குடைந்து மணல் அகழ்ந்தவர் அது சரிந்து வீழ்ந்ததில் அதனுள் சிக்குண்டு பரிதாபமாக உயிரிழந்தாகத் தெரிவிக்கப்படுகின்றது.

>> 22

## காணிகளை விடுவிக்க ராணுவம் மறுப்பதால் மக்கள் துன்பங்களை அனுபவிக்கின்றனர்

### விடைபெறும் நேரத்தில் சயிட் அல் ஹுசைன் கவலை

யாழ்ப்பாணம், செப். 1

பாதிக்கப்பட்ட மக்களின் காணிகளை விடுவிக்க இராணுவம் மறுப்பதால் அந்த மக்கள் தொடர்ந்தும் மோசமான துன்பங்களை அனுபவிக்கின்றனர். இவ்வாறு ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சயிட் அல் ஹுசைன் தெரிவித்துள்ளார்.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் பதவியிலிருந்து ஹுசைன் நேற்றுடன் ஓய்வு பெற்றார். பதவியிலிருந்து விடைபெறுவதற்கு முன்னதாக மனித உரிமைகள் தொடர்பான நீண்ட

>> 25

## கூட்டாட்சித் தீர்வு தேவையில்லை என்று சுமந்திரன் சொன்னாரா?

யாழ்ப்பாணம், செப். 1

தமிழ் மக்களுக்கு கூட்டாட்சி அடிப்படையிலான தீர்வொன்று அவசியம் இல்லையென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார் என இணையத்தளங்களில் நேற்றுச் செய்தி வெளியாகியது.

இது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனிடம் கேட்டபோது, கூட்டாட்சி என்ற பெயர்ப் பலகையில் தொங்கிக் கொண்டிருக்க வேண்டியதில்லை. ஆக்கபூர்வமான அதி

>> 22

see more news in NEWUTHAYAN.COM

# மைத்திரியை வாழ்த்துவதில் முந்திக்கொண்டது சீன அரசு

கொழும்பு. செப்.1

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கு சீன அரச தலைவர் ஷி ஜின்பிங் பிறந்தநாள் வாழ்த்துச் செய்தி வழங்கியுள்ளார். சீன அரச தலைவர் ஷி ஜின்பிங் கொடுத்தனுப்பியவாழ்த்துக்கடிதத்தை. அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவிடம் கடந்த செவ்வாய்க்கிழமை சீனத் தூதுவர் செங் ஷியுவான் நேரில்சென்றுகையளித்துள்ளார்.

அரச அதிபர் மைத்திரிபால சிறிசேனநாளைமறுதினம்3ஆம்நாள் 67ஆவதுபிறந்தநாளைக்கொண்டாடவுள்ளார். அவரது பிறந்த நாளுக்கு ஒருவாரம் முன்னதாகவேசீனாதனதுவாழ்த்தைத்தெரிவித்துள்ளது.

அந்த வாழ்த்துச் செய்தியில் எமது இருதரப்பு உறவுகளின் அபிவிருத்திக்கு நான் மிகுந்த முக்கியத்துவத்தைவழங்கியிருக்கிறேன்; சீன இலங்கைமூலோபாயஒத்துழைப்புக் கூட்டை மேலும் புதிய உயரத்துக்கு கொண்டு செல்வதற்கு உங்களுடன் இணைந்து செயற்பட விரும்புகிறேன் என்று சீன அரச தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

சீன அரச தலைவரின் வாழ்த்துக் கடிதத்துக்குநன்றிதெரிவித்து அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவும் அன்றே பதில் கடிதம் ஒன்றையும் கொடுத்தனுப்பியுள்ளார். இரண்டு நாடுகளுக்கும் இடையிலான அபிவிருத்தி ஒத்துழைப்பை மேலும்வலுப்படுத்தவதற்குஉங்களுடன் இணைந்து பணியாற்ற விரும்புகிறேன் என்று அரச தலைவர் தெரிவித்துள்ளார்.

(ற)

# திட்டமிட்டு காணாமல் ஆக்கப்பட்டவர்களை காணாமல்போனோர் என்று கூறமுடியாது

## இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் தலைவர் தீபிகா உடகம தெரிவிப்பு

கொழும்பு, செப். 1

நாட்டில் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் குறிப்பிடுகையில் அநேகமானோர் காணாமல்போனோர்எனக்குறிப்பிடுகின்றனர். அவ்வாறு கூறுவது பொருத்தமற்றது. தனிப்பட்ட காரணங்களுக்காகச்சிலர்வேறெங்கேனும்செல்வதுண்டு. ஆனால் நாட்டில் திட்டமிட்டு வலிந்து காணாமல்ஆக்கப்பட்டவர்களைகாணாமல்போனோர்எனக்குறிப்பிடுவது பொருத்தமற்றதாகும் இவ்வாறு இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் தலைவர் தீபிகா உடகம தெரிவித்தார்.

வலிந்து காணாமல் ஆக்கப்படுவதற்கு எதிரான பன்னாட்டுத் தினத்தை முன்னிட்டு காணாமல்போனோர் பணியகத்தால் 'இனிமேலும் காணாமலாக்கப்படுவதைத்தடுப்போம்"எனும்தொனிப்பொருளில்ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வு ஜே.ஆர்.ஜயவர்தன நிலையத்தில் நேற்று முந்தினம் நடைபெற்ற நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மனித உரிமைகள் விடயத்தில் இலங்கை மனித உரிமைஆணைக்குழுபன்னாட்டுரீதியில்முன்னிலை பெற்றுள்ளது. மனிதஉரிமைதொடர்பில்ஏனையநாடுகளுக்கு முன்னுதாரணமான நாடாகவே இலங்கை பார்க்கப்படுகின்றது. இலவசக்கல்வி, இலவச மருத்துவம்மற்றும்தனிமனிதஅபிவிருத்திஎன்பவற்றில்முன்னிலையில்உள்ளது. எனினும்இங்குவலிந்துகாணாமலாக்கப்படுதல் எனும் பெரிய மனித உரிமை மீறல் இடம்பெற்றுள்ளமை வருந்தத்தக்க விடயமாகும்.

காணாமல் ஆக்கப்பட்டோர் விடயம் நீதித்துறை சார்ந்த பிரச்சினையாக மாத்திரமே பார்க்கப்படுகின்றது. எனினும் அதுநீதித்துறைசார் பிரச்சினை என்பதுடன் பெரியதொரு சமூகப்பிரச்சினையும் ஆகும். ஆனால் எமது சமூகத்திலே இவ்விடயம் தொடர்பில் தெளிவற்ற நிலையே உள்ளது. காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் பேசும் போது அநேகம்பேர் போரை வென்ற வீரர்களுக்கு எதிராகப் பேசுவதாகவும், அவர்களைத் துரோகிகளாகவும் பார்க்கும் நிலையும் உள்ளது. அது முற்றிலும் தவறாகும். இவ்விடயத்தை இன, மத ரீதியாகப் பார்ப்பது நாட்டுக்குச் செய்யும் துரோகமாகும். காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் வேதனையை அவர்களின் நிலையிலிருந்து நோக்கினால் மாத்திரமே புரிந்துகொள்ள முடியும்.

காணாமல்ஆக்கப்பட்டோர் விவகாரம் தொடர்பில் காணாமல்போனோர் பணியகம் செயற்றிறன் மிக்க வகையில் செயற்பட்டு வருகின்றது. பொதுவாக எத்தனைபேர் காணாமல் போனார்கள் போன்ற எண்ணிக்கைக்கு முக்கியத்துவம் அளிக்கின்றோம். எனினும் ஒருவருக்கு அநீதி இழைக்கப்பட்டாலும் அது மனித உரிமைக்கான சவாலாகும். இவ்விடயத்தில் காணாமல்போனோர் பணியகம் அக்கறையுடன் செயற்பட்டு வருகின்றது. அந்தவகையில் பணியகத்தை மேலும் பலப்படுத்துவதுடன், இவ்விடயம் சார்ந்த ஏனைய பங்காளர்களையும் பலப்படுத்துவது அவசியமாகும். காணாமல்போனோர் பணியகத்துக்கு இதுவரையில் எவ்விதமான அரசியல் நெருக்கடிகளும் காணப்படவில்லைஎன்பதுடன், அதன்செயற்பாடுகளில்அரசியல் தலையீடுகள் இருக்கவில்லை காணாமல்போனோர் பணியகம் மக்களுக்கானது. எனவே அதன் சுயாதீன செயற்பாடுகளுக்கு மக்கள் தமது முழுமையான ஒத்துழைப்பைவழங்கவேண்டும் - என்றார்.

(21)

# ஆடுகளைத் திருடினர் என்ற குற்றச்சாட்டில் மூவர் கைது

மானிப்பாய். செப். 1

ஆடுகளைத்திருடிச்சென்றனர்என்ற குற்றச்சாட்டில்மூவர்கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று மானிப்பாய்ப் பொலிஸார் தெரிவித்தனர். கடத்திச் செல்லப்பட்ட ஆடுகளும்மீட்கப்பட்டுள்ளனஎன்றும்பொலிஸார்தெரிவித்தனர்.

சம்பவம்இளவாலைகீரிமலைப்பகுதியில்நேற்றுஇடம்பெற்றது. அந்தப் பகுதியில்ஆடுகள்திருடப்படுகின்றது என்று பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்தே சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்கள் 21,24,25 வயதுகளையுடைய மானிப்பாய்ப் பகுதியைச்சேர்ந்தவர்கள். கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட முச்சக்கரவண்டியும் மீட்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர்கள் விசாரணைகளின் பின்னர் நீதிவான் மன்றில் முற்படுத்தப்படுவார்கள் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

(21,26)



யாழ்ப்பாணம், மண்கும்பானில் நேற்று டிப்பர் ரக வாகனம் விபத்துக்குள்ளானது. கட்டுப்பாட்டை இழந்த டிப்பர் வாகனம் வீதியோர மின்கம்பத்துடன் மோதிக் கவிழ்ந்துள்ளது. விபத்துக்குசாரதியின்தூக்ககலக்கம்காரணமாகஇருக்கலாம்என்று கூறப்படுகின்றது. (212)

## ஐ.எஸ்.ஐ.எஸ்சுடன் தொடர்பு இலங்கை இளைஞன் கைது!

கொழும்பு, செப். 1

பயங்கரவாதச்செயற்பாட்டுடன் தொடர்புபட்டவர் என்ற குற்றச்சாட்டில் 25 வயதுடைய இலங்கை இளைஞர் ஒருவர் சிட்னியில் கைதுசெய்யப்பட்டுள்ளார்என்று தெரிவிக்கப்படுகிறது. ஐ.எஸ். ஐ.எஸ். இயக்கத்தின் பயங்கரவாத நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார் என்ற சந்தேகத்தின் பெயரிலேயே இவர் ஆஸ்திரேலியாப் பொலிஸாரால்கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று அந்நாட்டுச் செய்திகள் தெரிவிக்கின்றன. இவர் இலங்கையின் விளையாட்டு துறைஅமைச்சர்பைசர்முஸ்தபாவின் மருமகன் என ஊடகங்கள் செய்திவெளியிட்டுள்ளன. (21)

# காணாமல் ஆக்கப்பட்டோர் பணியகத்தினருக்கு ஊதியம்

## தீர்மான வரைவு மீதான விவாதம் அடுத்த வாரம்

கொழும்பு. செப்.1

காணாமல் ஆக்கப்பட்டோருக் கானபணியகத்தின்அங்கத்தவர்களுக்கு ஊதியம் வழங்குவதற்கான தீர்மான வரைவு அடுத்த வாரம்நாடாளுமன்றில்விவாதத்துக்கு எடுக்கப்படவுள்ளது.

நாடாளுமன்றத்தின் செப்ரெம்பர் மாத முதலாவது கூட்டத் தொடர் எதிர்வரும்4ஆம்திகதிஆரம்பமாகவுள்ளது. அன்று வாய்மூலம் விடைக்கான வினா நேரம் முடிந்தவுடன் இறக்குமதி மற்றும் ஏற்றுமதிச் சட்டத்தின் ஒழுங்குவிதிகள், இலங்கைஏற்றுமதிஅபிவிருத்திச் சட்டத்தின் கட்டளை மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பானஅலுவலகத்தின்அங்கத்தவர்களுக்குஊதியம்பெற்றுக் கொடுத்தல் தொடர்பான தீர்மான வரைவுகள் விவாதத்துக்கு எடுக்கப்படவுள்ளன. (ற)

# போலி 5,000 ரூபாவுடன் இளைஞர் ஒருவர் கைது

வவுனியா, செப்.1

5 ஆயிரம் ரூபா போலி நாணயத்தாளுடன் ஒருவர் நேற்றுமுன்தினம் வவுனியாவில் கைது செய்யப்பட்டார். அவர் நேற்று வவுனியா நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு எதிர்வரும் 14ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

வவுனியா, பட்டாணிச்சூர் பகுதியில் உள்ள வர்த்தக நிலையம்ஒன்றுக்கு இரு இளைஞர்கள் வந்துள்ளனர். 5 ஆயிரம் ரூபா நோட்டைக் கொடுத்துப் பொருள்கள் வாங்கியுள்ளனர். பொருள்களையும், மீதிப்பணத்தையும் கடையில் பணிபுரிபவர் கொடுத்துள்ளார். அவற்றைப்பெற்றுக்கொண்டுஇளைஞர்கள்புறப்பட்ட ஆயத்தமாகினர்.

அப்போது சந்தேகம் கொண்ட கடை உரிமையாளர் இளைஞர்களைஅழைத்துள்ளார். உடனே இளைஞர்கள் இருவரும் ஓடித் தப்ப முயன்றனர். அங்கிருந்தவர்கள் துரத்திச்சென்றதில் ஒருவர் சிக்கிக்கொள்ள மற்றையவர் தப்பிஓடியுள்ளார். சிக்கிக்கொண்டவர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.



பொலிஸாரால் கை கைது செய்யப்பட்டவர் 24 வயதுடையவர் என்றும், நெளுக்குளத்தைச் சேர்ந்தவர் என்றும் கூறப்படுகின்றது. இளைஞர்கள் வந்த உந்துருளியும் கைப்பற்றப்பட்டுள்ளது. இது தொடர்பான விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

(ற-110)

# ஞானசார தேரரின் மேன்முறையீட்டை நிராகரித்தது மன்று

கொழும்பு. செப்.1

பொதுபலசோனாஅமைப்பின் செயலர்கலகொடஅத்தேஞானசாரருக்குநீதிமன்றத்தால்விதிக்கப்பட்ட6ஆண்டுகள்கடூழியச் சிறைத்தண்டனைதொடர்பில் மேன்முறையீடு செய்வதை மேன்முறையீட்டு நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

ஞானசார தேரரின் தண்டனையை மேன்முறையீட்டுக்காகமேன்முறையீட்டுநீதிமன்றத்துக்கு வழங்குவதா இல்லையா என்பது தொடர்பில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தவிசாளரான நீதியரசர் பிரீத்தி பத்மன் சூரசேன உள்ளிட்டநீதியரசர்கள்முன்னிலையில் நேற்று விசாரணைகள் நடைபெற்றது. அதன்போதே இந்தவிடயம்நிராகரிக்கப்பட்டது.

நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டின் பேரில் பொதுபல சேனா அமைப்பின் செயலர் கலகொட அத்தே ஞானசார தேரருக்கு மேன்முறையீட்டு நீதிமன்றத்தால்ஆறுவருடகடூழியச்சிறைத்தண்டனைவிதிக்கப்பட்டது. இந்தவிடயம்தொடர்பில் எதிர்காலத்தில் உயர் நீதிமன்றில்மேன்முறையீடுசெய்யப்படும் என்று பொதுபல சேனா அமைப்பின் தேசிய அமைப்பாளர் தெரிவித்திருந்தார்.

(ற21)

# ஐ.நா. அறிக்கை தொடர்பில் ஆணைக்குழு நியமியுங்கள்

## அரச தலைவரைக் கோருகிறது பூகோள இலங்கை ஒன்றியம்

கொழும்பு, செப்.1

ஐ. நா. மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிரான அறிக்கையில் இறுதிக்கட்ட உள்நாட்டு போரில் போர் குற்றங்கள் இடம் பெற்றிருப்பதாக குறிப்பிடப்படவில்லை என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன கூறியுள்ளதை ஏற்றுக் கொள்ள முடியாது. இராணுவத்தினருக்கு எதிராக அமெரிக்காவில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கை தொடர்பில் ஆராய அரச தலைவர் சுயாதீனமான ஒரு குழுவினை நியமிக்க வேண்டும். அந்தக் குழு எவ்வித சர்வதேச தலையீடுகளும் இன்றி சுயாதீனமாக செயற்படும் வழிமுறைகளைத் துரிதப்படுத்த வேண்டும்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் பூகோள இலங்கை ஒன்றியத்தின் செயலாளர் அட்மிரல் சரத் வீரசேகர.

கொழும்பு. ராஜகிரியவில் உள்ள பூகோள இலங்கை ஒன்றியத்தில் நேற்று நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தெரிவித்தாவது

ஆயிரத்து 281 பக்கங்களை கொண்ட குறித்த அறிக்கையில் 36 பக்கங்களில் போர்க் குற்றச்சாட்டுக்கள் என்ற சொற்பதம் பாவிக்கப்பட்டுள்ளது. 39 குற்றச்சாட்டுக்களும் இலங்கை இராணுவத்தினருக்கு எதிராக தொடுக்கப்பட்டுள்ளது அரசு நாட்டு மக்களின் விருப்பத்துக்கு ஏற்ப நாட்டை நிர்வகிக்காமல் சர்வதேசத்தின் விருப்பங்களை நிறைவேற்றும் வகையில் செயற்படும் நிலை தற்போது தோற்றம் பெற்றுள்ளது. இராணுவத்தினருக்கு எதிராக தரூஸ்மன் அறிக்கையைக் கொண்டு புலம் பெயர் விடுதலை புலிகள் அமைப்பின் விருப்பங்களை நிறைவேற்றும் முகமாக அமெரிக்கா அறிக்கையைச் சமர்ப்பித்தது. அதற்குக் கூட்டரசு இணை அனுசரனை வழங்குகின்றது என்றும் குறிப்பிட்டுள்ளது.

இறுதிக்கட்டப் போரின்போது மனித உரிமை மீறள்கள் மற்றும் போர்க் குற்றங்கள் இடம் பெறவில்லை என்று குறிப்பிட்டுள்ள பரணகம அறிக்கை தொடர்பில் அரசு எவ்வித கவனமும் செலுத்தாமல், தரூஸ்மூன் அறிக்கையை முன்னிலைப்படுத்தி கடந்த அரசைப் பழிவாங்க முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. இந்த விடயத்தில் அரசு நாட்டுப்பற்றுடன் செயற்பட வேண்டும்.

முன்னாள் மனித உரிமை ஆனையாளர் செய்ட் ஹல் ஹுசைன் தயாரித்த அறிக்கையில் இலங்கை இராணுவத்தினருக்கு எதிராக எவ்வித குற்றச்சாட்டுக்களும். போர் குற்றச்சாட்டுக்களும் இடம் பெறவில்லை என்று அரச தலைவர் குறிப்பிடும் நிலைப்பாடு தொடர்பில் கருத்துக்களை கூற முடியாத சூழ்நிலை காணப்படுகின்றது. போர்ப் குற்றங்கள் ஏதும் இடம் பெறவில்லை என்று குறிப்பிடுபவர்கள் ஏன் எமது நாட்டின் இராணுவத்தினரை சரவதேச விசாரனைக்கு உட்படுத்த வேண்டும் என்று குறிப்பிடுகின்றார்கள் என்ற விடயத்தை அரச தலைவர் புரிந்துக் கொள்ள வேண்டும்.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமை பேரவை அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டே அமெரிக்கா மனித உரிமை பேரவையில் இருந்து விலகியது. இந்த விடயத்தைக் கொண்டு அமெரிக்கா சமர்ப்பித்த அறிக்கையை நிறைவேற்றும் பொறுப்பில் இருந்து இலங்கை விலகிக் கொள்ளலாம். ஆனால் அரசு ஒரு போதும் அதைச் செய்யாது. அரச தலைவர் பிற விடயங்களுக்கு ஆனைக்குழுக்களை அமைப்பதை போன்று இராணுவத்தினருக்கு எதிராகக் குற்றஞ்சாட்டியுள்ள போர்க் குற்றங்கள் தொடர்பில் ஆராய சுயாதீன ஆனைக்குழுவை நாட்டுக்காக நியமிக்க வேண்டும். - என்றார். (ற)

# காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் உண்மையை அறியும் உரிமையை மறுக்காதீர்

## காணாமல் ஆக்கப்பட்டோர் பணியகத் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம் , செப் 1

காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகம் செயற்றிறனுடன் செயற்படுவதற்கு அரசு சார்பில் நிறைவேற்றப்பட வேண்டிய கடமைகள் காணப்படுகின்றன. அதன்அடிப்படையில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் உண்மையை அறிவதற்கு உள்ள உரிமை மறுக்கப்படக் கூடாது. காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பிலான பன்னாட்டு சமவாயத்தின் பரிந்துரைகளையும் பலப்படுத்த வேண்டும். அதனை தொடர்ந்து காணாமல் ஆக்கப்படுதலை ஏற்றுகொண்டு காணாமல் ஆக்கப்பட்டமைக்கு நினைவுத்தூபி அமைக்க வேண்டும். உள்ளிட்ட பரிந்துரைகள் அடங்கிய இடைக்கால அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளதோடு, அதனை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவிடம் கையளிக்க எதிர்பார்த்துள்ளதாக காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகத்தின் தலைவர் சாலிய பீரிஸ் தெரிவித்தார்.



வலிந்து காணாமல் ஆக்கப்படுவதற்கு எதிரான பன்னாட்டு தினத்தை முன்னிட்டு காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகத்தினால் நிகழ்வொன்று நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை கொழும்பு ஜே.ஆர்.ஜயவர்தன நிலையத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அந்த நிகழ்வில் உரையாற்றுகையிலேயே சாலிய பீரிஸ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் பற்றிய விசாரணைகள் இடம்பெறும் காலப்பகுதியில் அவர்களுக்கான இடைக்கால கொடுப்பனவை வழங்குதல், காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பத்தினருக்கு நலன்புரி உதவி திட்டங்களை நடைமுறைப்படுத்தல், அவர்களின் வாழ்வாதார பிரச்சினைக்குத் தீர்வுகளை பெற்றுக்கொடுத்தல் உள்ளிட்ட பரிந்துரைகளையும் இடைக்கால அறிக்கையில் முன்வைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பான முழுமையான இடைக்கால அறிக்கை எதிர்வரும் 5 ஆம் திகதி வெளியிடப்படும்

நாடாளுமன்றத்தில் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பிலான சட்ட மூலம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அத்தோடு அரசும் அதனை ஏற்றுக் கொண்டுள்ளமையினால், காணாமல் ஆக்கப்படுவது குற்றம் என்ற நிலைப்பாடும் உறுதி செய்யப்பட்டுள்ளது. இலங்கையில் காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலகம் நிறுவப்பட்டுள்ளமை இதற்கான ஒரு மைல்கல்லாகும். ஆரம்பத்தில் இவ் அலுவலகத்தை எதிர்த்து ஆர்ப்பாட்டம் முன்னெடுத்தவர்கள் தற்போது அலுவலக அதிகாரிகளை சந்தித்து உரையாட முன்வந்துள்ளனர்.

இடைக்கால அறிக்கையினை தயாரித்து அதனை அரச தலைவரிடம் கைளிக்க தீர்மானித்துள்ளோம். இதன் மூலம் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைகளை ஏற்று அரசு நடைமுறைப்படுத்தும் எனவும் எதிர் பார்த்துள்ளோம்.

வலிந்து காணாமல் ஆக்கப்படுதலில் முன்னணி வகிக்கும் நாடுகள் பட்டியலில் இலங்கையும் உள்ளடங்குகின்றது. அரச தரப்பினர் மற்றும் ஏனைய சில குழுக்களினாலும் எமது நாட்டில் காணாமல் ஆக்கப்படுதல் இடம்பெற்றுள்ளது. குறிப்பாக திருகோணமலை உள்ளிட்ட பிரதேசங்களில் மூவினத்தைச் சேர்ந்தவர்களும் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். இவ்வாறு காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களுடைய வேதனை மற்றும் அவர்களின் வாழ்வாதாரப்பிரச்சினை குறித்தும் நாம் அறிவோம்.

கடந்த நான்கு தசாப்தங்களாக இலங்கையில் காணாமல் ஆக்கப்படுதல் இடம்பெற்றுள்ளதை ஏற்றுக்கொள்வதனால் மாத்திரமே நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும். எனினும் துரதிஷ்டவசமாக அதனை ஏற்காதவர்களும் நாட்டில் உள்ளனர். மேலும் காணாமல் ஆக்கப்படோர் தொடர்பிலான அலுவலகத்தின் செயற்பாடுகளைப் பலப்படுத்துவ துடன், இறந்தகால பிரச்சினை என்று மாத்திரம் இதனை கரு தாமல் உறவுகளின் தேடலை உணர்ச்சிபுர்வமாக கருதி எதிர்கால நடவடிக்கைகயை முன்னெடுக்க வேண்டும் - என்றார். (8-31)

# திருமலைக்கு ரணில் நேற்று பயணம்

கொழும்பு, செப் 1

திருகோணமலை சேருவில பிரதேசத்துக்குத் தலைமை அமைச்சர் ரணில் விக்ரமசிங்க பயணம் ஒன்றை மேற்கொண்டு, சேருவில பௌத்த விகாரையில் வழிபாடுகளில் ஈடுபட்டார்.

சேருவில விகாரைகளுக்கானபுதியஇருகட்டடங்களை கிழக்கு மாகாண ஆளு நர் ரோஹித போகொல்லாகமவின் பங்கேற்புடன் தலைமை அமைச்சர் விக்ரமசிங்க உத்தியோகப்பூர்வமாக திறந்து வைத்தார்.

47 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்படும் வீதி வேலைத் திட்டம், சேருவில பிரதேசத்தில் நான்கு வேலை திட்டங்களான வீதி அபிவிருத்தி, மீன்பிடி, காணி, சுகாதார சேவைகளையும் ஆரம்பித்து வைத்தார். சேருவில விகாரை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் 135 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட பௌத்த மதகுருக்களுக்கான தங்குமிட வசதியைக் கொண்ட கட்டடமும், 20 மில்லியன் ரூபா செலவில் பிரித் பாராய வழிபாடு மண்டபமும் இதன் போது திறந்து வைக்கப்பட்டது.

நிகழ்வில் பெருந்தோட்டகைத் தொழில் அமைச்சர் நவீன் திசாநாயக்க, கேகாலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுஜீத் பெரேரா, அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நஸீர் உட்பட உயரதிகாரிகள் எனப் பலரும் பங்கேற்றனர்.

# காணாமல் ஆக்கப்பட்டோருக்கு என்ன நடந்தது? அவர்களின் உறவுகள் அறியக் காத்திருப்பு

## அரசுக்கு இதை நினைவுபடுத்துவதாக ஐ.நா. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப் 1

காணாமல் ஆக்கப்பட்டோருக்கு என்ன நடந்தது என்பதற்கான உண்மையை கண்டறிவதற்காக காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் நீண்டகாலம் காத்திருக்கின்றனர் என்பதை இலங்கை அரசுக்கு நினைவுபடுத்த விரும்பு கிறோம். இந்த விடயத்தில் பன்னாட்டு சட்ட திட்டங்களுக்கு அமைய அரசு செயற்படவேண்டும் என்று பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்டோர் குறித்து ஆராயும் ஐ. நா. செயற்குழு தெரிவித்தது.

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளுக்கு காணப்படுகின்ற இழப்பீட்டை பெற்றுக்கொள்வதற்கான உரிமை குறித்தும் அரசு விரைந்து கவனத்திற்கொள்ளவேண்டும் என்றும் அந்த செயற்குழு தெரிவித்துள்ளது.

ஐ. நா. மனித உரிமை பேரவையின் 39 ஆவது கூட்டத் தொடர் எதிர்வரும் 10 ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில் காணாமல் ஆக்கப்பட்டோர் குறித்த விரிவான அறிக்கை ஒன்றை இந்த ஐக்கிய நாடுகள் செயற்குழு மனித உரிமை பேரவைக்கு சமர்ப்பித்துள்ளது. அதில் காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம் காணப்படுகின்ற பல்வேறு நாடுகளின் நிலைப்பாடு குறித்து குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் இலங்கை தொடர்பில் மேற்கண்ட விடயம் சுட்டிக்காட்டப்பட்டது.

இந்தச் செயற்குழு முன்வைத்துள்ள அறிக்கையில் இலங்கை தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கையில் நிறுவப்பட்டுள்ள காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகம் செயற்பட ஆரம்பித்துள்ளமை தொடர்பில் அவதானம் செலுத்தியுள்ளோம். 2015 ஆம் ஆண்டு பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்டமை குறித்து ஆராயும் ஐக்கிய நாடுகள் செயற்குழு முன்வைத்த பரிந்துரைகளை கவனத்திற்கொண்டு இந்த விடயத்தில் செயற்படுமாறு அரசை வலியுறுத்துகின்றோம். இலங்கையில் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்ற உண்மையை அறிந்துகொள்வதற்காக காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் நீண்டகாலம் காத்துக்கொண்டிருக்கின்றனர் என்பதை அரசுக்கு நினைவுபடுத்துகின்றோம். இந்த காணாமல் போனோர் விடயத்தில் சர்வதேச சட்ட திட்டங்களுக்கு அமைய அரசு செயற்பட்டு தனது பொறுப்பை உணர்ந்து நடவடிக்கை எடுப்பது அவசியமாகின்றது.

அது மட்டுமன்றி பாதிக்கப்பட்டுள்ள காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களுக்கு காணப்படுகின்ற இழப்பீட்டை பெற்றுக்கொள்வதற்கான உரிமையை அரசு உறுதிபடுத்த வேண்டும் என்பதனையும் நினைவுபடுத்த விரும்புகின்றோம். எனத் தெரிவிக்கப்பட்டது. (8-31)





## கலைஞர் ஜெயரத்தினதுக்கு மதிப்பளிக்கும் நிகழ்வு

சாவகச்சேரி, செப். 1

தென்மராட்சிப் பிரதேசத்தில் நீண்டகாலமாக கலைத்துறையில் அர்ப்பணிப்புடன் செயலாற்றிவரும் பல்துறை கலைஞர் மீசாலையூர் ஜெயரத்தினத்துக்கு மதிப்பளிக்கும்நிகழ்வுநேற்று முன்தினம் இடம்பெற்றது.

சாவகச்சேரி சப்பச்சிமாவடி சித்தி விநாயகர் கலைமன்றத்தினர் அவருக்குக் கலைவித்தகன் என்னும் பட்டத்தை வழங்கி மதிப்பளித்தனர்.

மன்றத்தின் 41 ஆவது ஆண்டு நிறைவையொட்டி கடந்த 3 தினங்களாக நடத்திவரும் முத்தமிழ் விழாவின் இறுதிநாள் நிகழ்வில் மக்கள் முன்னிலையில் பட்டம் வழங்கி மதிப்பளித்தனர்.

மன்றத் தலைவர் மு.கதிரவேலு தலைமையில் நடைபெற்ற இறுதிநாள் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராகக் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைச் சேர்ந்த கு.கஜேந்திரகுமார் பொன்னம்பலம் பட்டத்தை வழங்கி மதிப்பளித்தார். (4.9)



வடமராட்சிநல்லொழுக்கநிறுவனத்தினால்பெண்தலைமைத்துவக் குடும்பங்களுக்கு சேமிப்பின் முக்கியத்துவம் பற்றியும் நுண்நிதிக் கடனால் ஏற்படும் பாதிப்புகள் பற்றிய விழிப்புணர்வுக் கூட்டமும் கடந்த புதன்கிழமை நடைபெற்றது. வடமராட்சி நல்லொழுக்க நிறுவனத்தில் வடமராட்சி நல்லொழுக்க நிறுவன இணைப்பாளர் க.ஆ.குலநாதன் அவர்களின்.தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் வளவாளராக ஓய்வுபெற்ற இலங்கை வங்கி முகாமையாளர் சி. சிறிகாந்தன் கலந்து கொண்டார். (8)

## நகைச்சுவை நாடகம் பட்டிமன்றத்துடன் சண்டிலிப்பாயில் இன்று கலைவிழா

சண்டிலிப்பாய்சமூகமேம்பாட்டுநிறுவனநம்பிக்கைச்சபையின்கலைஇலக்கியப்பண்பாட்டுக்குழுவினரின்ஏற்பாட்டில் இடம்பெறவுள்ள கலைவிழா இன்று சனிக்கிழமை மாலை 7 மணியளவில் சண்டிலிப்பாய் மத்தி இளங்கதிர் சனசமூக நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

சண்டிலிப்பாய்மத்திசமூகமேம்பாட்டுநிறுவனநம்பிக்கைச் சபையின் தலைவர் தா. கிருஸ்ணகுமார் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக கலைஞரும் எழுத்தாளருமான வை. திவ்வியராஜா, கலந்துகொள்வார். அங்குகலைநிகழ்வுகளுடன், 'சமூகஅக்கறையோடு அதிகம் செயற்படுவோர் இளையோரா? முதியோரா?'என்னும்தலைப்பிலானபட்டிமன்றம்மொழியின் வள்ளல் சோ.றோகன்ராஜ் தலைமையில் இடம்பெறவுள்ளது. நிறைவாக சண்டிலிப்பாய் மத்தி இளங்கதிர் சனசமூக நிலையத்தினர்வழங்கும்லீசிங்மாப்பிள்ளைநகைச்சுவை நாடகமும் இடம்பெறவுள்ளது. (4)

## சண்டிலிப்பாயில்எண்ணெய்க்காப்பு

யாழ்ப்பாணம், செப். 1

சண்டிலிப்பாய்வீணாகானம்பதிசிறிமகாசரஸ்வதிஅம்பாள் கோவிலில், சிறிதேவி, பூமிதேவிசமேதசிறிமன்வேங்கடாசலபதிபெருமாள்சிறிஆஞ்சநேயருக்குஇன்றுகாலைஎண்ணெய்க்காப்புஇடம்பெறவுள்ளது. கரலை7மணிதொடக்கம் மாலை6 மணிவரை இது இடம்பெறும். நாளை முற்பகல்9 மணிக்கு குடமுழுக்கு இடம்பெறும். குழந்தைகளுக்கான நீண்ட ஆயுள். நோயற்ற நல்வாழ்வுக்கான கிருஷ்ண ஜெயந்திஆராதனை ஆசீர்வாதநிகழ்வுமற்றும்கலைநிகழ்வுகள் இடம்பெறவுள்ளன என்று கோவில் குருமுதல்வர் சிவசிறிசபா.வாசுதேவக்குருக்கள் தெரிவித்துள்ளார். (4)

# தொடருந்துக் கடவைகளில் கம்பிகளை நீளமாக்கவும்

## உறுப்பினர் கோரிக்கை

யாழ்ப்பாணம், செப். 1

தொடருந்துக் கடவைகளில் பொருத்தப்பட்டுள்ள குறுக்குக் கம்பிகளைப் பொதுமக்கள் கடக்க முடியாதவாறு நீளமாக அமைக்க வேண்டு மென்று சாவகச்சேரிப் பிரதேச சபையின் உறுப்பினர் வை. ஜெகதாஸ் கோரியுள்ளார்.

தொடருந்துவீதியில்அமைக்கப்பட்ட பாதுகாப்புக் கடவைகளில் பொருத்தப்பட்டுள்ள குறுக்குக் கம்பிகள் தொடருந்து வரும்வேளையில் தானியங்கி மூலம் செயற்படுகின்றன. இவற்றில் பொருத்தப்பட்டுள்ள கம்பிகளின் நீளம் போதாமையால் நடந்து செல்வோரும் இரு சக்கர வாகனங்களில் செல்வோரும் தொடருந்து வருவதற்கிடையில் காணப்படும் இடைவெளி ஊடாகக் கடவையைக் கடக்கின்றனர். இது ஆபத்தான செயலாக இருந்தபோதிலும் மக்களின் அசண்டையீனமாகப் பயன்படுத்திவருகின்றனர். இதனால் விபத்துகள் ஏற்பட்டு உயிரிழப்புகளும் ஏற்படுகின்றன.

இதனால் தொடருந்துக் கடவைகளில் பொருத்தப்பட்டுள்ள குறுக்குக் கம்பிகளைப் பொதுமக்கள் கடக்க முடியாதவாறு நீளமாக அமைக்க வேண்டுமென்று சாவகச்சேரி பிரதேச சபையின் உறுப்பினர் வை. ஜெக தாஸ் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்திலிருந்து பளை வரையான தொடருந்து சாலையில் உள்ள 25 கடவைகளில் பத்துக்கும் குறைவான இடங்களிலேயே தன்னியக்க கடவைகள் பொருத்தப்பட்டுள்ளன. ஏனையவற்றில் சில இடங்களில் பாதுகாப்புக் கடவைக் காவலர்கள் காணப்படுகின்றனர். பல கடவைகள் பாதுகாப்பற்ற நிலையிலுள்ளன.

அவற்றின் சிலவற்றில் சமிக்ஞைவிளக்குகளும்ஒலி எழுப்பும் கருவியும் பொருத்தப்பட்டுள்ளன. இவ்வாறான சமிக்ஞைவிளக்குகள், ஒலி போன்றவை செயற்படுகின்ற போதி லும் மக்கள் அதனைப் பொருட்படுத்துவதாகத் தெரியவில்லை. மின்சாரம் தடைப்படும் வேளைகளில் தொடர்ந்து சமிக்ஞை விளக்குகள் எரிந்த நிலையிலும் ஒலி எழுப்பிய நிலையிலும் காணப்படுவது பொது மக்களின் அசண்டையீனதுக்குக் காரணமாகின்றன. பாதுகாப்பற்ற கடவைகளில் அடிக்கடி விபத்துகள் இடம்பெற்று வருவதை மக்கள் அனைவரும் அறிவர். இந்த நிலையில் தொடருந்து வருவதற்கான சமிக்ஞை விளக்குகள் ஒலி எழுப்பப்படுகின்ற வேளைகளில் மக்கள் பொறுமையாக நின்று தொடருந்து சென்றவுடன் தமது பயணத்தைத் தொடரலாம்.

கடவைகளில் பொருத்தப்பட்டுள்ள குறுக்குக் கம்பிகளை நீளமாக்குவதால் பாதசாரிகளும் இரு சக்கர வாகனங்களில் வருவோரும் கடவையைக் கடக்க முடியாமல் செய்யலாம். உரிய அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொண்டு கடவைகளில் பொருத்தப்பட்ட குறுக்குக் கம்பிகளை நீளமாக்குமாறும் கேட்டுள்ளார். (4.9.159)

### ஓவியக் கலையை வளர்க்கவென வகுப்பறைத் தொகுதி

ஓவியக் கலையை வளர்த்தெடுக்கும் பயிற்சி வகுப்பறைத் தொகுதி சாவகச்சேரியில் இன்று மாலை 4.30 மணிக்குத்திறந்துவைக்கப்படவுள்ளது.

ஓவியக்கலையைவளர்க்கவென சாவகச்சேரி தேவாலய வீதியில் மறைந்த நில அளவையாளர்ரி.பீ.ஹன்ட் குடும்பத்தினர் நினைவாக ஓவியக்கூடம் அமைத்து ஓவியங்களைக் காட்சிப்படுத்திவருகின்றனர். இந்த நிலையில் ஓவியப் பாடம் கற்கும் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களை ஊக்குவிக்கும்முகமாகத்தனியான கட்டடம் அமைத்துள்ளனர்.

நிகழ்வில் மட்டக்களப்பு மாணவர்களால் உருவாக்கப்பட்ட ஓவியங்கள் காட்சிப்படுத்தப்படும் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (4.9)

### பொன்னாலையில் புராண நாடகம்

யாழ்ப்பாணம் பொன்னாலைவரதராஜப்பெருமானின் வருடாந்த பெருந்திருவிழாவில் இன்று சனிக்கிழமை வேட்டைத்திருவிழா இடம்பெறும். மாலை நிகழ்வாக தொல்புரம் கலாலயத்தின் அண்ணாவியார் செல்லையா உதயசசந்திரனின் நெறியாழ்கையில்'கண்ணனும்கள்வனும்' எனும்புராணநாடகம்இரவு9மணிக்கு இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (4.63)

# நல்லூரில் இன்று

நல்லூர்துர்க்காதேவிமணிமண்டபத்தில்இன்றுஇசைக்கச்சேரி இடம்பெறும். இதில் பாட்டு அழகேசன் அமர்தலோஜன் மற்றும் ஆழகேசன் அமிர்தசிந்துஜன். வயலின் கா.குகபரன். மிருதங்கம்க. கஜன். கடம்நா. மாதவன். முகர்சிங் சி. செந்தூரன்ஆகியோரும்நிகழ்த்தவுள்ளனர். இலங்கைஇளங்கலைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் இடம்பெறும் இந்த நிகழ்வு மாலை 6.45 மணி தொடக்கம் 8.15 மணி வரை இடம்பெறும்.

★★★

நல்லூர்மனோன்மணி அம்மன் கோவிலில்"கந்தபுராணம் காட்டும் வாழ்வியல்"என்ற தலைப்பில் சைவசின்மயர் ச.முகுந்தன் சொற்பொழிவாற்றுவார். உலக சைவத்திருச்சபையின்ஏற்பாட்டில்இடம்பெறும்இந்தநிகழ்வுமாலை6.45 தொடக்கம் 7.45 வரை இடம்பெறும்.

★★★

நல்லை ஆதின குருமூர்த்த ஆலய மண்டபத்தில் தெய்வீகத் தொடர் இசைப் பேருரையில் இன்று "தாரகன் வதம்" என்ற தலைப்பில்பேருரை இடம்பெறும். கலாபூசணம்பிரம்மசிறி சிவ. வை. நித்தியானந்தசர்மாவுடன் அணிசெய் கலைஞர்கள் இதை வழங்குவர்.

நல்லூர் சைவ மகா சபை நடத்திவரும் இந்த நிகழ்வு மாலை 6.30 மணி தொடக்கம் 8 மணிவரை இடம்பெறும்.

★★★

சிறிலசிறி ஆறுமுகநாவலர் மணிமண்டபத்தில், பிற்பகல் 3.00 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை நாவடி வைரவர் குழுவினரின் பஜனை நிகழ்வு இடம் பெறும்.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்தில் நல்லைதிருஞானசம்பந்தர்ஆதீனக்குருமுதல்வர்சிறிலசிறி சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள் திருமுன்னிலையில், இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்கள உதவிப்பணிப்பாளர் இ. கர்ஜின் தலைமையில், யாழ்ப்பாணப்பல்கலைக்கழகஆங்கிலமொழித்துறை மூத்த விரிவுரையாளர் கலாநிதி கந்தையா சிறிகணேசன் முதன்மை விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார்.

சங்கானைப்பிரதேசஅறநெறிப்பாடசாலைமாணவர்களின் கலைநிகழ்வுகளும்பேராதனைப்பல்கலைகழகவிரிவுரையாளர், சைவப்புலவர் ஏ.அனுசாந்தனின் "நங்கை முடிக்கோர் நறுந்தொடை - தெய்வானை அம்மன் திருமணம்" எனும் தலைப்பிலான சிறப்புச் சொற்பொழிவும், திருமுறைநெறிச்செல்வர் மா.ந.பரமேஸ்வரனின் திருப்புகழ்க்கச்சேரி ஆகியவை சிறப்பு நிகழ்வாகவும் இடம்பெறவள்ளன.

இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக் களம் இதனை நடத்துகிறது.

## பொன்னாலை வரதராஜருக்கு நாளை தேர்

### உறியடியும் இடம்பெறும்

யாழ்ப்பாணம், செப். 1

பொன்னாலை சிறி வரதராஜப் பெருமாள் ஆலயத்தின் வருடாந்தத்தேர்த்திருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை மதியம் 12 மணியளவில் நடைபெறவுள்ளது.

அதிகாலை 5 மணிக்கு 108 கலசபூசை, தம்பபூசை, முற்பகல்10 மணிக்கு வசந்த மண்டபப் பூசை நடைபெற்றுமதியம்12மணியளவில் பெருமான் தேரில் ஆரோகணிப்பார். மதியம் 1.30மணிக்குஉறியடிஉற்சவமும், பச்சைசாத்துதலும் இடம்பெற்றுபி.ப 2 மணியளவில் பெருமான் தேரிலிருந்துஅவரோகணிப்பார். இரவு7.30மணிக்குதேரடி பார்த்தல்நடைபெற்றுநள்ளிரவு 12 மணிக்கு சிறி கிருஸ்ண ஜெயந்தியும், தாலாட்டுப்பஜனை, சிறப்புப் பூசைகள்நடைபெறவுள்ளன. நாளைமறுதினம் முற்பகல் 11மணிஅளவில்தீர்த்தோற்சவமும், இரவு 9 மணிக்கு கொடியிறக்கமும் இடம் பெறும்என்றுஅறிவிக்கப்பட்டது. (4)

## முதியோர் விழாவும் மதிப்பளிப்பும்

யாழ்ப்பாணம், செப். 1

யாழ்ப்பாணம்மாகியப்பிட்டி சண்டிலிப்பாய் முதியோர் சங்கத்தின், முதியோர்தின விழாவும்அவர்களை மதிப்பளிக்கும் நிகழ்வும் நாளை இடம்பெறும்.

மாகியப்பிட்டிச்சந்திக்குஅருகாமையில் முதியோர் சங்கத் தலைவர் லயன். சி. நாகையா தலைமையில் பி.ப.2.30 மணிக்கு இடம் பெறவுள்ளது. நிகழ்வுக்கு முதன்மை அதிதியாக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்கினேஸ்வரன், மதிப்புறு விருந்தினர்களாக நாடாளுமன்ற உறுப்பினர்த.சித்தார்த்தன், சண்டிலிப்பாய்பிரதேசசெயலகசமூகசேவைஉத்தியோகத்தர் வி.சிவராசா, வடக்கு மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் ஆகியோர் கலந்துசிறப்பிப்பர். (4.63)

## 3 நூல்களின் வெளியீடு அரியாலையில்

தென்மராட்சி, செப்.1

அரியாலையூர் மாலினிமாலா எழுதிய 3 கவிதைத் தொகுதி நூல்கள் வெளியீட்டுநிகழ்வுஇன்றுபிற்பகல் 3.30மணிக்குஇடம்பெறும். அரியாலைசரஸ்வதிமத்திய சனசமூகநிலையமண்டபத்தில் இது இடம்பெறும்.

'மௌனம்'எனும்பேரோசை, குச் சொழுங்கைகள் காத்திருக்கின்றன, நான் எனும் நீ ஆகிய மூன்று நூல்கள் வெளியிடப்படவுள்ளன.

ஓய்வுநிலை மாவட்டச்செயலர் செ.பத்மநாதன் தலைமையில்நடைபெறும்நிகழ்வில் நூல் பற்றிய சிறப்புரையை வடகோவை வரதராஜன்மற்றும்வே.தபேந்திரன் ஆகியோர் நிகழ்த்துவர். (4.9)

# கட்டாக்காலியாகத் திரியும் கால்நடைகள் பிடிக்கப்படும்

## உரிமையாளர்களுக்கு இதுபற்றி அறிவுறுத்த வேலணைப் பிரதேச சபையில் தீர்மானம்

யாழ்ப்பாணம். செப். 1

வேலணை பிரதேசத்தில் உள்ள கட்டாக்காலி மாடுகளைப் பிடிப்பது என்று வேலணைப் பிரதேச சபையில் நேற்றுமுன்தினம் ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. வேலணைப் பிரதேச சபையின் அமர்வு உப தவிசாளர் பொ.நடனசிகாமணி தலைமையில் சபை மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. செயலாளர் கட்டாக்காலி மாடுகளைப் பிடிக்கும் அதிகாரம் தொடர்பில் தெரிவித்தார்.

வேலணைப் பிரதேச செயலகத்தால் கட்டாக் காலிகளைப் பிடிப்பது தொடர்பில் சபைக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. பயிர் நிலங்களைப் பாதுகாக்கும் நோக்கிலும், பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படாதவாறு இருக்கும் நோக்கிலும் கட்டாக்காலி மாடுகளைப் பிடிக்க வேண்டும் என்று பிரதேச சபைச் செயலர் அதன்போது தெரிவித்தார்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த அங்கத்தவர்கள், ஆரம்பத்தில் வேலணைப் பிரதேசத்தில் 38 ஆயிரம் மாடுகள் இருந்தன.

அவற்றில் 33 ஆயிரம் மாடுகளுக்கு என்ன நடந்தது என்று தெரியவில்லை. தற்போது சுமார் 5 ஆயிரம் மாடுகளே உள்ளன. அவை யும் கடத்தப்பட்டு இறைச்சிக்காக விற்கப்படுகின்றன.

கட்டாக்காலி மாடுகளால் பயிர் நிலங்களும் சேதமாக்கப்படுகின்றன. அதிக வயல் நிலங்கள் உள்ளன. அவை மீண்டும் பாவனைக்கு வர வேண்டும். பயிரிடப்பட வேண்டும் என்றனர்.

கட்டாக்காலி மாடுகள் பிடிக்கப்பட வேண்டும். மாடுகளைப் பிடிப்பது தொடர்பில் மக்களுக்குச் சுவரொட்டிகள் மற்றும் ஒலி பெருக்கி மூலமாக அறிவிக்கப்பட வேண்டும். மக்களுக்குச் சொந்தமான மாடுகளைக் கட்டி வளர்க்க வேண்டும். மேய்ச்சலுக்கு விட்டால் அவை மீண்டும் வீட்டுக்கு வருகின்றனவா என்று பார்க்கவேண்டும். இது தொடர்பில் மக்களுக்கு முதலில் அறியத்தரப்பட்டுப் பின்னர் மாடுகளைப் பிடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். 30 கிராம அலுவலர் பிரிவிலுள்ள பொது அமைப்புகளின் ஒத்துழைப்புப் பெறப்பட வேண்டும். ஆகவே இந்த நடவடிக்கை தொடர்பில் மக்களுக்கு அறிவிக்கப்பட்டுப் பின்னர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தெரிவித்து ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

### கடல் அட்டை பண்ணைகள்

வேலணைப் பிரதேச சபைக்கு உட்பட்ட பிரதேசத்தில் சபை அனுமதி பெறாது மேற்கொள்ளப்படும் கடலட்டைப் பண்ணைகளை இடை நிறுத்துவது என்று சபை அமர்வில் தீர்மானம் நிறைவே ற்றப்பட்டது.

வேலணைப் பிரதேச மக்கள் அநேகமானவர்கள் கடல் வளத்தை நம்பி வாழ்கின்றனர். சிறுதொழில் செய்வோர் அநேகமானவர்கள் உள்ளனர். அவர்களின் வாழ்வாதா ரத்தைப் பாதிக்காத வகையிலும் அவர்களுக்குத் தொழில் வாய்ப்பை வழங்கும் வகையில் கடலட்டைப் பண்ணை வளர்ப்புகள் அமைய வேண்டும். ஆனால் இங்கு 6 க்கும் மேற்பட்ட பண்ணைகள் உள்ளன. சபையின் அனுமதியுடன் ஒரே ஒரு பண்ணை மாத்திரம் இயங்குகின்றது. அனுமதிபெறாது நடக்கும் கடல் அட்டைப் பண்ணைகளை நிரந்தரமாக நிறுத்துவது என்று தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

### வீதி விளக்கு பொருத்துதல்

வேலணைப் பிரதேச சபைக்கு உட்பட்ட வட்டாரங்களில் வீதிகளில் 219 மின் விளக்குகள் பொருத்துவதற்கு சபையில் கடந்த அமர்வுகளில் தீர்மானிக்கப்பட்டது.

மாகாண குறித்தொதுக்கப் பட்ட நிதி, சபை நிதி, பிரமாண அடிப்படையிலான நிதி என்பனவற்றின் மூலமாக வீதிகளில் மின் விளக்குகள் கொள்வனவு செய்யப்பட்டன. அதனைப்பொருத்துவதற்கு மின்சார சபையுடன் இணைக்கப்பாடு மேற்கொள்ளப்பட்டது. ஆனால் ஒருசில வட்டாரங்களுக்கு மாத்திரம் அண்மையில் மின் விளக்குகள் பொருத்தப்பட்டன. ஏனைய வட்டாரங்களுக்கு ஏன் மின் விளக்குகள்பொருத்தப்படவில்லையே என்று உறுப்பினர்கள் சபையில் கேள்வி எழுப்பினர். மின்சார சபை 40 மின் குமிழ் வீதம் கட்டம் கட்டமாக மின்விளக்குகளைப் பொருத்துகின்றது. ஏற்கனவே பொருத்தப்பட்ட இடத்திலுள்ள ஆலயத்தில் திருவிழா இடம் பெறுவதால்தான் அங்கு உடனே மின்விளக்குகள் பொருத்தினோம் என்று சபைச் செயலாளர் பதிலளித்தார்.

தமது வட்டாரங்களுக்கும் இவ்வாறு மின் விளக்குகள் பொருத்தபட வேண்டும். வேறு வட்டாரத்தில் மின்குமிழ் பொருத்தப்படும்போது ஏன் ஏனைய வட்டாரங்களில் பொருத்த முடியாது? கட்சிபேதம் பார்த்துச் சிலர் நடந்து கொள்கின்றனர் என்று உறுப்பினர்கள் சிலர் குற்றஞ்சாட்டி செயலாளர் மற்றும் உப தவிசாளருடன் தர்க்கத்தில் ஈடுபட்டனர். (4,7)



## சிறுவர் கழக உறுப்பினர்களுக்கு முதலுதவிப் பயிற்சி வழங்கல்

சாவகச்சேரி, செப். 1

தென்மராட்சிப் பிரதேச சிறுவர் கழகங்களின் உறுப்பினர்களுக்கான முதலுதவிப் பயிற்சிகள் பிரதேச செயலக மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

கொழும்பு சிறுவர் நன்னடத்தை பராமரிப்பு சேவைத் திணைக்களத்தின் அனுசரணையுடன் தென்மராட்சி பிரதேச சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அலகினர் பயிற்சிகளை ஏற்பாடு செய்திருந்தனர்.

சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அலகினர் மற்றும் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கப் பணியாளர்கள் பயிற்சிகளை வழங்கினர். பயிற்சி வகுப்பில் பிரதேச சிறுவர் கழகங்களைச் சேர்ந்த 50 சிறுவர்கள் கலந்துகொண்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (4,9)



அரசதலைவர் நடமாடும் சேவை, வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகத்தில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது. உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் ஏற்பாட்டில் இடம்பெற்றது. மரம்நாட்டல் இலவச விவாகப்பதிவு, வலுவிழந்தோருக்கான உதவிகள் குருதிக்கொடை, வாகனப் புகைப் பரிசோதனை என்று பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்கு உடனடித்தீர்வு பெற்றுக் கொடுக்கப்பட்டது. (4,70)



## ஆயுள்வேத வைத்தியசாலைக்கு கீரிமலையில் அடிக்கல்

யாழ்ப்பாணம், செப். 1

யாழ்ப்பாணம் காங்கேசன்துறை கீரிமலை கருகம்பனைப் பகுதியில் அமைக்கப்படவுள்ள ஆயுள்வேத வைத்தியசாலைக்கு அடிக்கல் நடும் நிகழ்வு சில நாள்களுக்கு முன்னர் இடம்பெற்றது. வடக்கு மாகாண சுதேசசுகாதாரத் திணைக்களத்தின் 15மில்லியன் ரூபா நிதியில் 6மாதங்களில் இந்த ஆயுர்வேத வைத்தியசாலை அமைக்கப்படவுள்ளது.

அடிக்கல் நடும் நிகழ்வில் வலி.வடக்குப் பிரதேச சபைத் தவிசாள்ளர் சோ.சுகிர்தன், கீரிமலை கிராம அபிவிருத்திச் சங்கத்தினர், கருகம்பனை தமிழ் மன்ற சனசமூக நிலையத்தினர், கருகம்பனை இந்து இளைஞர் சங்கத்தினர் மற்றும் மகளிர் அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (4.114)

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பிரதேச செயலக உத்தியோகத்தர் நலன்புரிச் சங்கத்தினரால் தையல் பயிற்சி நடத்தப்பட்டுவருகின்றது. ஈடுபடுவோருக்கு பயிற்சி வழங்கி வருகின்றனர். தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகார சபையின் ஏற்பாட்டில் பிரதேச செயலகத்தில் இது இடம்பெற்று வருகின்றது. 5 நாள் தையல் இயந்திரம் திருத்தும் பயிற்சி நெறியில் பயிற்சியாளர்கள் ஈடுபட்டுள்ளனர். (173)



## கொழும்பு இராமகிருஷ்ண மிசனரிக்குப் புதிய தலைவர்

2007சித்திரை மாதம் முதல் 2018ஆடிமாதம் வரைசுமார் 11 வருடங்கள் கொழும்பு இராமகிருஷ்ண மிசனரி இலங்கைக் கிளையின் தலைவராக இருந்த சிறிமத்சுவாமி சர்வரூபானந்தர் சேவையிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார். அவர் தனது இறுதிக் காலத்தை ஆன்மீக சாதனைகளில் ஈடுபடுத்துவதற்காக காசியிலுள்ள இராமகிருஷ்ண பீடத்துக்குச் செல்கின்றார் என்று தெரிவிக்கப்பட்டது.

இவரது காலத்திலேயே யாழ்ப்பாணத்துக்கான கிளையும், கிளிநொச்சி, விசுவமடு போன்ற பகுதிகளின் சுவாமி விவேகானந் தர் நலன்புரி நிலையம் கல்வி நிலையம் என்பன ஆரம்பிக்கப்பட்டன என்று மிஷன் அறிவித்துள்ளது.

போர் முடிவடைந்ததும் யாழ்ப்பாணத்திலும் வவுனியாவிலும் முதன் முதலாகவும் பெரியளவிலான நிவாரணப்பணி நடத்தப்பட்டது. மண்சரிவுகளால் பாதிக்கப்பட்ட மலையகத்திலும் நிவாரணப் பணி வீட்டுத்திட்டம் வழங்கல் என்பன நடைபெற்றன. மட்டக்களப்பிலும் சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்கான நவீன வீடுகள் வழங்கப்பட்டன. போரால் பாதிக்கப்பட்ட வன்னி மாணவர்கள் பலருக்கு 2009முதல் தற்போது வரை கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டு வருகின்றது என்றும் தெரிவிக்கப்பட்டது.

அவருக்கான பிரியாவிடை யும் புதிய தலைவரான சிறிபத்சுவாமி அக்சராத்மானந்தர் சுவாமியாருக்கான வரவேற்பும் கடந்த 5 ஆம் திகதி கொழும்பு இராமகிருஷ்ண மிசனரியில் எளிமையாக நடைபெற்றன.

கொழும்பு இராமகிருஷ்ண மிசனரியின் புதிய தலைவராக சிறிபத்சுவாமி அக்சராத்மானந்தர் கடந்த மாதம் 27ஆம் திகதி தொடக்கம் குரு பூர்ணிமா தினத்தில் பணிகளைப் பொறுப்பேற்றுள்ளார். இவர் யாழ்ப்பாணத்தைப்பிறப்பிடமாகக்கொண்டதுடன் கொழும்பு மொரட்டுவ பல்கலைக்கழகப் பொறியியல் பட்டதாரியுமாவார். (4)



மீசாலை வடக்கு கொடிகாமம் இராமாவில் கந்தசுவாமி ஆலய குடமுழுக்கு நேற்றுக் காலை 6 மணிக்கு நடைபெற்றது. (159)



## விளையாட்டு கழக அரங்குக்கு அடிக்கல்

கிளிநொச்சி, செப் 1

கரைச்சி கணேசபுரம் வட்டாரத்தின் ஜெயந்தி நகர் கிராமத்தின் விளையாட்டுக் கழகத்துக்கான அரங்கு அமைப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

விளையாட்டுக் கழகத் தலைவர் அப்பன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் கரைச்சிப் பிரதேச சபையின் தவிசாளர் அ.வேழமாலிகிதன் பிரதேச சபையின் உறுப்பினர் ப.குமாரசிங்கம், கிராம அலுவலகர், பொருளாதார உத்தியோகத்தர் மற்றும் சனசமூக நிலைய உத்தியோகத்தர், கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர், விளையாட்டுக் கழக உறுப்பினர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த விளையாட்டுக் கழகத்தில் பார்வையாளர் அரங்கினை அமைப்பதற்கான முதலாம் கட்ட நிதியாக ரூபா ஒரு மில்லியனை விளையாட்டுத்துறை அமைச்சிடமிருந்து நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் பெற்றுக்கொடுத்தார்.



## மூக்குக்கண்ணாடிகள் வழங்கல்

கிளிநொச்சி, செப். 1

கரைச்சிப்பிரதேச மக்களுக்கு மூக்குக்கண்ணாடிகள் வழங்கும் நிகழ்வு கடந்த புதன்கிழமை மக்கள் நலன் காப்பகப் பணிமனையில் இடம்பெற்றது.

இதன்போது பயனாளிகள் 100 பேருக்கு மூக்கு கண்ணாடிகள் வழங்கப்பட்டது.

ஈசிமிசன் சபையின் ஏற்பாட்டில் இடம்பெற்ற நிகழ்வில் மங்கள விளக்கினை ஈசிமிசன் சபையின் முதன்மைக் குரு.பி.என்.ராஜசிங்கம், மக்கள் நலன் காப்பக நிர்வாக இணைப்பாளர் கர்த்தகன் ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

அதனை தொடர்ந்து போரில் உயிர்நீத்த உறவுகளுக்கு 2 நிமிட அகவணக்கம் செலுத்தப்பட்டது.

நிகழ்வில் வரவேற்புரை மக்கள் நலன் காப்பக வவுனியா மாவட்ட இணைப்பாளர் டொனா, சிறப்புரை ஈசிமிசன் சபையின் முதன்மைக் குரு பி.என்.ராஜசிங்கம், விளக்கவுரை மக்கள் நலன் காப்பக நிர்வாக இணைப்பாளர் கர்த்தகன் ஆகியோர் ஆற்றினர்.

(222)



## குடிதண்ணீர் வழங்கல், பூங்கா அமைப்பதற்கான ஆரம்ப நிகழ்வு

கிளிநொச்சி,செப் 1

கிளிநொச்சி மாவட்ட கரைச்சி பிரதேச உருத்திரபுரம் கிராமத்தின் இளைஞர் கழகத்தினால் மக்களுக்கான குடிதண்ணீர் வழங்கல் மற்றும் பொழுதுபோக்கு பூங்கா அமைப்பதற்கான ஆரம்ப நிகழ்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் “யூத் வித் ரலன்ட்”வேலைத்திட்டத்தின் கீழ் பூங்கா அமைப்பதற்கான ஆரம்ப நிகழ்வு இடம்பெற்றது.

நிகழ்வில் பிரதேச சபை உறுப்பினர் , கிளிநொச்சி மாவட்ட இளைஞர் சேவைகள் உத்தியோகத்தர், கரைச்சி பிரதேச இளைஞர் சேவைகள் உத்தியோகத்தர், சமூர்த்தி உத்தியோகத்தர், கிராம அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள், உருத்திரபுரம் விளையாட்டு கழகத்தினர், உருத்திரபுரம் இளைஞர் கழக உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

### மகப்பேற்று மருத்துவ நிபுணரை நியமிக்குமாறு

# கர்ப்பவதிகள் போராட்டம்

கிளிநொச்சி, செப் 1

கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனைக்கு மகப்பேற்று மருத்துவ நிபுணரை நியமிக்குமாறு கோரி கர்ப்பவதிகள் மருத்துவமனை முன்பாக போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனை நோயாளர் நலன்புரிச் சங்கம் இந்த போராட்டத்தை ஏற்பாடு செய்தது.



கிளிநாச்சி பொது மருத்துவமனை வளாகத்திலிருந்து முதன்மை வாயில்வரை பேரணியாக சென்ற போராட்டக்காரர்கள் முதன்மை வாயிலில் கவனயீர்ப்பில் ஈடுபட்டனர்.

கிளிநொச்சி மருத்துவமனையில் கடந்த ஒரு மாத காலமாக மகப்பேற்றியல் மற்றும் பெண்ணோயியல் சிறப்பு மருத்துவநிபுணர் இல்லாத நிலையில் கர்ப்பவதிகள் கையறு நிலையில் விடப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் குறித்த மருத்துவமனைக்கு இதுவரை எவரும் நிரந்தரமாக நியமிக்கப்படாதமையால் பெரும் சிரமங்களை கற்பிணிதாய்மார் தொடர்ச்சியாக எதிர்நோக்கி வருகின்றனர். ஆகையால் அதனை வலியுறுத்துவதற்காகவே இக்கவனயீர்ப்பு போராட்டத்தை மேற்கொள்ளப்பட்டதாக போராட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

பெண்நோயியல் மத்திய மருத்துவமனையாக தீர்மானிக்கப்பட்ட நிலையில் நீங்கள் செய்வது சரியா? சுகாதார அமைச்சே உயரதிகாரிகளின் பாரபட்சத்தை வன்மையாக கண்டிக்கின்றோம், மத்திய அரசே கிளிநொச்சி மக்களின் வறுமையை உங்களால் அறிய முடியுமா? போன்ற பதாகைகளைத் தாங்கியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இது குறித்து மத்திய சுகாதார அமைச்சின் அதிகாரிகள் வட்டாரம் தெரிவித்ததாவது:

கடந்த இரண்டு மாதகாலத்தினுள் கற்கைநெறிகளைப் பூர்த்திசெய்த 4 மகப்பேற்றியல் நிபுணர்களில் மூவர் பருத்தித்துறை, முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களுக்கு நியமிக்கப்பட்டனர்.

அவ்வாறு நியமிக்கப்பட்ட நிபுணருடன் சேர்த்து கிளிநொச்சி மருத்துவமனையில் மொத்த மகப்பேற்றியல் நிபுணர்கள் எண்ணிக்கை 03 ஆக காணப்பட்டது. இது அனுமதிக்கப்பட்ட ஆளணிக்கு (02) மேலதிகமாகும்.

அந்த நிலையில் மகப்பேற்றியல் நிபுணர்களது மீள்சுழற்சி இடமாற்றத்தில் பொலநறுவ மாவட்டத்திற்கு செல்லவேண்டிய மகப்பேற்றியல் நிபுணரை உடனடியாக விடுவிக்குமாறும் அவ்வாறு விடுவித்தால் மட்டுமே சுகாதார அமைச்சினால் பதிலீடாக ஒரு மகப்பேற்றியல் நிபுணரை கிளிநொச்சிக்கு நியமிக்கமுடியும் எனவும் வடமாகாண சுகாதார அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டது.

ஆனால் அந்த ஆலோசனைகள் புறக்கணிக்கப்பட்டு மூன்று மகப்பேற்றியல் நிபுணர்கள் தொடர்ந்தும் கிளிநொச்சியில் சேவையில் இருந்ததாலேயே தற்போதைய குழப்ப நிலை நேரிட்டது. இதற்கான முழுப் பொறுப்பும் மாகாண மற்றும் மாவட்ட சுகாதாரத் துறையையே சாரும் எனத் தெரிவிக்கப்பட்டது.

மேலும் இந்த வாரம் வெளிநாட்டுக் கற்கையை பூர்த்தி செய்து நாடு திரும்பியுள்ள ஒரு மகப்பேற்றியல் நிபுணரை கிளிநொச்சிக்கு நியமிக்க அமைச்சு ஏற்கெனவே நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதன் போது மாகாண சுகாதார அமைச்சர் ஞா.குணசீலனிடம் கோரிக்கை அடங்கிய மனு ஒன்றும் கையளிக்கப்பட்டது.

(35, 214)

## பத்து இலட்சம் பெறுமதியான வாழ்வாதார உதவிகள் வழங்கல்

வவுனியா, செப் 1

வவுனியாவில் வறுமைக்கோட்டிற்கு உட்பட்ட 43 பேருக்கு வாழ்வாதார உதவிப்பொருள்கள் நேற்று வழங்கி வைக்கபட்டது.

மாகாணசபை உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதனின் மாகாணகுறித்தொதுக்கபட்ட நிதியின் கீழ் இந்த உதவித் திட்டம் வவுனியா கோவிற்குளத்தில் உள்ள அவரது அலுவலகத்தில் வைத்து வழங்கப்பட்டது.

அதன்படி 2 இலட்சத்து 38 ஆயிரம் ரூபா பெறுமதியான 9 தண்ணீர் இறைக்கும் இயந்திரங்கள், 3 இலட்சத்து 90 ஆயிரம் பெறுமதியான 15 தையல் இயந்திரங்கள், 2 இலட்சத்தி 10 ஆயிரம் பெறுமதியான14 ஈருருளிகள் மற்றும் 2 இலட்சம் பெறுமதியான கட்டடபொருள்கள் என மொத்தம் 10 இலட்சத்து 38 ஆயிரம் பெறுமதியான பொருள்கள் வழங்கிவைக்கபட்டன.

குறித்த நிகழ்வில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாலசந்திரன்,நகர சபை உறுப்பினர்களான க.சந்திரகுலசிங்கம், பிரதேசசபை உறுப்பினர்களான க.ஜெகதீஸ்வரன், யோகராசா, குகதாசன் சுயீவன், பரிகரன், முச்சக்கரவண்டி உரிமையாளர் சங்கதலைவர் ரவீந்திரன், தனியார் பேருந்துஉரிமையாளர் சங்கதலைவர் ரஞ்சன், என பலரும் கலந்துகொண்டனர்

நிகழ்வில் மாகாணசபை உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன் கருத்து தெரிவித்ததாவது:

போரினால் பாதிக்கப்பட்ட பகுதியாக வடமாகாணம் இருக்கிறது. அதிலிருந்து மீளமுடியாத, பல குடும்பங்கள் இன்றும் இருக்கின்றன. அவர்களுக்கான தேவைகள் அதிகமாக இருக்கின்றன. எனவே எங்களால் வழங்கபடும் உதவிதிட்டங்களை நீங்கள் சரியான முறையில் பயன்படுத்தவேண்டும்.



எங்களுக்கு மாகாண சபையால் 60 இலட்சம் ரூபா மாத்திரமே ஒதுக்க படுகின்றது. வவுனியாவை பொறுத்தவரை அது பற்றாகுறையாக உள்ளது. 500 க்கு மேற்பட்ட கிராமங்கள் இங்கு இருக்கிறது. எனினும் மாகாணசபையால் பல வேலைத்திட்டங்களை செய்திருக்கின்றோம்.

பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் ஒவ்வொரு பிரதேச செயலகங்களுக்கும் பல்வேறு வேலைதிட்டங்களுக்காக 200 மில்லியன் ரூபா ஒதுக்கபடவிருக்கிறது.

அதன்படி வவுனியா வடக்குபிரதேசத்திலே அதற்கான திட்டஅறிக்கைகள் சமர்பிக்கபட்டிருக்கிறது.

அதன்படி பூர்வீகதமிழ் கிராமமான வெடிவைத்தகல் கிராம அலுவலகர் பிரிவிற்குட்பட்ட, புதிதாக குடியேற்றம் செய்யபட்ட போகஸ்வெவ,கம்பிளிவெவ என்ற இரண்டுசிங்களகிராமங்களுக்கும் மதவிடயங்களை அபிவிருத்திசெய்யும் திட்டத்திற்கூடாக தர்மபாசல( அறநெறிபடாசாலை) அமைப்பதற்காக இரண்டு மில்லியன் ரூபாய் ஒதுக்கபட்டுள்ளது.

போரினால் பெரிதும்பாதிக்கபட்ட பல இந்துக்கோவில்கள் இருக்கும்போது ஒரேயொரு இந்துகோவிலே தெரிவு செய்யப்பபட்டது.

இது அநீதியானசெயற்பாடகவுள்ளதுடன் குறித்ததிட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்படும் வேலைதிட்டங்களுக்கு மக்கள் பிரதிநிகள் அழைக்க படவேண்டியநிலையில் என்னை அழைத்திருக்கவில்லை.

இந்நிலையிலேயே நான் கடந்த வவுனியா வடக்கு பிரதேச ஒழுங்கிணைப்பு குழு கூட்டத்தில்இருந்து வெளிநடப்பு செய்திருந்தேன்.

என்னை அழைத்திருந்தால் குறித்த விடயம் தொடர்பாக சுட்டிகாட்டியிருந்திருப்பேன் - என்றார்.

(110)

# மக்கள் எங்களை மீண்டும் தெரிவு செய்வார்களா?

## மாகாணசபை உறுப்பினர்களுக்கு வந்த சந்தேகம்

– சபைச் செய்தியாளர்

அமைச்சரவை விவகாரத்தில் வடக்கு மாகாண அபிவிருத்திப் பணிகள் முடங்கிப் போயுள்ளது. அமைச்சரவை விவகாரத்தை தீர்க்கவேண்டியவர்கள் அதனைச் செய்யவில்லை. தன்முனைப்புக் காரணமாக இந்த விடயங்களை அவர்கள் சீர் செய்யவில்லை. இந்த நிலையில், மாகாணசபைக்கு மக்கள் எங்களை மீண்டும் தெரிவு செய்வார்களா? இப்படி மாகாணசபை உறுப்பினர்கள் சபையில் கேள்வி எழுப்பினார்கள்.

வடக்கு மாகாணசபையின் 130ஆவது அமர்வு நேற்றுமுன்தினம் வியாழக் கிழமை கைதடியிலுள்ள பேரவைச் செயலகத்தில் காலை 9.42 மணிக்கு ஆரம்பமானது.

அவைத் தலைவர் அறிவிப்பிலேயே, மாகாணசபையின் சிறப்புரிமை விடயத்தை முன்வைத்தார். வழக்கமாக உறுப்பினர்கள் தங்களின் சிறப்புரிமை மீறப்பட்டதாகவே குற்றச்சாட்டுக்களை முன்வைப்பார்கள். வழக்கத்துக்கு மாறாக மாகாணசபை உறுப்பினர் அனந்தி சசிதரனால் மாகாணசபையின் சிறப்புரிமை மீறப்பட்டுள்ளதாக அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம், அனந்தியை ஒரு வாங்கு வாங்கினார். பாவம் அவர் அந்த நேரம் சபையில் இருக்கவில்லை.

வடக்கு அமைச்சரவை தொடர்பில் ஆளும் கட்சி உறுப்பினர் அ.பரஞ்சோதி, முதலமைச்சர் விக்னேஸ்வரனிடம் கேள்வி எழுப்பியிருந்தார். வடக்கு மாகாண முதலமைச்சர் சபை அமர்வை 'கட்அடித்ததால்' அதிலிருந்து தப்பித்துக் கொண்டார். தவிர்க்க முடியாத வேறு ஒரு நிகழ்வு இருப்பதால் பங்கேற்க முடியவில்லை என்றும் தன்னிடம் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு அடுத்த அமர்வில் பதிலளிப்பதாகவும் அவைத் தலைவருக்கு கடிதம் அனுப்பியிருந்தார்.

சர்சைக்குரிய காற்றாலை விவகாரத்தை சபை அமர்வில் எடுக்கவேண்டாம் என்று முதலமைச்சர் எழுதிய கடிதம், அதற்கு தான் அனுப்பிய பதில் கடிதம், சபை நடவடிக்கைக் குழு எடுத்த முடிவுகளை விலாவாரியாக சபைக்குத் தெரியப்படுத்தினார் அவைத் தலைவர்.

நிகழ்சி நிரல் ஒழுங்கின் அடிப்படையில் வடக்கு மாகாண வீடமைப்பு அதிகார சபை நியதிச் சட்டம் சமர்ப்பிப்பதற்கு அறிவிக்கப்பட்டது. முதலமைச்சரின் அமைச்சுக்குரிய நியதிச் சட்டம். முதலமைச்சர் சபை அமர்வில் பங்கேற்காததால் தன் சார்பில் கல்வி அமைச்சர் சர்வேஸ்வரனை முதலாம் வாசிப்புக்கு முன்மொழியக் கூறியிருந்தார். அவைத் தலைவரும் அந்த அறிவிப்பை சபையில் செய்தார். சுருக்கென்று எழுந்த எதிர்க்கட்சித் தலைவர் தவராசா, முதலமைச்சருக்குப் பதிலாக அமைச்சர் ஒருவரே அதனைச் சபையில் முன்மொழியலாம் என்று அமைச்சர் சபையின் குழப்பத்தை தொடக்கி விட்டார்.

சர்சைக்குள் சிக்காமல் நானே அதனை முன்மொழிகின்றேன் என்று அவைத் தலைவர் கூற, சபையில் ஏற்கனவே நிறைவேற்றிய தீர்மானத்தை மீறப் போகின்றீர்களா என்று எதிர்க்கட்சித் தலைவர் கேள்வி எழுப்பி அவைத் தலைவரையும் குழப்பிவிட்டார்.

ஆளுநர் அமைச்சரவை கூட்டக்கூடாது என்றுதானே அறிவித்திருக்கின்றார். அமைச்சர்களாக யாரையும் இயங்கவேண்டாம் என்று அறிவிக்கவில்லையே? அமைச்சர்களாக 6 பேர் இருக்கின்றார்கள். இவர்களை இயங்க வேண்டாம் என்று வாக்காளன் ஒருவன் மாவட்ட நீதிமன்றில் இடைக்காலத் தடை பெற்றிருக்க முடியும். அவ்வாறு எதுவும் நடக்கவில்லை. எனவே சர்வேஸ்வரன் முன்மொழியலாம் என்று சிவாஜிலிங்கம் தெரிவித்தார். மாவட்ட நீதிமன்றில் இன்னும் ஒருவரும் வழக்குத் தாக்கல் செய்யவில்லை என்ற ஆதங்கத்தில் கூறினாரா அல்லது சர்வேஸ்வரன் முன்மொழிவதற்கு ஆதரவாகக் கருத்துத் தெரிவித்தாரா என்பது புதிராகவே இருக்கின்றது.

அவைத் தலைவர் மீண்டும் பழைய புராணத்தை தொடங்கினார். சபை இக்கட்டில் இருக்கின்றது என்பதில் தொடங்கி அரசமைப்பின் 154 எவ் வரையில் மீண்டும் விளக்கம் கொடுத்தார். அமைச்சரவையைக் கூட்ட வேண்டாம் என்று ஆளுநர் அறிவித்துள்ளதாக அறிகின்றேனே தவிர சபைக்கு அது தொடர்பில்ஆளுநரோ.தலைமைச்செயலரோ உத்தியோகபூர்வமாகத் தெரிவிக்கவில்லை என்றார். மாகாணசபைக்குத் தெரியாமல் எல்லாம் செய்து கொண்டிருக்கின்றார்கள் என்ற அவரது குற்றச்சாட்டுக்கு இந்த விடயமும் மேலும் ஒரு ஆதாரமாகியது.

அமைச்சரவை விவகாரம் தொடர்ந்து 4ஆவது தடவையாகவும் சபைஅமர்வில் சர்ச்சையைக் கிளப்பிக் கொண்டிருந்தது. உறுப்பினர்கள் சளைக்காமல் கருத்துக்களை அள்ளிவீசிக் கொண்டிருந்தனர்.

'ஒரு சிலரின் தன்முனைப்பு (ஈகோ) பிரச்சினை வடக்கு மாகாண மக்களின் அபிவிருத்திப் பணிகளை தேக்கமடையச் செய்துள்ளது. இது ஆரோக்கியமானதா? இப்படியொரு அரசியல் எங்களுக்குத் தேவையா? அமைச்சர் சபை கூடாததால் அவர்களின் அனுமதி பெறவேண்டிய வேலைகள் கிடப்பில் இருக்கக் கூடும். மக்களுக்கு என்ன பதில் சொல்லப் போகின்றோம். அமைச்சர் சபை கூடாத சந்தர்ப்பத்தில் மாகாணசபை கூடவேண்டுமா? காலத்தை ஏன் வீணடிக்க வேண்டும்? இதற்கு யார் பொறுப்பு? மக்கள் நாங்கள் பதவிகளைப் பெற்றுக் கொள்ளவா தெரிவு செய்தார்கள்? அல்லது தங்களுக்கு (மக்களுக்கு) சேவை செய்யவா? மாகாண சபைக் காலம் முடிவடைகின்றது. நாங்கள் திருப்பவும் இந்தப் பதவிகளுக்காக அடிபடப் போகின்றோமா? அல்லது மக்கள் எங்களை மீண்டும் தெரிவு செய்வார்களா?' இவ்வாறு அடுக்கடுக்காக கேள்விகளை முன்வைத்தார் ஆளும் கட்சி உறுப்பினர் சுகிர்தன்.

அமைச்சரவை விவகாரம் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைதான் என்று கூறிய அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம், ஒரு வேளை அடுத்த தேர்தலிலே மக்கள் விழித்துக் கொள்வார்கள் என்று நான் எதிர்பார்க்கின்றேன் என்றார்.

சிக்கலான நேரங்களில் புத்திசாலித்தனமான (ஸ்மார்ட்) தலைமைத்துவம் தேவை. அதனை அவைத் தலைவர் எடுக்க வேண்டும் என்றார் அஸ்மின். அவைத்தலைவரோ சிரித்துக் கொண்டு நான் அப்படித்தான் செயற்படுகின்றேன். இதனால்தான் சமரசப் பாதையை தேர்ந்தெடுத்து நடந்துகொண்டிருக்கின்றேன். சம்பந்தன் ஐயாவும் அதனைத்தான் செய்கின்றார் என்பதை நம்புகின்றேன் என்று நழுவினார். அஸ்மினோ விடுவதாக இல்லை. ஆளுநருக்கு அமைச்சர்களின் பெயரை பரிந்துரைக்கக் கூடிய ஒருவரை முதலமைச்சராக்குவோம். அதற்குரிய தீர்மானத்தைக் கொண்டு வாருங்கள் என்று அவைத் தலைவரின் பக்கம் பந்தைப் போட்டார். அவைத் தலைவர் நாசூக்காக நழுவ முற்பட, நீங்கள் ஏன் தயங்குகின்றீர்கள் என்று அவைத் தலைவரை வலிந்து இழுத்தார் அஸ்மின்.

நியதிச் சட்ட முன்மொழிவை அடுத்த அமர்வு வரையில் ஒத்திவைப்போம். அதற்கிடையில் அமைச்சரவைப் பிரச்சினை சரிவரலாம் என்று ஆரூடம் கூறினார் அவைத் தலைவர். ஆனாலும் ஆளும் கட்சி உறுப்பினர்கள் இந்த விடயத்தை விடுவதாக இல்லை. விவாதம் நீண்டு செல்லும்போது வழக்கம்போல மூக்கை நுழைத்தார் எதிர்க்கட்சி உறுப்பினர் தவநாதன். அமைச்சர் சபை தொடர்பில் நடத்தப்பட்ட விசாரணை அறிக்கை முடிவுகளை மறைந்துபோகச் செய்யும் வகையில் தான் நிறையச் சம்பவங்கள் தற்போது நடந்து கொண்டிருக்கின்றன. அமைச்சரவை விவகாரத்தை சரி செய்யவேண்டியது ஆளும் கட்சி. உங்களின் கட்சித் தலைவரும், முதலமைச்சரைப் போன்று அமைதியாக இருக்கின்றார். உங்கள் கட்சிக்குள் இந்தப் பிரச்சினை தீர்க்கப்பட்டத்தான் சிக்கல் சரியாகும். 154 எவ் பற்றி கதைத்து ஒன்றும் ஆகப்போவதில்லை என்று ஆளும் கட்சி கிடைத்த 'கப்பில்' சரமாரியாக தாக்குதல் நடத்தினார். சிறிது நேரம் ஆளும் கட்சிப் பக்கத்திலிருந்து எதிர்ப்பு வரவில்லை. அதனால் ஏறிக் குதித்து ஓடிக் கொண்டிருந்தார் தவநாதன். அவரது உரைக்கு சடுதியாக 'பிரேக்' போடுவதைப்போல், நாங்கள் முதலமைச்சர் விக்னேஸ்வரன் கையில் இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக அதிகாரத்தைக் கொடுத்துள்ளோம் என்று ஆளும் கட்சி உறுப்பினர் பரஞ்சோதி கருத்துத் தெரிவித்தார். அவருக்கு அதிகாரம் கொடுத்து அவர் செய்யவில்லை என்றால் அதனை நீங்கள் திரும்ப எடுங்கள் என்றார் தவநாதன். அதனை நீங்கள் சொல்லிச் செய்யவேண்டியதில்லை என்றார் பரஞ்சோதி.

அந்தக் கருத்தை தனக்குச் சாதமாக்கி, அப்படியானால் அவரையே அடுத்த முதலமைச்சராக்குவது போன்று கதைக்கின்றீர்கள் என்று தவநாதன் கூற, அது வேறு விடயம் என்று உச்சதொனியில் கூறினார் பரஞ்சோதி. ஆளும் கட்சியின் தலைவர் முதலமைச்சர். அவர்தான் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மீண்டும் கூறி விடயத்தை முடித்தார் பரஞ்சோதி.

'அமைச்சர் சபை பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உங்களுக்கு எவ்வளவு நேரம் தேவை' என்று அவைத் தலைவரிடம் வில்லங்கமாக கேள்வி எழுப்பினார் டெனீஸ்வரன். எனக்கு அதிகாரமில்லை. அதிகாரமுள்ளவர்கள் மனது வைத்தால் இந்தப் பிரச்சினையைத் தீர்க்க ஒரு நிமிடம் போதும் என்று சமயோசிதமாகப் பதிலளித்து தப்பித்துக் கொண்டார் அவைத் தலைவர் சிவஞானம்.

ஒருவாறாக அமைச்சரவைப் பிரச்சினை முடிவுக்கு வந்து அவைத் தலைவர் நியதிச் சட்டத்தை முன்மொழியும் நிலமை ஏற்பட்டது. எதிர்க்கட்சித் தலைவர் குறுக்கிட்டு, இந்த நியதிச் சட்டம் நிதியுடன் தொடர்புடையது. நிதியுடன் தொடர்புடைய நியதிச் சட்டங்களுக்கு ஆளுநரின் அனுமதி பெறப்படவேண்டும். அனுமதி பெறப்பட்டதா? என்று கேள்வி எழுப்ப, மறுபடியும் முதல்ல இருந்தா? என்ற வடிவேலுவின் வாசகம்தான் எல்லோருக்கும் நினைவில் வந்திருக்கவேண்டும். ஆனாலும் அவைத் தலைவர், இப்போது முதலாம் வாசிப்புக்கு முன்மொழிந்த பின்னர் அதனைப் பார்க்கலாம் என்று தெரிவித்து, அதனை முன்மொழிந்தசூட்டோடுதேநீர் இடைவேளைக்குச் சபையை ஒத்தி வைத்தார்.

சபை மீண்டும் ஆரம்பமானது பளைக் காற்றாலை விவகாரம் விவாதத்துக்கு வந்தது. மாகாணப் பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கை சமர்பிக்கப்பட்டது. பளைக் காற்றாலை விவகாரத்துடன் தொடர்புடைய முன்னாள் அமைச்சர் ஐங்கரநேசன், இந்த விடயத்தை இப்போது ஏன் விவாதத்துக்கு எடுக்கக் கூடாது என்பதற்கு விலாவாரியான காரணங்களை அடுக்கினார். ஆனாலும் விவாதம் நடந்தது. எதிர்க் கட்சித் தலைவர் நீண்ட உரை நிகழ்த்தினார். 2014ஆம் ஆண்டு இதே விடயத்தை சபையில் எழுப்பியபோது அமைச்சராக இருந்து ஐங்கரநேசன் கூறிய பதில்களிலிருந்தே கேள்விகளை எழுப்பினார். முதலமைச்சர் 20ஆண்டுகளுக்கு குத்தகைக்கு அனுமதித்திருக்கின்றார் என்று ஐங்கரநேசன் 2014ஆம் ஆண்டு கூறியதை முக்கிய ஆயுதமாக எடுத்தே விளாசித்தள்ளினார் எதிர்க்கட்சித் தலைவர் தவராசா. அவரின் உரையைத் தொடர்ந்து ஆளும் கட்சி உறுப்பினர் சயந்தன் தனது விவாதத்தை ஆரம்பித்தார். காற்றாலை விவகாரத்தில் ஐங்கரநேசன் எப்படி நுழைந்தார் என்பதை புடம்போட்டுக் காட்டினார். ஐங்கரநேசன் தொடர்பில் பல முறைப்பாடுகள் அறிந்துதான் இந்த முட்டை கூழாகி விட்டது என்று தூக்கி எறிந்து அந்த அமைச்சரவை மாற்றும்படி செய்தோம் என்று சயந்தன் ஐங்கர நேசனுக்குப் பதிலடி கொடுத்தார். (தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை கூழ் முட்டை என்று ஐங்கரநேசன் சில தினங்களுக்கு முன்னர் விமர்சித்திருந்தார்)

சயந்தனைத் தொடர்ந்து அஸ்மின் உரையாற்ற எழுந்தார். அஸ்மின் உரையாற்றுவதற்கு முன்னர் உறுப்பினர் சயந்தன் அவர் காதில் ஏதோ ஓதினார். ஐங்கரநேசன் மீது தனிப்பட்ட கோபம் எதுவுமில்லை என்ற பீடிகையுடன் தொடங்கி ஐங்கரநேசனை ஒரு வாங்கு வாங்கினார். இன்றைய அமைச்சரவைப் பிரச்சினையால் சபையில் எழுந்துள்ள சங்கட நிலமைக்கு பிள்ளையார் சுழிபோட்டது ஐங்கரநேசன்தான் என்று தொடங்கி, கடந்த காலங்களில் நடந்தவற்றை சபையில் கக்கினார்.

'தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒற்றுமையைக் குலைப்பதில் தொடங்கி, தமிழ்த் தேசியப் போராட்டத்தின் ஜனநாயக வழிமுறை போராட்டங்களை கடுமையாக விமர்சித்து அதில் எந்த நம்பிக்கை இல்லாத சூழலை ஏற்படுத்துவதும் தமிழ் மக்களும், முஸ்லிம் மக்களும் தமிழ் பேசுகின்ற மக்களாக ஒன்றிணைகின்ற சந்தர்பத்தை தவிர்ப்பதும், பன்னாட்டு விசாரணைகளில் போலியான குறுக்கீடுகளைக் கொண்டு வந்து அதனை நீர்த்துப் போகச் செய்வதும் போன்ற பல தோற்றப்பாடுகள் வெளியில் கடந்த 4 ஆண்டுகளாக தொடர்ந்து இடம்பெற்றது. அதனுடைய உள்நோக்கம், மக்களை எப்பொழுதும் உணர்ச்சியூட்டி, எட்டாக் கனியைக் காட்டி அதனை நோக்கி மக்களை திருப்பி வைத்துக் கொள்வதும், கீழே தாங்கள் விரும்பின எல்லா விடயங்களையும் நடைமுறைப்படுத்துவதுதான் அதனுடைய அடிப்படையான நோக்கம். எனவே மக்கள் ஒரு போதும் கேள்வி கேட்கமாட்டார்கள். என்ன நடப்பது என்று விசாரித்து அறிந்து கொள்ள மாட்டார்கள். மக்களுக்கு துன்பகரமான வாழ்க்கைக்குள்ளேயே போவார்கள். அதற்கிடையில் ஒரு தலைவரைக் கொண்டு வந்தோம் என்றால் உடன அவரைக் கடவுளாக்கி ஒரு அவதாரமாக்கி ஒரு எல்லைக்கு அவசரமாகக் கொண்டு சென்று சேர்த்தால் அவர் மனிதன் என்ற வகையில் என்னதான் தவறு செய்தாலும் விமர்சிக்க முடியாது. அவரை விமர்சித்தால் எங்கள் எல்லோரையும் துரோகிகளாக காட்டும் தோற்றப்பாடு நீண்டகாலமாக காட்டுப்பட்டது. சத்தியம் வெல்லும் என்ற அடிப்படையில் இன்று அது நடந்துள்ளது. வெளிப்படைத் தன்மையுடன் செயற்படாமல் மறைக்க முற்படுவதிலிருந்தே இது தெரிகின்றது' என்று நீட்டி முழங்கினார் அஸ்மின். முதலமைச்சரையும், ஐங்கரநேசனையும் மறைமுகமாக கடுமையாகத் தாக்கினார். இதனைத் தொடர்ந்து ஐங்கரநேசனுக்கும், அஸ்மினுக்கும் இடையில் பணப் பெட்டி சம்பந்தமான விவாதம் காரசாரமாக நடந்தது. 'ஜுலிபவர் காற்றாலை நிறுவனம் இரண்டு பெட்டியில் பணம் கொண்டு வந்தவங்கள்' என்று ஐங்கரநேசன் முன்னர் தன்னிடம் கூறினார் என்று அஸ்மின் கூற அப்படிக் கூறவில்லை என்று மறுத்தார் ஐங்கரநேசன். இந்த விடயத்தில் அஸ்மின் சுகிர்தனையும் சாட்சிக்கு இழுத்தார். அதன்போது சுகிர்தன், ஜுலிபவர் பிரச்சினைக்கு அல்ல நொதேன்பவர் பிரச்சினைக்கு என்று திருத்தத்தை முன்வைத்தார். ஏதோ ஒரு 'பவர்' 'மணிபவர்' என்று தவறைச் சமாளித்தார்.

இந்தக் குற்றச்சாட்டுக்களை நாங்கள் சபையில் முன்வைத்தபோது எங்களைக் குழப்பவாதிகள் என்று மக்கள் முன்காண்பித்தார்கள். இன்று உண்மைகள் வெளிவந்திருக்கின்றது. இனியாவது மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். நாங்கள் ஏன் அப்படிச் செயற்பட்டோம் என்பதை இன்று மக்கள் உணர்ந்து கொள்வார்கள் என்று நம்புகின்றேன் என்றார் சுகிர்தன். இதுநாள் வரை இருந்த வேதனையை அவர் கொட்டித் தீர்த்தார்.

ஈ.பி.டி.பியைச் சேர்ந்த மாகாணசபை உறுப்பினர் தவநாதன், பளை காற்றாலைத் திட்டம் கொழும்பு அரசின் முதலீட்டுச் சபையின் திட்டம் என்று எடுத்துரைத்ததுடன், வடக்கில் வருமானம் ஈட்டும் பல தொழிற்சாலைகள் இருந்தும் அவர்களிடமிருந்து ஏன் சி.எஸ்.ஆர். (வணிக நிறுவனங்களுக்கான சமூகக் கடப்பாடு) நிதி பெறப்படவில்லை என்று கேள்வி எழுப்பினார்.

சபையில் சுழன்றடித்து ஐங்கரநேசன் மீது தாக்குதல் நடத்தப்பட்டபோது, அவருக்கு ஆதரவாக, வழமையாக முதலமைச்சர் ஆதரவு அணிக்கு குரல் கொடுக்கும் சிவாஜிலிங்கம் கூட சபையில் அமைதியாக இருந்தார்.

(18 ஆம் பக்கம் பார்க்க)



மகளின் பிறந்தநாளையொட்டி

## சாதனை மாணவர்களுக்கு உடற்கல்வி ஆசிரியர் உதவி

யாழ்ப்பாணம், செப்.1

யாழ்ப்பாணம் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியின் உடற்கல்வி ஆசிரியர் க. சசிகுமார், தனது மகள் ஆத்மிகாவின் இரண்டாவது பிறந்தநாளை முன்னிட்டு, மாகாண மட்ட பாடசாலைகள் விளையாட்டுப்போட்டியில் பிரகாசித்த பொருளாதார வசதி குறைந்த மாணவர்கள் இருவருக்கு ஊக்குவிக்கும் வகையில் உதவி செய்துள்ளார்.

20 வயது ஆண்கள் பிரிவு முப்பாய்ச்சல் நிகழ்வில் முதலாமிடம் பெற்று தேசியமட்ட போட்டியில் கலந்துகொள்ளும் கிளிநாச்சி முக்கொம்பன் மகா வித்தியாலய மாணவன் கோ. பவீந்திரனுக்கு 11 ஆயிரம் ரூபா பெறுமதியான விளையாட்டு உபகரணங்களையும், 14 வயது பெண்கள் பிரிவு நீளம்பாய்தல் போட்டியில் முதலாமிடம் பெற்று தேசியமட்ட போட்டியில் கலந்துகொள்ளும் முல்லைத்தீவு கொக்கிளாய் அ.த.க. பாடசாலை மாணவி தர்சிகாவுக்கு 16 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான ஈருருளியும் அன்பளிப்பாக வழங்கி ஊக்குவித்துள்ளார். (4)

## வலயக் கல்விப் பணிப்பாளர்கள் 7 பேர் தாய்லாந்துக்குப் பயணம்

யாழ்ப்பாணம், செப். 1

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் கீழ் உள்ள கல்வி வலயங்களின் 7 கல்விப் பணிப்பாளர்கள் கல்விச் சுற்றுப் பயணமாகத் தாய்லாந்துக்கு செல்கின்றனர்.

தாய்லாந்து நாட்டில் மேற்கொள்ளப்பட்டுவரும் கல்வி நடைமுறைக்கேற்ற கற்றல் கட்டுமான அமைப்புமுறைகள் தொடர்பில் நேரில் அறிந்துகொள்ளும் வகையில் ஒரு வார கல்விச்சுற்றுலாவாக இந்தப்பயணம் அமைகின்றது. இதில் வடக்கு மாகாணத்தின் 7 வலயக்கல்விப்பணிப்பாளர்களில் முதலில் மூவர் இன்று புறப்பட்டு எதிர்வரும் 7 ஆம் திகதி நாடு திரும்புவர். முதலாவது அணியில் கிளிநொச்சி வலயம் குயின்ரஸ், வவுனியா வடக்கு வலயம் அன்னமலர், வவுனியா தெற்கு வலயம் இராதகிருஸ்ணன் ஆகியோர் முதலாவது அணியிலும், சாவகச்சேரி வலயம் சுந்தரசிவம், துணுக்காய் வலயம் இரவிச்சந்திரன், முல்லைத்தீவு வலயம் புவனராயா, வலிகாம வலயம் சந்திரராயா ஆகி யோர் இரண்டாவது அணியிலும் பயணிக்கின்றனர். (4,105)

# விக்னேஸ்வரன் சதி செய்வாராயின் அவரது முகத்திரையைக் கிழிப்பேன்

*சிவமோகன் எம்.பி. இப்படிக் கூறுகிறார்*



**மன்னார், செப். 1**

**வடக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரன், திரைமறைவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பலவீனப்படுத்தி, தமிழர்களின் ஒற்றுமையைச் சீர்குலைக்கும் முயற்சிகளில் ஈடுபடுகிறார் என்பது உறுதிசெய்யப்பட்டால், ஆயிரம் இளைஞர்களை ஒன்றுதிரட்டி பொதுமக்கள் முன்னிலையில் முதலமைச்சரின் முகத்திரையைக் கிழிப்பேன்.**

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிவமோகன் காட்டமாகத் தெரிவித்தார். மன்னாருக்குச் சென்றிருந்த அவர் உதயன் செய்தியாளரிடம் கருத்துத் தெரிவிக்கையில் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் பல சந்தர்ப்பங்களில் தான் சார்ந்த கட்சியை மறந்துவிடுகிறார். முடிவுகள் எடுத்து அறிக்கைகள் விடுவதற்கு முன்னர் கட்சி உறுப்பினர்களோடு கலந்தாலோசிப்பதில்லை. அதுகூடத் தேவையில்லை. கட்சித் தலைவரிடமாவது கேட்டுவிட்டுத்தான் சில செயற்பாடுகளைச் செய்ய வேண்டும். அவர் அப்படிச் செய்வதில்லை.

மன்னார், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் போன்ற அனைத்து இடங்களுக்கும் சென்று கூட்டமைப்பைப் பலவீனப்படுத்தி தமிழர் ஒற்றுமையை சிதைக்க நினைக்கும் ஒவ்வொருதர் முகத்திரையையும் மக்கள் முன்னிலையில் கிழித்துக்காட்டுவேன். நம்மை உருக்குலைக்கின்றார்கள் என்று தெரிந்தால் நாம் அதற்கு எதிராகச் செயற்பட்டுத்தான் ஆகவேண்டும்.

**கூட்டமைப்பு மீதான விமர்சனங்கள்**

காரணமே இல்லாமல் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பை விமர்சிப்பவர்கள் பின்னர் கூட்டமைப்பை விட்டுச் சென்று என்னசெய்து, எதைச் சாதிக்கப்போகின்றார்கள்? தங்களால் ஏதாவது ஒன்றைச் செய்ய முடியும் என்று ஏதாவது ஒன்றைக்கூறமுடியுமா? தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு என்ன செய்தது என்று எல்லோரும் கேட்கின்றார்கள். 2013க்கு முன்னரும் 2015 வரையும் வெள்ளை வாகனங்களில் எமது உறவுகள் கடத்திச்செல்லப்படும் போதும், அடையாளம் தெரியாமல் கொலைசெய்யப்பட்டபோதும், யாராவது குரல் கொடுத்தார்களா?

**மைத்திரியுடன் விட்டுக்கொடுப்பு**

மகிந்தராஜபக்ச ஆட்சியில் இருந்தால் தமிழ் மக்களுக்குப் பாதுகாப்பு இல்லை என்பதால்தான் மைத்திரியை ஆதரித்து மகிந்தவைத் தோற்கடித்தோமே தவிர, மைத்திரி மீது எங்களுக்குக் காதல் இல்லை. மகிந்த காலத்தில் இருந்த புலனாய்வு அச்சுறுத்தல் மைத்திரி காலத்தில் இல்லை. தொடர்ச்சியான துன்பங்களை அனுபவித்துவந்த மக்களுக்கு மைத்திரி ஆட்சி என்பது சிறிதளவு ஆறுதல் என்றுதான் கூறவேண்டும்.

தற்போது மாவீரர் தின நிகழ்வுகள், செஞ்சோலை நிகழ்வுகள் நடத்துகிறோம். வீதிகளில் இறங்கி உரிமைக்காகப் போராடுகின்றோம். இந்தச் சுதந்திரம், அச்சமில்லாததன்மையை ஏற்படுத்தித் தந்தது கூட்டமைப்பு என்பதை எவரும் மறந்துவிடக் கூடாது.

**கூட்டமைப்பு என்ற பயம்**

கண்டியில் அப்பாவி முஸ்லிம் மக்களைத்தாக்கினார்கள். எத்தனை முஸ்லிம் அமைச்சர்கள் இருந்தார்கள். தடுக்க முடிந்ததா? ஆனால் மலையகத்தமிழர் என்றாலும் கண்டியில் ஒரு தமிழன் மீதும் கை வைக்கவில்லை.

காரணம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இருக்கின்றது என்ற பயம் தான்.

அந்த அடையாளத்தைவிட்டுவிட்டால் எந்த ஒரு பாதுகாப்பும் தமிழர்களுக்கு இல்லை.

இதைப் பொதுமக்களும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பைப் பலவீனப்படுத்திச் சீர்குலைக்க நினைப்பவர்களும் உணர்ந்துகொள்ள வேண்டும்.

**கொள்கையை மீறமாட்டேன்**

தலைவர் பிரபாகரன் இருந்தபொழுது அவரோடு சேர்ந்து வேலைசெய்திருக்கின்றேன்.

தலைவர் விட்டவழியில் உருவாக்கப்பட்ட தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் கொள்கையை மீறி நான் ஒருநாளும் போகப்போவதில்லை.

அந்தக் கொள்கையைத் தமிழ் அரசுக் கட்சி மீறிப்போனாலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கட்சிக் கொள்கைகளை மீறாமல்தான் பயணித்துக் கொண்டிருப்பேன் - என்றார். (4,213)

# நோயாளரைத் திருப்திப்படுத்தினால்தான் மருத்துவமனையும் திருப்திப்படும்

*பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் நந்தகுமாரன் அறிவுறுத்துகிறார்*

யாழ்ப்பாணம், செப்.1

மருத்துவமனைக்குவரும் நோயாளர்கள்ளத் திருப்திப் படுத்தினால் தான் மருத்துவமனையும் திருப்திப்படும் என்று யாழ்ப்பாணப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் க. நந்தகுமாரன் தெரிவித்தார்.

மானிப்பாய் பிரதேச அரசினர் மருத்துவமனையின் 10 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் புதிய கட்டடத் திறப்பு விழாவும் நேற்று முன்தினம் இடம்பெற்றன. மருத்துவமனையின் பொறுப்பு மருத்துவ அதிகாரி ஆ. காந்தநேசன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில்

முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்ட வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சர் திருமதி அனந்தி சசிதரன் பாலூட்டும் தாய்மாருக்கான புதிய கட்டடத்தொகுதியைத் திறந்துவைத்தார். மதிப்புறு விருந்தினராகக் கலந்து கொண்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் க. நந்தகுமாரன் பிரதேச மருத்துவமனையில் பல இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட தொழில்நுட்ப விஞ்ஞான ஆய்வுகூட புதிய கட்டடத் தொகுதியைத் திறந்து வைத்தார்.

நிகழ்வில் நந்தகுமாரன் மேலும் தெரிவித்ததாவது:

மருத்துவமனைக்குவரும் நோயாளர்களைத் திருப்திப்படுத்தி னால் தான் மருத்துவமனையும் திருப்திப்படும். அந்த வகையில் இந்த மருத்துவமனையில் நடைபெறும் சேவையில் மக்களுக்கு நம்பிக்கை ஏற்பட்டுள்ளது.

இந்த மருத்துவமனையில் கடமையாற்றும் மருத்துவர் உட்பட அனைவரும் எதுவித பேதமுமின்றி கூட்டாக இணைந்து செயற்படுவதே மருத்துவமனையின் வளர்ச்சிக்குக் காரணம். எந்த மருத்துவமனையிலும் இல்லாத நிலை இங்கு இருப்பதால்தான் மக்களுக்குச் சிறந்த சேவையை வழங்க முடிகின்றது.

இதை அறிந்து கொண்ட மக்கள் அயல் கிராமங்களிலிருந்தும் தூர இடங்களிலிருந்தும் இங்கு வருவதைக் காணமுடிகின்றது. நோயாளரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துவருகின்றமையை நான் அவதானித்துள்ளேன். இங்கு நிலவுகின்ற ஆளணிப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். இங்கு இயங்கிவரும் நோயாளர் நலன்புரிச்சங்கம் திறமையாக இயங்குவதனால் சங்கத்தால் மேற்கொள்ளப்படும் வேலைத் திட்டங்கள் திருப்திகரமாகவுள்ளன - என்றார்.

**மருத்துவ அதிகாரி உரை**

நிகழ்வில் உரையாற்றிய மருத்துவமனையின் பொறுப்பு மருத்துவ அதிகாரி ஆ. காந்தநேசன் தெரிவித்ததாவது:

எம்மிடமுள்ள மனித வளத்தை முழுமையாக மக்களுக்குப் பயன்படுத்துவதன் மூலமதாக வலி. தென்மேற்கில் உள்ள மக்கள் மருத்துவம் சார்ந்த நன்மையை அடைகின்றனர்.

அந்தளவுக்கு மானிப்பாய் அரசினர் மருத்துவமனைத் தாதியர்கள், குடும்பநல மாதுக்கள் மற்றும் பிரிவினர் முழுமையான பயிற்சியையும் - அர்ப்பணிப்புடன் சேவையாற்றும் உள்ளம் கொண்டவர்களாகவும் உள்ளனர்.

மக்களுக்கு மருத்துவம் தொடர்பாக முழுமையாகச் சேவையாற்ற வேண்டும் என்பதே எமது மருத்துவமனையில் பணிபுரியும் அனைவரதும் இலக்கு.

இந்த மருத்துவமனைக்கு இருதய நோயால் பாதிக்கப்பட்டுவரும் கடும் நோயாளர்களைத் தவிர ஏனைய அனைத்து மருத்துவம் தொடர்பான சேவைகளை ஆற்ற மருத்துவர்களும், தாதியர்களும், குடும்பநல மாதுக்களும் தயாராக உள்ளனர்.

அவர்கள் அனைத்துத் துறைகளிலும் முழுமையான பயிற்சியைப் பெற்றுள்ளனர் - என்றார்.

இந்த மருத்துவமனைக்கு 17 பரப்பு காணியை மிகக்குறைந்த விலையில் வழங்கிய கொடைவள்ளல் - இளைப்பாறிய உப அதிபர் கந்தையா கதிரேசு (மாஸ்ரர்) பொன்னாடை போர்த்தி வாழ்த்துப்பா வழங்கி மதிப்பளிக்கப்பட்டார்.

சிறப்பு விருந்தினராக வலி. தென்மேற்கு பிரதேச சபை உறுப்பினர் திருமதி ம. சிவராசா, கிராம அலுவலர் ஏ. நிஷாந்தன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். (4,50,115)

## பொதுமக்களின் எதிர்பார்ப்புகளை மாகாண சபை நிறைவேற்றவில்லை

யாழ்ப்பாணம், செப். 1
வடக்குமாகாணசபைமக்களின்எதிர்பார்ப்பைப்பூர்த்திசெய்யவில்லை என்று விவசாய பிரதி அமைச்சர் இ. அங்கஜன் தெரிவித்தார்.
விவசாய நவீன மயமாக்கல் தொடர்பாக யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின் பின்னர் ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும்போது தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது.
**கேள்வி:** தமிழ்த்தேசியக்கூட்டமைப்பினர்வடக்குமாகாண சபையைசீராகநடத்தவில்லைஎன்றகுற்றச்சாட்டுபல்வேறு தரப்புக்களாலும்முன்வைக்கப்படுகின்றது. வடக்கின்அடுத்த முதலமைச்சராகநாடாளுமன்றஉறுப்பினர்டக்ளஸ்தேவானந்தா போட்டியிடுவது பற்றிப் பேசப்படுகிறது. இந்த நிலையில் மக்களின் தேவைகள் பூர்த்தி செய்யப்படுமா?
**பதில்:** ஆரம்பத்தில் நானும் வடக்கு மாகாண சபை உறுப்பினராகஇருந்தவன். மக்களுக்குவழங்கியவாக்குறுதிகளை மாகாண சபை நிறைவேற்றவில்லை. மக்கள் எதிர்பார்த்த அளவுக்கு வேலை செய்யவில்லைதான். அதில் இருந்து செயற்பட முடியாது என்பதால்தான் கொழும்பு அமைச்சின் அமைச்சராகச் செயற்பட்டு வருகிறேன். நாம் யாருடனும் சேர்ந்து போகத் தேவையில்லை. நல்ல விடயமாக இருந்தால் ஆதரவு கொடுப்போம்.
**கேள்வி:** கூட்டாட்சி அரசைவிமர்சிக்கும்கூட்டமைப்பு, அரச தலைவரைத் தனிப்பட்ட முறையில் விமர்சிக்கின்றதே?
**பதில்:** அரச தலைவரை மாத்திரம் விமர்சிப்பது அரசியல் தந்திரமாக இருக்கலாம். கூட்டரசை விமர்சிக்க இரண்டு கட்சிக்கும், கூட்டமைப்புக்கும் பங்குள்ளது. பிழைகள் எல்லாரிலும்இருக்கலாம். ஒருத்தரைஒருத்தர்குறைகூறுவதைவிட்டு வாக்குறுதிகளை நிறைவேற்றவேண்டும். மீதமாகவுள்ள இரண்டு வருடங்களில் அடுத்தகட்டத் தேர்தலுக்கான அரசியல் தந்திரப் பயணமாக இருக்கலாம்.
**கேள்வி:** கூட்டரசைக் கூட்டமைப்பினர் விமர்சிப்பது?
**பதில்:** மக்கள்தான் இந்த அரசைக் கொண்டு வந்தார்கள். அதற்குக் கூட்டமைப்பும் ஆதரவு வழங்கியது. விமர்சனம் இன்னும் அதிகமாக வேலைசெய்யத் தூண்டும். தேர்தல் நகர்வுக்காக அல்லாமல் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற விமர்சித்தால் நன்று.
**கேள்வி:** வடக்குமாகாணசபைத்தேர்தலில்போட்டியிடுவதுபற்றி?
**பதில்:** தேர்தல் இன்னமும் அறிவிக்கப்படவில்லை. சிறிலங்கா சுதந்திரக் கட்சி தற்போது மக்களால் வரவேற்கப்படுகின்ற நிலமை காணப்படுகின்றது. ஆகவே நல்ல போட்டி காணப்படும். கட்சிகள்பலரைப்பிரதிநிதித்துவப்படுத்த முற்படுவார். மக்கள்தான் சரியானவர்களைத் தெரிவுசெய்வர்.
**கேள்வி:** கட்சி உங்களை முதலமைச்சராக நில்லுங்கள் என்று கூறினால்?
**பதில்:** இது பற்றி அந்த நேரத்தில் அறிவிப்போம். இப்போது மக்களுக்காகச்செய்யவேண்டியவேலைகள்அதிகமுள்ளது. ஆகவே அதனை முதல் கவனிக்க வேண்டும். தேர்தலின் போது அதுபற்றி யோசிப்போம் - என்றார். (4.7)

# விவசாயத்தில் தன்னிறைவு பெற திட்டமிட்ட முறைகள் வேண்டும்

## பிரதி அமைச்சர் அங்கஜன் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், செப். 1**
**வடக்கு மாகாணம் விவசாயத்தில் தன்னிறைவு பெறவேண்டுமானால் விவசாயிகள் மற்றும் ஏற்றுமதியாளர்களிடம் திட்டமிட்ட விவசாய முறை இருக்க வேண்டும் என்று விவசாயப் பிரதி அமைச்சர் இ.அங்கஜன் தெரிவித்தார்.**



உலக வங்கியின் நிதி உதவியுடன் வடக்குமாகாணத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள விவசாய நவீனமயமாக்கல் செயற்றிட்டத்தின்கீழ் மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பான கலந்துரையாடல் யாழ்ப்பாண மாவட்டச்செயலகக்கேட்போர்கூடத்தில் நேற்றுநடைபெற்றது. உற்பத்தியாளர்கள், விவசாயிகள், விவசாயப் பிரதி அமைச்சர், உலக வங்கி அதிகாரிகளுக்கு இடையிலான கலந்துரையாடலாக இது அமைந்திருந்தது. இதன் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
நாட்டின் பொருளாதாரத்தில் 10 வீதம் விவசாய உற்பத்தியில்தங்கியுள்ளது. ஏனைய மாகாணங்களின் விவசாய நடவடிக்கைகளுடன் ஒப்பிடும்போது எமது மாகாணமே விவசாயத்தில் கடைசி இடத்தில் உள்ளது. மொத்த உற்பத்தியில் 24வீதம் மட்டுமே விவசாயம் மற்றும் மீன்பிடியில் கிடைக்கின்றது.
ஆரம்பத்தில் விவசாயத்தில் நாம் உயர்ந்த நிலையில் இருந்தோம். 30 வருட போரின்பின்னர் படிப்படியாக நாம்விவசாயத்தைச்செய்ய ஆரம்பித்துள்ளோம்.
அதற்கு அமைவாக மாகாணத்துக்கு என்றுஒருவிவசாயக்கொள்கைதயாரிக்கப்பட்டுள்ளது.
நாம்உற்பத்திகளைமிகையாகச்செய்தால் வேறு இடத்தில் இருந்தும் இறக்குமதி செய்யவேண்டிய தேவை வராது. ஆனால் இங்கு பொருள்கள் உற்பத்தி இடம்பெற்றாலும், அதே பொருள்களை வேறு இடத்திலிருந்து இறக்குமதி செய்ய வேண்டிய நிலை நீடிக்கிறது. எனவேதான் உற்பத்தி அதிகரிக்க வேண்டும்.
விவசாயிகளுக்கும்ஏற்றுமதியாளர்களுக்கும் இடையே தொடர்பு இருக்க வேண்டும். எந்தப்பொருளைஉற்பத்தி செய்தால் என்ன விலைக்கு விற்கலாம்என்றுதெரிந்திருக்கவேண்டும். உலகவங்கியிடம் இருந்து 58 மில்லியன் கடன் பெறப்பட்டுள்ளது. அதற்கு ஏற்றவகையில் எமது விவசாய நடவடிக்கைகள் திட்டமிடலின்படி அமைய வேண்டும் - என்றார்.

**உலக வங்கிக் குழு**
உலகவங்கியின் செயற்பாட்டுக் குழுவினர் தெரிவித்ததாவது:
போரின் பின்னர் வடக்கு மாகாணத்தில் உள்ள மக்களின் நலன்கருதி பல்வேறு வேலைகளை இங்கு மேற்கொண்டு வருகிறோம். அதன் அடிப்படையில் விவசாய நவீன மயமாக்கல் திட்டம் அறிமுகப்படுத்தபட்டுள்ளது. உற்பத்தி அதிகரிக்க வேண்டும் என்றால் அதற்கு ஏற்ற சந்தை வாய்ப்பும் இருக்க வேண்டும். யாழ்ப்பாணம், முல்லைதீவு மாவட்டங்களில் இந்த வருடம் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கு இரண்டுஅமைச்சுகளை நாம் இணைத்துள்ளோம். பொருள் உற்பத்திசெய்யப்பட வேண்டும்.

**விவசாய அமைச்சும் ஏற்றுமதி அமைச்சும் இணைக்க நடவடிக்கை**
அதேவேளை ஏற்றுமதியும் நடக்க வேண்டும். அதற்காக விவசாயம் சார்ந்தஉற்பத்திநடவடிக்கைகளுக்கு விவசாய அமைச்சும், ஏற்றுமதி தொடர்பான நடவ்டிக்கைகளை முன்னெடுப்பதற்குத் தொழிற்றுறை அமைச்சையும் இணைத்து இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. உற்பத்திக்கு விலை, தரச் சான்றிதழ் போன்ற அங்கீகாரங்கள் வழங்கப்படும்.
தனித்து நின்று விவசாயிகள் செயற்படாமல் ஏற்றுமதியாளர்களுடன் இணைந்து ஒரு குழுவாகச்செயற்பட வேண்டும். அப்போதுதான் இந்தத் துறையில் வெற்றிகாண முடியும். குறைந்த நிலப்பரப்பில் கூடிய உற்பத்திகளை மேற்கொள்ள வேண்டும். மனித வலுவுடன் கூடிய நவீன விவசாய முறைகளையும் கையாள வேண்டும். எமதுபிரதேசத்தில்விளையும் மா, பப்பாசியுடன் நின்றுவிடாமல் வேறுபயிர்களையும்பயிரிட முன்வர வேண்டும் - என்றனர். (4.7)

# விவசாய நவீனமயமாக்கல், நவீன இயந்திரங்களின் பயன்பாடு பற்றி விவசாயிகளுக்கு அறிவூட்டுங்கள்

## கலந்துரையாடலில் விவசாயிகள் பிரதி அமைச்சரிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், செப். 1
விவசாய நவீன மயமாக்கல் என்று கூறிக் கொள்கிறார்கள். ஆனால் இது தொடர்பில் விவசாயிகளுக்கு முழுமையான அறிவில்லை. நவீன முறைகள், நவீன இயந்திரங்களின் பயன்பாடுபற்றி எமக்குத்தெரியப் படுத்தப்பட வேண்டும் என்று விவசாயிகள் பிரதி அமைச்சர் இ. அங்கஜனிடம் நேற்றுக் கோரிக்கை விடுத்தனர்.
உலகவங்கியின் நிதி உதவியுடன் வடக்கில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள விவசாய நவீன மயமாக்கல் செயற்றிட்டத்தின்கீழ் மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பானநேற்றையகலந்துரையாடலில்விவசாயிகள் மேற்கண்டவாறு கோரியுள்ளனர்.
அதன்போது பல்வேறு பிரச்சினைகளை விவசாயிகள் முன்வைத்தனர். அதற்குப் பிரதி அமைச்சர் இ. அங்கஜன் பதிலளித்தார்.
**பிரச்சினை:** வவுனியாவடக்கு, முல்லைதீவு மாவட்டத்தில் நீர்ப் பாசனத்துக்கு எந்தக் குறையும்இல்லை. ஆனால்யானைகளால் பிரச்சினைகள் காணப்படுகின்றன. ஏக்கர் கணக்கில் நாம் பயிர் செய்கின்றோம். எங்கிருந்தோகொண்டுவந்து யானைகள் இறக்கி விடப்படுகின்றன. அவை பயிர்களை நாசம் செய்கின்றன. இதுதொடர்பில் எந்தநடவடிக்கையும்அமைச்சர்கள், நாடாளுமன்றஉறுப்பினர்கள் மேற்கொள்ளவில்லை.
**பதில்:** வவுனியா, கிளிநொச்சி மாவட்டங்களுக்குச் சிறப்பான திட்டம் ஒன்று நடைமுறைக்கு வரவுள்ளது. அந்தத் திட்டத்தின் கீழ் பாதுகாப்பு வேலிகள் அமைத்துத் தரப்படும்.
**பிரச்சினை :** சந்தையிலே கொடுக்கப்படும் மரக்கறி வகைகளுக்குக் கழிவு கொடுக்க வேண்டும் என்று நடைமுறையில் பழக்கி விட்டார்கள். 100கிலோகத்தரிக்காய்கொடுத்தால் 10 கிலோ கத்தரிக்காய் கழிவாக அதாவது இலவசமாகக் கொடுக்க வேண்டும். இதனால் நாம் பாதிக்கப்படுகின்றோம்.
**பதில்:** வடக்கு மாகாணத்தில் இந்த நடைமுறையைப்பழக்கியது விவசாயிகளுக்கும் கொள்வனவாளர்களுக்கும் இடையிலே உள்ள இடைத் தரகர்கள்தான். குறிப்பிட்ட அளவு மரக்கறியைக் கொடுத்தால் கழிவு கொடுக்க வேண்டும் என்று கூறுவார்கள். ஆகவே இது தொடர்பில் பிரதேச சபைகள் தீர்மானங்களைநிறைவேற்றிநடவடிக்கை எடுக்க முடியும்.
**பிரச்சினை :** சில மரக்கறிகளின் விலைகள் குறைவடையும்போது உற்பத்திச் செலவை விடக் குறைவான விலையில் நட்டத்துடன் மரக்கறிகளை விற்கவேண்டிய நிலை ஏற்படுகின்றது. இதனால்120ரூபாபெறுமதியான உற்பத்திப் பொருளைக்கூட 40 ரூபாவுக்கு வழங்க வேண்டிய நிலையில் உள்ளோம்.
**பதில்:** உற்பத்திப் பொருள்களின் விலை சந்தையில்கூடுவதும்குறைவதுமாகஉள்ளது. ஆகவே எமது மாகாணத்துக்கு ஏற்ற சில பயிர்களின் விலை மாற்றத்துக்குக் காப்புறுதி திட்டம் ஒன்றை முன்னெடுப்பது தொடர்பில் அமைச்சு ஆராய்ந்து வருகின்றது.
**பிரச்சினை :** வற்றல் தயாரிப்புக்கு மூலப் பொருள்கள் ஒரு வருடத்தில் தொடர்ச்சியாக ஒரு விலையில் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். குறிப்பாகப் பாகற்காய், பப்பாளி வற்றல்களுக்கு அதிக வரவேற்பு வெளிநாடுகளில் உண்டு. பாகற்காய் யாழ்ப்பாணத்திலும், பப்பாளிப்பழம் மன்னாரிலும் அதிகம் கிடைக்கின்றன. ஆனால்அவை ஒவ்வொரு மாதமும் மாறுபட்ட விலையில் கிடைக்கின்றன. பாகற்காய் மற்றும் பப்பாளிப்பழத்தை வற்றல்செய்தால்நீர்அகற்றப்பட்டநிலையில் ஒரு கிலோவுக்கு அரை கிலோவுக்கு குறைவான முடிவுப் பொருளே கிடைக்கும். இங்கு மூலப் பொருள்களின் விலை மாறுபாட்டால் முடிவுப் பொருள்களை ஏற்றுமதி செய்யும் போதுமாறுபட்டவிலையில்ஏற்றுமதிசெய்ய முடியாமல் உள்ளது.
**பதில்:** ஒவ்வொரு காலத்துக்கும் பொருள்களின் விலை மாறுபடுகின்றது. ஆகவே விவசாயிகள் ஏற்றுமதியாளர்களிடம் ஒரு ஒப்பந்தம் ஒன்றை செய்ய முடியும். இருவரையும் பாதிக்காத வகையில் நிலையான விலை ஒன்றுக்கு உற்பத்திகளைத்தொடர்ச்சியாகத் தருமாறு கூறவேண்டும்.
**பிரச்சினை :** உற்பத்திகள்ஏற்றுமதிசெய்யப்படவேண்டும். 500 கிலோகிராம் உற்பத்திப் பொருளைக் கொடுத்தால், ஏற்றுமதி செய்கிறோம்என்றுஎம்மிடம்இருந்துபெற்றுஅதில், 200 கிலோவை மட்டும் தெரிந்து எடுத்துச் சென்றால்மிகுதிப்பொருளைஎங்குசென்று விற்பது?
**பதில்:** தரமான உற்பத்திப் பொருள்கள் சிலவற்றைச் சந்தைப் படுத்தும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
**பிரச்சினை :** உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும் தானிய வகைகள் தொடர்ச்சியாகக் கிடைக்க வேண்டும். ஒரு மாதம் எமது ஊர் தானியங்களைப் பயன்படுத்தி சத்து மாவு உள்ளிட்டபொருள்களைப்பயன்படுத்திதயாரிப்புகளைச்செய்து விற்றுவிட்டு அடுத்த மாதம்இறக்குமதிசெய்யப்படும்தானியத்தில் உற்பத்திசெய்துகொடுத்தால், சுவை, மணம் என்பனமாறிவிடும். இதனால்எமது உற்பத்திப்பொருள்களுக்குக் கேள்வி இருக்காது.
**பதில்:** உற்பத்திசெய்யும்தானியங்கள்எமக்குப் போதுமானதாக இல்லை. உற்பத்திகளை அதிகரிக்கவே நடவடிக்கை எடுக்க வேண்டும். அதேபோன்று எமது மூலப் பொருள்களைப் பயன்படுத்தித் தயாரிக்கப்படும் பொருள்களுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். இந்தக் கலந்துரையாடலில் வடக்கு மாகாண விவசாய அமைச்சின் அதிகாரிகள், உலக வங்கியின் பிரதிநிதிகள், விசாயிகள், ஏற்றுமதியாளர்கள் எனப்பலர்கலந்துகொண்டனர். (4.7)

# நெல்லின் கொள்வனவை அதிகரிக்க அரசு தீர்மானம்

### மகிந்த அமரவீர அறிவிப்பு



கொழும்பு.செப்.1
கொள்வனவு செய்யும் நெல்லின் அளவை அதிகரிக்க அரசு தீர்மானித்துள்ளதாக விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

அம்பலாங்கொடைப் பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். அவர் தெரிவித்ததாவது.

நெல் விநியோக சபைக்கு நெல்லை வழங்கும்போது விவசாயிகள் முன்னெடுக்கக் கூடிய பல வசதிகளை நாம் பெற்றுக் கொடுத்தோம்.

அதில் முதல் திட்டமாக விவசாயிகளுக்கு நெல்லைக் கொண்டு செல்வதற்கான பைகளை நாம் பெற்றுக் கொடுத்தோம்.

அடுத்ததாக விவசாய ஆராய்ச்சி உத்தியோகத்தர்களின் பரிந்துரையின்றி நெல்லை விற்பனை செய்வதற்கான சந்தர்ப்பத்தை உருவாக்கிக் கொடுத்தோம்.

அதேபோன்று இன்று (நேற்று) விவசாயிகளின் நலன் கருதி மற்றுமோர் சலுகையையும் பெற்றுக் கொடுத்துள்ளோம்.

நெல் விநியோக சபையூடாக விவசாயிகளிடமிருந்து இதுவரை 2 ஆயிரம் கிலோ கிராம் நெல்லே கொள்வனவு செய்யப்பட்டு வந்தது.

இந்த நிலையில் எதிர்வரும் காலங்களில் 2 ஆயிரம் கிலோ கிராமிலிருந்த 3 ஆயிரம் கிலோ கிராம் வரையான நெல்லை விவசாயிகளிடமிருந்து கொள்வனவு செய்யத் தீர்மானித்துள்ளோம் - என்றார். இம்முறை சிறுபோக நெற்பயிர்ச்செய்கை மூலம் அறுவடை செய்யப்பட்ட நெல் கொள்வனவின் போதே விவசாயி ஒருவரி டமிருந்து பெறும் நெல்லின் அளவு 3 ஆயிரம் கிலோ கிராமாக அதிகரிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ரி2)

# அனைத்து நாடுகளையும் சீரழிப்பது போதைப்பொருளே

### பிம்ஸ்டெக் மாநாட்டில் அரச தலைவர் எடுத்துரைப்பு

**கொழும்பு,செப்.1**

**பிள்ளைகளையும், புதிய தலைமுறையினரையும் சீரழித்து வரும் போதைப்பொரு ளானது அனைத்து நாடுகளினதும் எதிர்காலத்திற்கு மிகுந்த பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. கல்வியறிவை பின்னடையச் செய்துள்ளது. சட்ட விரோத போதைப் பொருளைப்போன்று பெரும்பாலான சந்தர்ப்பங்களில் சட்ட பூர்வமானது என அடையாளப்படுத்தப்படும் போதைப் பொருள்களும் இந்த நிலமைக்குக் காரணமாக அமைக்கின்றது.**

இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

நேபாளத்தின் தலைநகர் காத்மண்டுவில் நான்காவது பிம்ஸ்டெக் உச்சி மாநாடு இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அரச தலைவர் இதனைத் தெரிவித்தார்.

இவ்வாறு அரசதலைவர் ஊடகப்பிரிவு அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது.

பிம்ஸ்டெக் உறுப்பு நாடு என்ற ரீதியில் இம்மாநாட்டில் மகிழ்ச்சியுடன் கலந்துகொள்கிறோம். இன்றைய கால கட்டத்தில் அனைத்து அரசுகளும் நாடளாவிய ரீதியிலும் வலய ரீதியிலும் பன்னாட்டுரீதியிலும் முகங்கொடுக்கும்பிரச்சினைகள் ஒன்றோடொன்று தொடர்புடையதாகவே விளங்கு கின்றது.

எமக்கு முகங்கொடுக்க நேர்ந்துள்ள பொருளாதார, அரசியல், சமூகரீதியான பிரச்சினைகள் ஒன்றுக்கொன்று சமமாகவே காணப்படுகின்றன. பல உலக நாடுகள் முகங்கொடுக்கும் பிரச்சினைகளுக்கு எமது பிம்ஸ்டெக் உறுப்பு நாடுகளும் முகங்கொடுக்க நேர்ந்துள்ளது.என்று அரச தலைவர் தெரிவித்தார்.

இன்று உலகில் காலநிலை மாற்றத்துடன் முகங்கொடுத்துள்ள முக்கிய பிரச்சினை வறுமையாகும். வறுமை அதிகரிப்புக்குப் போதைப்பொருள் முக்கிய காரணம் எனச் சுட்டிக்காட்டிய அரச தலைவர் போதைப்பொருள் பிரச்சினை முழு மனித சமூகத்திற்கும் பெரும் சவாலாக மாறியுள்ளதாகவும் குறிப்பிட்டார். உலகின் அனைத்து நாடுகளிலும் உள்ள பாடசாலை மாணவர்கள் முதல் அனைவரும் முகங்கொடுத்திருக்கும் பெரும் பிரச்சினையாக இது உள்ளது.

உலகில் அரசுகளை அமைப்பதற்கும் அரசுகளை வீழ்த்துவதற்கும் அரசியல்வாதிகளை அதிகாரத்திலிருந்து கீழிறக்குவதற்கும் தமக்கு வேண்டிய அரசியல்வாதிகளை அதிகாரத்துக்குக் கொண்டுவரவும் சட்டவிரோதப் போதைப்பொருள் கடத்தல்காரர்கள் முக்கிய பங்கு வகிக்கின்றனர்.

நல்லாட்சி எண்ணக்கருவின் அடிப்படையில் ஜனநாயக முறைமையை ஏற்படுத்தி மனித சுதந்திரம், அடிப்படை உரிமைகள், ஊடகச் சுதந்திரம் என்பவற்றை உறுதிப்படுத்தி செயல்படும் அரசியல் முறைமை பற்றி முழு மனித சமூகமும் நம்பிக்கை வைத்துள்ளது. என்றும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கையில் கடந்த மூன்றரை வருட காலப்பகுதியில் நாம் ஜனநாயகத்தைப் பலப்படுத்தியிருக்கிறோம் எனக் குறிப்பிடுவதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன். பக்க சார்பின்றி அரசியல் கட்சி வேறுபாடுகள் இன்றி ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என்ற பாகுபாடுகள் இன்றி ஊழலில் ஈடுபடுகின்றவர்களுக்கு எதிராகத் தீர்மானங்களை மேற்கொள்வதற்கு சட்டத்துக்கு இடமளிக்கப்பட்டுள்ளது.

இன்று மனித சமூகம் முகங்கொடுத்துள்ள பிரச்சினைகள், ஒவ்வாரு நாட்டையும் பாதிக்கின்ற பிரச்சினைகள், பிராந்திய ரீதியாகவும் பன்னாட்டு ரீதியாகவும் ஏற்படுகின்ற பிரச்சினைகள் பிராந்தியத்தில் ஏற்படுத்தும் தாக்கங்கள் எவை? எமது நட்பு நாடுகளை அவை எவ்வாறு பாதிக்கின்றன? இந்த விடயங்கள் தொடர்பில் தெளிவான புரிந்துணர்வுடனும் தெளிவான-நிச்சித் திட்டங்களுடனும் நாம் முன்னேறிச்-செல்லவேண்டும் என்றும் அரச தலைவர் தெரிவித்தார்.

எமது தனித்துவமான பாரம்பரிய கலாசார மரபுரிமைகள், பண்பாடுகள் நாம் கட்டியெழுப்பியிருக்கின்ற கடந்தகால அனுபவங்களுடன் மனித சமூகத்தின் முன்னேற்றத்திற்காகவும் எதிர்காலத்திற்காகவும் எதிர்பார்ப்புகளுடன் கூடிய வகையில் முன்னேறிச் செல்கின்ற போது அந்த உறுதியான பயணத்திற்கு பிம்ஸ்டெக் மாநாடு பலமான அடித்தளமாக உள்ளது என்றும் அரச தலைவர தெரிவித்தார்- என்றுள்ளனர். (ரி2)

# மருந்துத் தட்டுப்பாட்டை எழுத்துமூலம் வழங்குக

### சுகாதார அமைச்சர் கூறுகிறார்

கொழும்பு. செப்.1
மருத்துவமனைகளில் மருந்துத் தட்டுப்பாடு நிலவுமாயின் அது சம்பந்தமாக அனைத்துத் தகவல்களையும் அமைச்சுக்கு எழுத்து மூலம் வழங்க வேண்டும் என்று சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன கூறியுள்ளார். அவற்றை அடிப்படையாக வைத்துத் தேவையான நடவடிக்கையை எடுப்பதற்குத் தயார் என்றும் அமைச்சர் கூறியுள்ளார்.

மருத்துவமனைகளில் பெருமளவு மருந்துத் தட்டுப்பாடு நிலவுகின்றது என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் ஊடகங்களிடம் தெரிவித்த கருத்துக்குப் பதில் வழங்கும் வகையில் அமைச்சர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது :

சுகாதார அமைச்சராக பதவியேற்கும் போது 49 தொடக்கம் 70 வகையான மருந்துகளுக்குத் தினமும் தட்டுப்பாடு இருந்தது. தட்டுப்பாடான மருந்துகளை உடனடியாக மருத்துவ வழங்கல்பிரிவுமற்றும்அரசமருந்தகக்கூட்டுத்தாபனத்தால் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது- என்றார்.(ற)

# ஹெரோயின் வைத்திருந்த நபருக்கு ஆயுள் தண்டனை

கொழும்பு. செப்.1
ஹெரோயின் போதைப் பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் குற்றவாளியாகக் காணப்பட்ட ஒருவருக்கு கொழும்பு மேல் நிதிமன்றம் ஆயுள் தண்டனை வழங்கித் தீர்ப்பளித்துள்ளது.

இந்த வழக்கு நேற்று மேல் நீதிமன்றில் விசாரணைக்கு வந்த போது நீதிபதி கிஹான் குலதுங்க இவ்வாறு தீர்ப்பு வழங்கியுள்ளார்.

03 கிராம் ஹெரோயின் போதைப் பொருளுடன் 2000ஆம் ஆண்டில் பொரளைப் பிரதேசத்தில் கைது செய்யப்பட்ட நபர் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார். பின்னர் அவர் நீதிமன்றத்தில் முன்னிலையாகாது தவிர்ந்திருந்த நிலையில் வழக்கு நடைபெற்று வந்தது. நேற்று வழக்கு தீர்ப்புக்காக எடுக்கப்பட்டபோது ஆயுள் தண்டனை விதித்து நீதிவான் தீர்ப்பளித்தார்.

தற்போது குற்றவாளியைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகளைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற)



# நாட்டை நேசித்தால் அணி திரளுங்கள்

### அறைகூவல் விடுக்கிறார் கோத்தபாய

கொழும்பு.செப்.1
நாட்டை நேசிக்கும் அனைவரும் மகிந்த அணியினர் ஏற்பாடுசெய்துள்ள மக்கள் எழுச்சிப் பேரணியில் கலந்துகொள்ள வேண்டும். இவ்வாறு முன்னாள் பாதுகாப்பு செயலர் கோத்தபாய ராஜபக்ச அறைகூவல் விடுத்துள்ளார்.

மகிந்த அணியின் மக்கள் எழுச்சிப் பேரணி தொடர்பாக விடுத்துள்ள அறிக்கையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். அதில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது.

நாட்டை நேசிக்கும் சகலரும் எதிர்வரும் 5 ஆம் திகதி மகிந்த அணி ஏற்பாடு செய்துள்ள மக்கள் எழுச்சிப் பேரணியில் கலந்துகொள்ள வேண்டும்.

தனிப்பட்ட அரசியல் இலாபங்களுக்காக நாட்டை மீட்ட இராணுவத்தைத் தொடர்ந்து வேட்டையாடும் வகையில் செயல்பட்டுவரும் தற்போதைய அரசின் மீது மக்கள் பெரும் அதிருப்தி அடைந்துள்ளனர்.

ஜனநாயக ஆட்சிமுறையின் அடிப்படைகளை முற்றிலும் சிதைக்கும் வகையில், நாட்டின் ஜனநாயக உரிமைகளை கேள்விக்குட்படுத்தும் விதமாக அரசு செயல்பட்டு வருகிறது என்றுள்ளது. (ரி2)

# பிள்ளையானின் மறியல் நீடிப்பு

கொழும்பு, செப். 1
கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் தலைவருமான பிள்ளையான் என்றழைக்கப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன் மீதான வழக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை தொடர்பாகக் கைது செய்யப்பட்டு தொடர்ச்சியாக விளக்கமறியலில் இருக்கும் சிவநேசதுரை சந்திரகாந்தன் மீதான வழக்கு விசாரணை மட்டக்களப்பு மேல் நீதிமன்றில் நேற்று எடுத்துக்கொள்ளப்படவிருந்தது. மேல் நீதிமன்ற நீதிபதி விடுமுறை காரணமாகவும் அரச சட்டத்தரணி மற்றும் சந்தேகநபர்கள் சார்பாக சட்டத்தரணிகள் நீதிமன்றில் முன்னிலை யாகததால் வழக்கு செப்ரெம்பர் 19ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் சிவநேசதுரை சந்திரகாந்தன், தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் முன்னாள் தேசிய அமைப்பாளரும் முன்னாள் மாகாண சபை உறுப்பினருமான எட்வின் சில்வா கிருஸ்ணானந்த ராஜா, கனகநாயகம் மற்றும் இராணுவப்புலனாய்வு உத்தியோகத்தர் எம்.கலீல், முன்னாள் இராணுவச் சிப்பாயான மதுசிங்க ஆகியோர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான ஜோசப் பரராஜசிங்கம், 2005ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 25ஆம் திகதியன்று மட்டக்களப்பு புனித மரியாள் தேவாலயத்தில் நத்தார் பிறப்பு நள்ளிரவு ஆராதனையில் கலந்து கொண்டிருந்த போது தேவாலயத்துக்குள் வைத்து அடையாளந்தெரியாத துப்பாக்கிதாரிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார். இந்தச் சம்பவத்தில் அவரது மனைவி உட்பட சிலர் காயமடைந்தனர். (ற)

# இலங்கையின் பாதுகாப்புக்கு பன்னாட்டின் உதவி அவசியம்

## அரசதலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,செப்.1

**போர் முடிவுற்ற பின்னர் நாடு சகல துறைகளிலும் வளர்ச்சியை நோக்கி மிக வேகமாகப் பயணிக்கின்றது. தொழில்நுட்ப உலகில் பல்வேறுதுறைகளில்இருந்தும்பாதுகாப்புக்கான சவால்கள் ஏற்படுகின்றன. அவற்றைக் கையாள்வதற்கு தொழில்நுட்ப அறிவு மற்றும் பன்னாட்டின் ஒத்துழைப்புத் தேவையாகவுள்ளது.**



அமெரிக்கா, பிரித்தானியா, இந்தியா உள்ளடங்கலாக 45 நாடுகளின் பங்குபற்றுதலுடன் பன்னாட்டு ரீதியிலான 8 ஆவது பாதுகாப்பு செயலமர்வு நேற்று முன்தினம் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்தபன்னாட்டுமாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

பிம்ஸ்டெக் மாநாட்டுக்காக நேபாளம்சென்றுள்ளஅரசதலைவரின் பதிவுசெய்யப்பட்டஉரைஇச்செயலமர்வின்போது, திரையிடப்பட்டது. அதிலேயே அரச தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது.

போர் முடிவடைந்த பின்னர் ஏற்பட்ட சமாதானத்துடன் அரசியல், பொருளாதாரம், தொழில்நுட்பம் ஆகியஅனைத்துத்துறைகளிலும் மிக வேகமாக வளச்சியடைந்து வருகின்ற நாடாக இலங்கை உள்ளது.

எனினும் தற்போதைய தொழில்நுட்ப யுகத்தில் நாட்டின் பாதுகாப்புத் தொடர்பில் பல்வேறு மறைமுக சவால்கள் காணப்படுகின்றன. பாதுகாப்பை உறுதிப்படுத்துவதை விட, நிலையான சமாதானத்தை உறுதிப்படுத்துவதற்கான விடயங்கள் பரவலாக ஆராயப்படுவதுடன், நடைமுறைப்படுத்த வேண்டும்.

முன்னரை விட தற்போது பாதுகாப்புத்தொடர்பில்ஏற்படும்சவால்கள் அதிகரித்துள்ளன. நவீன தொழில்நுட்பம் தேசிய மற்றும் பன்னாட்டுபாதுகாப்புக்குப்பெரும் அச்சுறுத்தலாக உள்ளது.

அவற்றை எதிர்கொள்வதற்கான உத்திகள்இச்செயலமர்வில்ஆராயப்பட வேண்டும்.

மூலோபாய ரீதியாக ஏற்படும் பல்வேறு சவால்கள், அவற்றை தேசிய ரீதியில் எதிர்கொள்ளத் தக்க வழிமுறைகள், பன்னாடு வரைஅவற்றைக்கொண்டுசெல்லாதிருத்தல்போன்றவைதொடர்பிலும் கலந்துரையாடப்படுவது அவசியமாகும். இந்தச் செயலமர்வு பாதுகாப்பை உறுதி செய்வதைவிட, நிலையான சமாதானத்தைக் கட்டியெழுப்புவதை நோக்காகக்கொண்டிருக்கவேண்டும்-என்றார். (ரி2,8,31)

# பணியாளர்களின் பிள்ளைகளுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை

## அமைச்சர் அர்ஜுன ரணதுங்க

பெற்றோலியக் கூட்டுத்தாபன வேலைவாய்ப்பில்10 சதவீதம் கூட்டுத்தாபனத்தில் வேலைபார்க்கும்பெற்றோர்களின்பிள்ளைகளுக்கு வழங்கப்படும்.

பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சர் அர்ஜுன ரணதுங்க அவர்கள் தெரிவித்துள்ளார்.

கூட்டுத்தாபனத்தில்வேலைபார்க்கும்ஊழியர்களில் இவ்வாண்டு பல்கலைகழகம் செல்லஅனுமதிபெற்றமாணவர்களுக்குப் புலமை பரிசில் வழங்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. இதன் போதேஅமைச்சர்இதனைத்தெரிவித்தார். அவர் தெரிவித்ததாவது:

நாம் எல்லோரும் பொதுமக்கள் பணத்திலேயே கல்வியைக் கற்றோம். அமைச்சர் என்ற ரீதியில் எனது சம்பளமும் பொதுமக்கள் பணத்தில் இருந்தே தரப்படுகின்றது. இந்தக் கடனை நாட்டுக்குத் திருப்பிச் செலுத்த வேண்டும் என்ற பொறுப்பு எமக்குள்ளது.

இந்த சிந்தனை நம் அனைவரிடத்திலும் இருந்தால்எமதுநாடுஇலகுவாகஅபிவிருத்தியை நோக்கிச்செல்லும். ஆனால்துரதிஷ்டவசமாக மக்கள் அவர்களது வளங்களையும் உழைப்பையும் விற்கின்றனர்.

இங்கு வேலை பார்க்கும் பெற்றோர்களின் கடினஉழைப்பினாலேயேஇந்தக்கூட்டுத்தாபனம் முன்னோக்கிச் செல்கின்றது. மற்றைய நாடுகளில் செலவீனம் காரணமாக விரைவாகவே நிறுவனத்தை தனியார்மயப்படுத்திவிடுகிறார்கள்என்றார்.

1982 ஆம் ஆண்டு தலா 5 ஆயிரம் ரூபா வழங்குவதில் இருந்து ஆரம்பிக்கப்பட்ட இந்த நிகழ்வு தற்போது வருடத்துக்கு 60 ஆயிரம் ரூபாவாக வழங்கப்படுகின்றது. இதில் 30 ஆயிரம் என்ற ரீதியில் இரண்டு கட்டங்காளகப் பிரித்து வழங்கப்படவுள்ளது. 20162017 ஆம் ஆண்டு பல்கலைகழகத்துக்கு தெரிவான 25 மாணவர்களுக்கு இந்த புலமைபரிசில் வழங்கப்படவுள்ளது. (ரி2)



# வள ஊக்குவிப்புக்காக பாடசாலைகளுக்கு நிதி

கொழும்பு,செப்.1

பாடசாலையை அடிப்படையாகக்கொண்ட மானிட வள ஊக்குவிப்பு செயல்திட்டத்தின் ஆரம்பநிகழ்வுகல்விஅமைச்சின்கேட்போர் கூட மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது.

இந்தத் திட்டத்தை செயல்படுத்துவதற்காக 113தேசியபாடசாலைகளுக்குஇதன்போது காசோலைகள் வழங்கி வைக்கப்பட்டன.


மீதமாகவுள்ள 241 பாடசாலைகளுக்கும் குறித்த பாடசாலைகள் செயல்திட்ட அறிக்கையைபெற்றுக்கொடுத்தபின்புஅவற்றுக்கான காசோலைகள் வழங்கி வைக்கப்படவுள்ளன. 399 மாணவர்களுக்கு குறைவான தொகையைக் கொண்ட பாடசாலைகளுக்கு20ஆயிரம்ரூபாவும், 400முதல் 2 ஆயிரத்து 999 மாணவர்களைக் கொண்டபாடசாலைகளுக்கு3இலட்சரூபாவும், 3 ஆயிரம் மாணவர்களுக்கு அதிக தொகையைக் கொண்ட பாடசாலைகளுக்கு5இலட்சரூபாவும்வழங்கிவைக்கப்படவுள்ளது.

நிகழ்வில், கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம், கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஸ்ணன்ஆகியோர்கலந்து கொண்டனர். (ரி2)

# இரண்டு மாதங்களுக்கு யால சரணாலயம் பூட்டு

கொழும்பு,செப்.1

கொழும்பு, யாலதேசிய சரணாலயம் இன்று முதல் எதிர்வரும் இரண்டு மாதங்களுக்கு மூடப்படவுள்ளதாக வன ஜீவராசிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சந்தன சூரிய பண்டார தெரிவித்துள்ளார். நாட்டில் நிலவும் வறட்சியான காலநிலை மற்றும் வன விலங்குகளின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்தக் காலத்தில் அப் பகுதியிலுள்ள சுற்றுவிடுதிகளை மறுசீரமைப்புச் செய்தல் மற்றும் அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல் போன்ற பணிகளும் முன்னெடுக்கப்படவுள்ளன. எதிர்வரும் நவம்பர் மாதம் முதலாம் திகதியிலிருந்து சுற்றுலாப் பயணிகளுக்காக மீண்டும் சரணாலயம் திறக்கப்படும் எனவும் சந்தன சூரிய பண்டார தெரிவித்தார். (ரி2)




# வெகுவாகக் குறைந்துள்ள தரம் ஒன்றுக்கான அனுமதி

கொழும்பு,செப்.1

தரம் ஒன்றுக்கான அனுமதிகள் வெகுவாகக் குறைந்துள்ளதாகக்கல்விஅமைச்சின்அறிக்கைகள் குறிப்பிடுகின்றன.

இலங்கை முழுவதிலுமுள்ள ஆயிரத்து 100 பாடசாலைகளில் தரம் ஒன்றுக்கான அனுமதிகள் குறைவடைந்துள்ளன.

433 பாடசாலைகளில் ஒரு மாணவர்கூட அனுமதி கோரி வரவில்லை.

137 பாடசாலைகளில் தலா ஒரு மாணவரே அனுமதிக்கப்பட்டுள்ளார். 138 பாடசாலைகளில் தலா 2 மாணவரும் 176 பாடசாலைகளில் தலா 3 மாணவர்கள் என்ற அடிப்படையிலும் 223 பாடசாலைகளில் தலா 4 மாணவர்களுமே அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த ஆண்டு154சிங்களமொழிமூலப்பாடசாலைகளிலும், 259தமிழ்ப்பாடசாலைகளிலும் ஒரு மாணவரும் அனுமதி கோரி வரவில்லைஎனஅறிக்கைகள்தெரிவிக்கின்றன.

இதேவேளை 2017 ஆம் ஆண்டில் 30 பாடசாலைகளில்251மாணவர்கள்தரம்ஒன்றில் அனுமதிக்கப்பட்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ரி2)

# பெயர் உள்ளடக்கப்பட்டதை உறுதிப்படுத்த கோரிக்கை

கொழும்பு,செப்.1

தற்காலிக வாக்காளர் இடாப்பில் தத்தமது பெயர்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்று உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு தேர்தல்கள் ஆணைக்குழு பொது மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

வாக்காளர் இடாப்பு மாவட்டத் தேர்தல் அலுவலகம், பிரதேசசெயலகம் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள், கிராம சேவகர்அலுவலகங்களில்காட்சிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இது தவிர தேர்தல்கள் ஆணைக்குழுவின்www.elections.gov.lkஇணையத்தளத்திலும் வாக்காளர் இடாப்பில் தமது பெயர்கள் இருப்பதை உறுதிப்படுத்திக் கொள்ளமுடியும்என்றுஅந்தஆணைக்குழு கூறியுள்ளது. (ரி2)

# தேரர்கள் நால்வருக்கு பிடியாணை

அரசசொத்துக்களுக்குச்சேதம்ஏற்படுத்திய குற்றச்சாட்டுக் காரணமாகத் தேரர்கள் நால்வருக்கு எதிராகக் கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்துள்ளது.

பெங்கமுவெநாளகதேரர், மாகல்கந்தே சுதத்ததேரர், இத்தேகந்தேசத்தாதிஸ்ஸ தேரர் மற்றும் மெடில்லே பன்யலோக தேரர் ஆகியோருக்கு எதிராகவே பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு இடம்பெற்ற அங்கவீனமுற்ற இராணுவத்தினரின் போராட்டத்தின் போது அரச சொத்துக்களுக்குச் சேதம் ஏற்படுத்தியது தொடர்பிலான வழக்கில் இந்தத் தேரர்கள் சந்தேகநபர்களாக இனங்காணப்பட்டுள்ளனர். என்றுபொலிஸார்நீதிமன்றில்தெரிவித்தனர். இந்த நிலையிலேயே இவர்களுக்குஎதிராகப்பிடியாணைபிறப்பிக்கப்பட்டுள்ளது. (ரி2)

# 20 கிலோ தங்கத்துடன் இந்திய நாட்டவர் கைது

ஒருதொகைத் தங்கத்தைச் சட்ட விரோதமாக நாட்டுக்குக் கொண்டு வந்த இந்திய நாட்டவர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேகநபர் கட்டுநாயக்க வானூர்தி நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டார்.

குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மற்றும் பொலிஸ் போதைத்தடுப்புப் பிரிவினர் இணைந்து சந்தேகநபரை கைது செய்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

டுபாய் நாட்டில் இருந்து வருகை தந்துள்ள சந்தேகநபரிடமிருந்து 15 கோடி ரூபாவுக்கும் அதிக பெறுமதியுடைய சுமார்20கிலோகிராம்தங்கம்மீட்கப்பட்டதாகப் பொலிஸ் போதை தடுப்பு பிரிவினர் தெரிவித்தனர். (ரி2)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# யாருக்கு யார்விட்ட கணக்கு?

நேற்றைய பத்திரிகையில் வெளியாகி இருந்த இரு செய்திகள் கூர்ந்து நோக்கத்தக்கன. வெளிப்படையாகப் பார்க்கும்போது இந்த இரு செய்திகளுக்கும் இடையே தொடர்பு இருப்பதாகத் தெரியாதபோதும் அதன் உள்ளடக்கம் நெருக்கமான தொடர்பை அம்பலப்படுத்தி நிற்கின்றது. கண்ணாடி வீட்டுக்குள் இருந்து கல்லெறிந்த கதைக்கு ஒப்பானதொடர்பைக்கொண்டிருக்கின்றன அந்த இரு செய்திகளும்.

பெரும்பான்மைச் சமூகம் கணக்கு விடுவதைக் கட்டுப்படுத்தக்கூடிய, அதனைக் கண்காணிக்கக்கூடிய ஒரு தமிழ்த் தலைமை உருவாகவேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு என்று வடக்கு மாகாண முதலமைச்சர் பொது நிகழ்வு ஒன்றில் பேசினார் என்கிறது ஒரு செய்தி.

தமிழர்கள் கணக்கு வைத்துக்கொள்வதில் வல்லவர்கள் என்றும் சிங்களத் தலைவர்கள் தமிழர்களுக்கு கணக்கு விடுவதில் வல்லவர்கள் என்றும் கூறிய முதலமைச்சர், 2016ஆம் ஆண்டில் இந்தா அரசியல் தீர்வு வந்துவிடப் போகின்றது என்று எமது தமிழ்த் தலைவர்கள் கணக்குப் போட்டனர், ஆனால் இதுவரையில் போட்ட கணக்கு எடுபடவில்லை, தொடர்ந்தும்கணக்குவிட்டுக்கொண்டே இருக்கின்றது பெரும்பான்மையினம் என்றும் விளக்கம் சொன்னார்.

அவர் அப்படிக் குத்திக்காட்டியது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனைத்தான் என்பதைச் சிறுபிள்ளையும் புரிந்துகொள்ளும். 2016ஆம் ஆண்டு இறுதிக்குள் தீர்வை எட்டிவிட ஒரு சந்தர்ப்பம் வாய்த்துள்ளது என்று திரும்பத் திரும்பச் சொல்லி வந்தவர் அவர். ரணிலும் மைத்திரியும் சேர்ந்து அவருக்குக் கணக்குவிட்டு விட்டார்கள் என்பதையே முதலமைச்சர் மறைமுகமாகச் சொல்லிக்காட்டியுள்ளார்.

இப்படிப்பெரும்பான்மையினர்தொடர்ந்தும்தமிழர்களுக்குக் கணக்குவிட்டுவரும் நிலையில் அவர்களைக் கட்டுப்படுத்தவும் கண்காணிக்கவும் கூடிய ஒரு தமிழ்த் தலைமை உருவாகவேண்டும் என்பதே தனது எதிர்பார்ப்பு என்றும் அவர் கூறியிருக்கிறார். முதலமைச்சர் விக்னேஸ்வரன் தனித்துச் சென்று புதிய கட்சி அமைக்கப் போகிறார் என்றும்எதிர்வரும்தேர்தல்களில்தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு அல்லாத புதிய கூட்டணி ஒன்றின் ஊடாக அவர் தேர்தலை எதிர்கொள்வார் என்றும் செய்திகள் அடிபட்டுவரும் நிலையில்சிங்களவர்களைக்கட்டுப்படுத்தவும்கண்காணிக்கவும் கூடிய ஒரு தமிழ்த் தலைமை உருவாகவேண்டும் என்று அவர் கூறியிருப்பது ஒருவேளை தன்னை மனதில் வைத்துத்தானகவும் இருக்கக்கூடும்.

ஆனால், உண்மையில் அவர் அப்படித் தன்னை முன்னிறுத்தி அந்தக்கருத்தைக்கூறியிருப்பாரா என்கிற கேள்வியை எழுப்புவதாகத்தான் அந்த இரண்டாவது செய்தி வருகிறது. வடக்கு மாகாணத்துக்குள் காற்றாலை ஒன்றை அமைத்த நிறுவனங்கள் இரண்டு வருடங்களில் 2 ஆயிரத்து 933.8 மில்லியன் ரூபாயை வருமானமாகப் பெற்றிருக்க தமது சமூகக் கடப்பாட்டுக் கொடுப்பனவாக வடக்கு மாகாண சபைக்கு 20 ஆண்டுகளுக்காக 430 மில்லியன் ரூபாயை மட்டுமே வழங்கியிருக்கின்றது என்கிற விவகாரம் வடக்கு மாகாண சபையில் சர்ச்சையாகியிருப்பது பற்றித் தெரிவிக்கின்றது அந்தச் செய்தி.

முதலமைச்சரின் வழியில் சொல்வதானால், சி.வி.விக்னேஸ்வரன் உள்ளிட்ட வடக்கு மாகாண அமைச்சரவையினருக்கு கணக்குவிட்டு விட்டது அந்தக் காற்றாலை நிறுவனம்.

தனது பேச்சில்முதலமைச்சர்விக்னேஸ்வரன் இந்தத்தனது பரிதாபத்தைத்தான் நினைத்து நெஞ்சுருகினாரோ, கணக்குவிடும் சிங்களவர்களைக்கட்டுப்படுத்தும் ஒருதலைமை வேண்டும் என்று உரைத்தாரோ யாரறிவார். அவருக்கும் கூட்டமைப்புக்கும் இடையில் இருக்கும் பிணக்குகள், சர்ச்சைகள், மோதல்கள் காரணமாக அவர் கூட்டமைப்பின் தலைவர்களை இப்படி எள்ளி நகையாடுகிறார் என்று நாம் தான் அவசரப்பட்டுத் தப்பாகக் கணக்குப்போட்டுவிடுகின்றோம் போலுள்ளது.

எது எப்படியிருந்தாலும் ''உன்னைவிட நான் திறம்'' என்கிற வகையில் ஒருவரை ஒருவர் வாரி இழுத்துவிடும் தமிழர்களும்தலைவர்களும் இருக்கும் வரையில்சிங்களவர்கள் தமிழர்களுக்குக்கணக்குவிட்டுக்கொண்டேதான் இருக்கப் போகிறார்கள். அதில் மாற்றம் வரப்போவதில்லை.



# தமிழர்கள் மீதான நெருக்கடிகள் பூரண சுதந்திரத்துக்கு வழிவகுக்குமா?

இந்துமதி

தமிழர்களின் பூர்வீக நிலங்களில் அரசின் பூரண ஆசீர்வாதத்துடன் தொடர்ந்து சிங்களக் குடியேற்றங்கள் இடம்பெறுவதை எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் அமைந்துள்ளது கருநாட்டுக்கேணி என்ற தூய தமிழ்ச் சொற்களால் அடையாளப்படுத்தப்பட்டுவரும் அழகிய கிராமம். இங்கு தமிழ் மக்கள் நீண்ட காலமாக வாழ்ந்து வருகின்றனர். இனமோதல்கள் காரணமாக இந்த மக்கள் 1984ஆம் ஆண்டு அரச படைகளால் பலவந்தமாக அங்கிருந்து வெளியேற்றப்பட்டனர். 2010ஆம் ஆண்டுவரை இந்த மக்கள் இடம்பெயர்ந்த நிலையில் அவல வாழ்வை வாழ்ந்து வந்தனர். படையினர் அனுமதித்ததால் 2010ஆம் ஆண்டில் தமது சொந்த இடங்களுக்குத் திரும்புவதற்கு அவர்களால் முடிந்தது. ஆனால் அவர்களால் அங்கு நிம்மதியாக வாழமுடியவில்லை. பெரும்பான்மையின மக்கள் அத்துமீறி அங்கு குடியமர்ந்ததால் தமிழ் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டனர். இது தொடர்பாக கரைத்துறைப்பற்று பிரதேச செயலரால் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கப்பட்டது. அந்த வழக்கு நிலுவையில் உள்ள நிலையில் காணிகளை ஆக்கிரமித்தவர்களுக்கு மகாவலி அதிகார சபையினால் காணி அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

**அரச தலைவரது வாக்குறுதிக்கு முற்றிலும் மாறாகச் செயற்படுகிறது மகாவலி அதிகாரசபை**

யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்து மயிலிட்டித் துறைமுகத்தின் புனரமைப்புப் பணிகளை அரச தலைவர் ஆரம்பித்து வைத்திருந்த நிலையில் அவரது நேரடிக் கண்காணிப்பின் கீழ் இயங்கும் மகாவலி அதிகாரசபை, தமிழ் மக்கள் வாழ்கின்ற பகுதியில் அத்துமீறிக் குடியமர்ந்த சிங்கள மக்களுக்கு காணி அனுமதிப்பத்திரங்களை வழங்குகின்றமை தமிழ் மக்கள் மத்தியில் பெரும் சினத்தை ஏற்படுத்தியுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டம் சிங்களக் குடியேற்றங்களால் தமிழர்களிடமிருந்து பறிபோவதை எந்த வகையிலும் தமிழர்களால் ஏற்றுக்கொள்ள முடியாது. கட்சி ரீதியாகவும், கொள்கை ரீதியாகவும் பிளவுண்ட நிலையில் ஒருவரையொருவர் குறை கூறுவதிலும், தூற்றுவதிலும் காலத்தைக் கடத்திக் கொண்டிருக்கும் தமிழ், அரசியல்வாதிகள் கருநாட்டுக்கேணியில் இடம்பெறுகின்ற அநீதியைத் தட்டிக் கேட்பதற்கு முன்வந்து போராட்டங்களில் ஈடுபடுவது பயனுள்ளதாகவிருக்கும்.

வடக்கு மாகாணசபை இதில் முக்கிய பங்கை வகிக்க முடியும். முதலமைச்சர் தலைமையில் மாகாண சபை உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றுதிரண்டு கருநாட்டுக்கேணியில் இடம்பெற்றுக்கொண்டிருக்கும் அநீதிக்கு எதிராக சாத்வீகப் போராட்டங்களில் ஈடுபட முடியும்.

தமிழர் பகுதிகளை ஆக்கிரமித்து சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுத்துவது ஆட்சியாளருக்கு வழக்கமாகப்போய்விட்டது. கிழக்கில் ஆரம்பித்த நில ஆக்கிரமிப்பும், சிங்களக் குடியேற்றங்களும் வடக்கிலும் இடம்பெறுகின்றன. இதைத் தடுக்க முடியாத நிலையில் தமிழ் அரசியல்வாதிகள் காணப்படுகின்றனர்.

**அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடும் தென்பகுதி மீனவர்களது அடாவடித்தனம் தொடர்கிறது**

இதேவேளை முல்லைத்தீவு மற்றும் யாழ்ப்பாண மாவட்டங்களில் அத்துமீறி நுழைந்து சட்டவிரோதமான முறையில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுவரும் தென்பகுதி மீனவர்களால் பெரிய அளவில் பிரச்சினை தலைதூக்கியுள்ளது. தமிழர்களுக்குச் சொந்தமான மீன்வாடிகள், மீன்பிடி உபகரணங்கள் ஆகியவை தீயிட்டுக் கொழுத்தப்பட்டதால் பல இலட்சம் ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளது. இதையடுத்து அங்கு சட்டவிரோதமாகத் தங்கியிருந்த தென்பகுதி மீனவர்கள் பொலிஸ் பாதுகாப்புடன் அவர்களது சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை யாழ்ப்பாண மாவட்டத்தில் சட்டவிரோதமாகத் தங்கியிருந்து மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுவரும் தென்பகுதி மீனவர்களை உடனடியாக வெளியேறுமாறு கடற்தொழில் அமைச்சர் அதிரடி உத்தரவொன்றைப் பிறப்பித்துள்ளார் என்று செய்திகள் தெரிவிக்கின்றன. ஆனால் இந்த உத்தரவுக்கு எந்த அளவுக்கு மதிப்பு வழங்கப்படும் என்பதில் சந்தேகம் நிலவுகின்றது.

**தமிழ்ப் பகுதிகளில் புத்தர் சிலைகளை நிறுவும் முயற்சிக்கு தடை ஏற்படுத்தப்படுவதாக குற்றச்சாட்டு**

எல்லைமீறி இடம்பெறுகின்ற சிங்களக் குடியேற்றங்களால் தமிழர்கள் செய்வது அறியாமல் தவித்துக் கொண்டிருக்கும் நிலையில், வடக்கிலும், கிழக்கிலும் பௌத்த விகாரைகளை அமைக்க முடியாமல் தடைகள் ஏற்படுவதாக பௌத்த தேரர்கள் சிலர் அரசதலைவரிடமும், தலைமை அமைச்சரிடமும் முறையிட்டுள்ளனர். தமிழர் பிரதேசங்களில் பௌத்தர்களே இல்லாத இடங்களில் மிகப்பெரிய புத்தரின் சிலைகளும், விகாரைகளும் அமைக்கப்பட்டுள்ள நிலையில் இவ்வாறு விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளமை கேலிக்குரியதொன்று.

எந்தவோர் இனத்தின் உரிமைகளையும் ஓர் அளவுக்கு மேல் பறித்தெடுக்க முடியாது. மென்மேலும் அந்த இனத்தவரின் உரிமைகளைப் பறிக்க முற்படுவது அவர்களின் சுயாட்சிக்கு வழிவகுத்துவிடும். தென்னாபிரிக்காவில் நடந்தவை இதற்கு சிறந்த உதாரணங்கள் 1971ஆம் ஆண்டு பாகிஸ்தான் படைகள் கிழக்குப் பாகிஸ்தானில் புரிந்த அட்டூழியங்கள் சுதந்திரமான பங்களதேஷ் என்ற நாடு உருவாகுவதற்கு வழி வகுத்தது.

இலங்கையிலும் தமிழர்கள் பல்வேறு வகைகளில் துன்பங்களை எதிர்கொண்டு வருகின்றனர். இறுதிப்போர் அவர்களது ஆன்மாவையே சிதைத்து விட்டது. அதன் பின்னரும் அவர்களுக்கு நிம்மதி கிடைக்கவில்லை. எதற்கும் போராடவேண்டிய நிலை யில் தான் அவர்கள் உள்ளனர். இதேநிலை தொடர்ந்து நீடிக்க முடியாது. இதனால் அவர்களுக்கு சுயாட்சி அல்லது தனிநாடு கிடைப்பதற்கான வாய்ப்பு ஏற்பட்டாலும் அதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை.

# வறுமையுடன் போராட்டம்

தேவநாயகம் தேவானந்த்



## தமிழ்த் தலைவன் மு.கருணாநிதி -23

கருணாநிதிதனதுமொழிப்பற்றாலும், மொழியாற்றலாலும் தமிழ்மொழிக்குஅளப்பரியபங்களிப்பைச் செய்துள்ளார் என்பதுவரலாறாகும். பலருக்குமொழிப்பற்றிருந்தாலும், மொழிக்குப்பங்களிப்பு செய்யுமளவக்கு மொழியறிவோ ஆற்றலோ இருப்பதில்லை. இது இரண்டையும் ஒருங்கே பெற்றதால் தான் அரசியல் அரங்கிலும் மிளிர்ந்து அதேவேளை தன்னைத் தமிழ் தலைவனாக கருணாநிதி நிலைநிறுத்தி யிருகிறார்.

**தமிழ்மொழியின் சிறப்புக் குறித்த கருணாநிதியின் சிலாகிப்பு**

ஹிந்தியெதிர்ப்புப் போராட்டத்தில் அவர் தமிழ் மொழிபற்றிக் குறிப்பிட்ட கருத்து, இன்றுநன்குகவனிக்கத்தக்கது."ஹிந்தி என்பது உணவு விடுதியிலிருந்து எடுத்துச் செல்லும் உணவு, ஆங்கிலம் என்பது ஒருவர் சொல்ல அதன்படி சமைக்கப்பட்ட உணவு, தமிழ் என்பது குடும்பத் தேவையறிந்து,விருப்பமறிந்து, ஊட்டமளிக்கும் தாயிடமிருந்து பெறப்பட்டஉணவு"என்று குறிப்பிடுகிறார். தனது மூளையே தனக்கு "டைரி" என்பார் கருணாநிதி. அந்த அளவுக்கு ஞாபக சக்தி கொண்டவர் அவர். சங்க இலக்கியங்கள், பழந்தமிழ் இலக்கியங்கள் அத்தனையும் அவருக்கு அத்துப்படி. எப்போதும் அவற்றிலிருந்து மேற்கோள்கள்காட்டிப் பேசுவார்; எழுதுவார். அவரது தனிப்பட்ட நூலகத்தில் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட நூல்களைச் சேகரித்து வைத்திருந்தார்.

சி.என்.அண்ணாத்துரையின்மறைவின் முதலாவது நினைவு நாளைமுன்னிட்டு இந்திய மத்திய அரசு அவரது ஒளிப்படத்துடன் தபால் முத்திரை வெளியிட்டது. அப்போது, அண்ணாத்துரையின் கையெழுத்தையும் அந்த ஒளிப்படத்தின் மீது இடம்பெறச் செய்தார் கருணாநிதி. "அப்போதுதான் தமிழ் எழுத்துகள் அந்த தபால் தலையில் இருக்கும்" என்றார். கருணாநிதி தனது இளமைக்காலத்தில் தேவைக்குப் பணம் கிடைக்காது மிகவும் கஷ்ரப்பட்டார்.

வாழ்க்கையை ஓட்டுவதற்குபணமில்லாது திண்டாடினார். பொதுவுடமை மீதுதீராதபற்றுக் கொண்டிருந்தார். ஆதனால்தான் தனது மகனுக்கு ஸ்ரா லின் என்றுபெயர் வைத்தார். தனது வறுமை பற்றி கருணாநிதி பல இடங்களில் தனது கருத்துக்களைப்பதிவு செய்திருக்கிறார்.

**வருமானம் போதாமையால் வாழ்க்கையில் சிரமப்பட்ட கருணாநிதி**

தனதுதிருமணச்செலவுக்காக நாடகம் நடத்தி, அதிலிருந்து கிடைத்தபணத்தில் தான் திருமணம் செய்துகொண்டார். இதைஅவரேபதிவுசெய்துமிருக்கிறார்.



''எனது திருமணச் செலவுக்காகநான் எழுதிய தூக்குமேடை நாடகத்தைஅண்ணாவின் தலைமையில் திருச்சியில் நடத்தினேன். நானே நடத்தினேன்.

எவரிடமும்நாடகத்திற்காக நன்கொடை வசூலிக்கவில்லை. நாடகத்தில் செலவுபோக மீதித் தொகை எண்ணூறு ரூபாய்." எனக் குறிப்பிட்டுள்ளார்.

கருணாநிதி தனது திருமணத்தின் பின்னர் குடும்பத்தை நடத்தமிகவும் சிரமப்பட்டிருக்கிறார். தனது நாற்பது ரூபா சம்பளத்தில் தனது மனைவிக்கு ஐந்து ரூபாதான் அவரால் அனுப்ப முடிந்திருக்கிறது. அதையும் அவர் பதிவு செய்திருக்கிறார்.

"குடியரசு பத்திரிகையின் துணை ஆசிரியனாக இரு" என்று பெரியார் பணித்ததோடு மட்டுமல்லாமல்,அந்த இதழில் என்னைக் கட்டுரைகள் எழுத அனுமதித்து அதைப் படித்து மகிழ்ந்தார். எனக்கு மாதம் நாற்பது ரூபாய் சம்பளம். அதில் பிற்பகலும் இரவும் பெரியார் வீட்டில் சாப்பிடுவதற்காக இருபது ரூபாய் பிடித்துக் கொள்வார்கள். காலைச் சிற்றுண்டி, மாலைச் சிற்றுண்டிக்கு மாதம் பத்து ரூபாய் ஆகிவிடும். இதர செலவுகள் ஐந்து ரூபாய். மீதம் ஐந்து ரூபாயை என்னை அண்டிவந்த அருமை மனைவி பத்மாவுக்கு மாதந்தோறும் திருவாரூருக்கு காசுக்கட்டளை மூலம் அனுப்பி வந்தேன்.'

கையில் பணம் இல்லாததால் கவியரசு கண்ணதாசனும் கருணாநிதியும் பட்டினி கிடந்து பயணம் செய்தமை பற்றிய குறிப்புக்களும் உண்டு.

'என்னிடமிருந்த மணி பர்ஸை (பணப்பையை) கண்ணதாசனிடம் கொடுத்து சேலத்திற்கு இரண்டுடிக்கட் வாங்கக் சொன்னேன். டிக்கட் வாங்கிக் கொண்டு, கண்ணதாசன் மணிப்பர்சை என்னிடம் திருப்பிக் கொடுத்தார்.

என்னய்யா, பர்ஸ் காலியாக இருக்கிறதே என்றுகேட்டேன். இரண்டாம் வகுப்பு பயணச்சீட்டுக்கு உமது பணம் சரியாக இருந்தது என்று கூறினார். ஐயையோ உம்மையார் இரண்டாம் வகுப்புடிக்கட் வாங்கச் சொன்னது? மூன்றாம் வகுப்புப் பயணச்சீட்டு போதாதா என்று நான் சலித்துக் கொண்டேன்.' என்றுகருணாநிதி குறிப்பிடு கிறார்.

**ஏழைகளை ஏமாற்றிப் பணம் தேடுவோரை தமது கவிதைகள் மூலம் சாடிய கலைஞர் கருணாநிதி**

இதனாலோ என்னவோ ஏழைகள் வயிற்றில் அடித்து, பணத்தைக் கொள்ளையடிப்பது குறித்து கருணாநிதி ஆவேசமாகக் கவிதைகள் எழுதியுள்ளார். அதில் ஒரு கவிதை வருமாறு.

*மந்தமாருதத் தாலாட்டில் உறங்குதற்கு*
*மாடமாளிகைகட்டிவாழ்கின்றபெரியீர் !*

*பணம் பணம் பணமென்றுபாட்டாளியின்*
*வியர்வையிலே தினம் தினம் குளியல்*
*நடத்திக் குவிக்கின்றீர் செல்வத்தை !*

*பிணம் தின்னும் கழுகுபோலநீவிர்;*
*பெருக்கவைக்கின்றீர் உமதுவயிற்றை !*

*இருள் சூழ்ந்தவாழ்க்கையிலே*
*ஏழைகளைத் தள்ளிவிட்டு பொருள் தேடி*
*அலைகின்றீர்: போதுமென்றமனதின்றி!*

*வாழ்வில் பெருக்கல் ஒன்றையே*
*குறிக்கோளாய்க் கொண்டோரே ;*
*வார்த்தையொன்றுகேட்கின்றேன் பதில்*
*சொல்வீர்!!*

*மாணிக்கப் பொரியலும் மரகதக்*
*கூட்டுமா இலையிலிட்டு உண்கின்றீர்?*
*வைரத்தால் வறுவல் செய்துவைடூர்ய*
*அவியலுடன் முத்துப் பவளமெனும்*
*மணிகளால் செய்திட்டஅரிசியையா*
*குத்திஉலையிலிட்டுக்*
*குடற்பையைநிரப்புகின்றீர்?*

*உண்பதுநாழி; உடுப்பவை இரண்டேயெனும்*
*உண்மைதனைஉணர்ந்தபின்னும்,*
*வறுமையில் பலர் வாட வளமிகுசெல்வப்*
*பெருமையில் சிலர் ஆடல் நீதிதானோ?*

*தனக்கேஎலாம் எனும் தனியுடமைதகர்த்துத்*
*தரித்திரத்தைவிரட்டுவதற்குத் தக்க வழி காண*
*பகுத்துண்டுபல்லுயிர் ஓம்பும்*
*பொதுமைக் கொள்கையை*
*வகுத்தளித்துவையத்தில் இன்பம் காண்பது*
*தான் வாழ்வெடுத்தபயனாகும்...!*

என்று கவி பாடியகருணாநிதிபின்னாளில், பலஆயிரம் கோடிக்குச் சொந்தக்காரரானார். அவரதுசொத்துவிபரங்களை பிற தொருபகுதியில் பார்ப்போம்.

(தொடரும்)

## ஆசிரியருக்கான கடிதம்

# ஊடக கலாசாரம் கைவிடப்பட்டு விட்டதா?

நான் ஒரு அச்சு ஊடகப்பிரியன். குறிப்பாக யாழ் குடாநாட்டில் இருந்து வெளிவரும் தினசரிப் பத்திரிகைகள் மற்றும் வாரப்பத்திகைகளை அனேகமாக வாசிப்பதுண்டு. ஊடகங்கள் மக்களை (வாசக நெஞ்சங்களை) நல்வழி நடக்க சிந்தித்துச் செயற்பட வைக்க பெரும் பங்காற்றுகின்றன என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை.ஆனால் எனது மனதுக்கு வேதனை தரும் விடயமொன்றை பதிவு செய்யவிரும்புகின்றேன். ஒருசில வாரப்பத்திரிகைகள் தமது சினிமாப் பகுதியில் மிகவும் இழிவான மோசமான கவர்ச்சிப் படங்களை வெளியிடுவது வேதனையிலும் வேதனை. சினிமா ஆர்வலர்களை புண்படுத்துவது எனது நோக்கமல்ல. சினிமாவை ஒரு பகுதியாக வெளியிடுங்கள். ஆனால் அந்தப் பகுதியில் வெளியிடும் ஒளிப்படங்களை எமது கலாசார தமிழ் முறைப்படி பிரசுரம் செய்தால் மிகவும் சிறப்பாக இருக்கும். ஒரு காலகட்டத்தில் தமிழீழ திரைப்படத் துறையினர் சினிமாப் படங்களின் பலகாட்சிகளை தணிக்கை செய்து வெளியிட்டதையும் நாம் மறந்துவிடலாகாது. அண்மையில் ஒரு வாசகர் வாரப்பத்திரிகையொன்றை வாங்கி கடைவாசலில் வைத்தே பத்திரிகையின் அந்தச் சினிமா பகுதியை தனியாகப் பிரித்தெடுத்து வெளியில் வீசி எறிந்து விட்டார். அவரிடம் அது பற்றி கேட்டபோது, இந்தப் பகுதியை வீட்டுக்கு எடுத்துக்கொண்டு செல்லக்கூடாது எனப் பதிலளித்தார். ஏன்தான் இப்படியான படங்களை வெளியிடுகிறார்கள்? பத்திரிகை விற்பனை கூடுதலாக நடைபெறுமென்றா என சில வாசகர்கள் கேள்வி எழுப்புகின்றனர். நான் ஒரு அச்சு ஊடகப்பிரியன் என்ற ரீதியில் வாரப்பத்திரிகைகள் சிலவற்றுக்கு விடுக்கும் தாழ்மையான வேண்டுகோள் சினிமா குறித்த செய்தியினைப் பிரசுரம் செய்யுங்கள். ஆனால் அவை தரமாகப் பார்க்கக்கூடியதாக இருக்க வேண்டும். மிகவும் இழிவான சீரழிவான புகைப்படங்களை பிரசுரம் செய்யாமல் விட்டு விடுங்கள்.

*அ.அன்பு , வரணி*

## ஈராக்கில் தாக்குதல் 11 பேர் உயிரிழப்பு

பக்தாத், செப். 1
ஈராகின் அன்பர் மாகாணத்தில் அமைக்கப்பட்டிருந்த இராணுவச் சோதனைச் சாவடியை இலக்குவைத்து நேற்று நடத்தப்பட்ட தாக்குதலில் 11 பேர் உயிரிழந்தனர். ஈராக், சிரிய நாடுகளின் எல்லைப் பகுதியில் அன்பர் மாகாணம் அமைந்துள்ளது. ஈராக்கில் இருந்து ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு முழுவதுமாக வெளியேற்றப்பட்டுள்ள போதிலும் சிரியாவில் இருந்துகொண்டு ஈராக்கின் எல்லைப் பகுதிகளை அந்த அமைப்பு அவ்வப்போது இலக்குவைக்கும். அவ்வாறாக முன்னெடுக்கப்பட்ட தாக்குதலிலேயே 11 பேர் உயிரிழந்தனர். மேலும் சிலர் காயங்களுடன் சிகிச்சை பெற்று வருகின்றனர். அவர்களில் சிலரின் நிலமை கவலைக்கிடம் என்றும் சொல்லப்படுகிறது. (ம)



## நபி குறித்த கார்ட்டூன் போட்டிக்கு இம்ரான்கான் கண்டனம்


நெதர்லாந்து நாடாளுமன்ற உறுப்பினர் கீரட் வில்டெர்ஸ் என்பவர் நடத்தும் மொகமது நபி குறித்த கார்ட்டூன் போட்டிக்கு பாகிஸ்தானின் தலைமை அமைச்சர் இம்ரான்கான் கண்டனம் தெரிவித்தார்.
"இவை போன்ற செயல்களால் முஸ்லிம்கள் மிகவும் பாதிக்கப்படுவது அவர்களுக்குத் தெரிவதில்லை. வில்டெர்ஸின் நடவடிக்கையைக் கண்டித்து ஆளும் தெக்ரிக் இ இன்சாப் கட்சியின் சார்பில் கண்டனப் பேரணியொன்று நடத்தப்படவுள்ளது" என்றும் அவர் குறிப்பிட்டார்.
ஐ.நா. சபை உள்ளிட்ட பன்னாட்டு அமைப்புக்களிடமும் இந்த விவகாரம் குறித்து முறையிடப்பட்டுள்ளது. நெதர்லாந்து அயலுறவுத்துறையின் கவனத்துக்கும் இந்த விவகாரம் பாகிஸ்தானால் கொண்டு வரப்பட்டுள்ளது. (ம)



# சூகி பதவி விலகியிருக்க வேண்டும்: சையிட் அல் ஹுசைன் வெளிப்படை



வொஷிங்டன், செப். 1
"ரொஹிங்யர்கள் விவகாரத்தில் மியன்மார் இராணுவத்துக்குக் கண்டனம் தெரிவித்து சூகி பதவி விலகியிருக்க வேண்டும்" என்று தெரிவித்துள்ளார் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளர் பதவியை நிறைவு செய்கின்ற சையிட் அல் ஹுசைன்.
மியன்மாரில் ரொஹிங்யர்கள் இனச் சுத்திகரிப்புக்கு உள்ளாக்கப்பட்டனர் என்று கடந்த திங்கட்கிழமை உத்தியோகபூர்வமாக அறிவித்தது ஐக்கிய நாடுகள் சபை. இதையடுத்து நாளுக்குநாள் ரொஹிங்யர்களின் விவகாரம் பூதாகரமாகி வரும்நிலையில் இவ்வாறு குறிப்பிட்டார் ஹுசைன்.
"ஆங் சான் சூகி நோபல் பரிசில் வென்றவர். அதற்குரிய கனதித் தன்மையை அவர் கொடுத்திருக்க வேண்டும். இராணுவத்தின் குற்றச்சாட்டுக்களை மூடி மறைத்ததை விட அவர் மீண்டும் வீட்டுக் காவலைக்கூட தெரிவுசெய்திருக்கலாம். "நான் பெயரளவில் நாட்டின் தலைவராக இருக்கத் தயாராக உள்ளேன். ஆனால், இந்த நிபந்தனைகளின் கீழ் அல்ல. எனவே, மிக்க நன்றி. நான் பதவி விலகுகிறேன். வீட்டுச் சிறைக்கு திரும்புகிறேன். இந்த வன்முறைகள் நடந்திருப்பதற்கும் எனக்கும் தொடர்பு இருப்பதாக பிறர் நினைக்கலாம் என்று சூகி கூறியிருக்க வேண்டும்" என்று மேலும் தெரிவித்தார் சையிட் அல் ஹுசைன். (ம)



# இமாலய அணை உடைந்து 85 கிராமங்களில் வெள்ளம்

## மியன்மாரில் துயரம்

நைபிட்டோ, செப். 1
மியன்மாரில் மிகப்பெரும் அணையொன்று உடைந்ததில் 85 கிராமங்களை வெள்ளம் சூழ்ந்தது. மியன்மாரின் மத்திய மாகாணத்தில் உள்ள 65 ஆயிரம்பேர் வீடுகளை இழந்து தவித்து வருகின்றனர். வயல்கள், வீடுகள், வீதிகள் என்று எங்குபார்த்தாலும் வெள்ளக்காடாகக் காட்சி தருகிறது. சிறிய படகுகளில் மீட்புப் பணிகள் இடம்பெற்று வருகின்றன. அளவுக்கு அதிகமான தண்ணீரைச் சேமித்து வைத்ததால்தான் இந்த வெள்ள இடர் ஏற்பட்டது அணை உடைந்தது என்று அறிவிக்கப்பட்டது. இந்த விடயம் தொடர்பில் விசாரணைகளும் ஆரம்பமாகியுள்ளன. (ம)

# ரக்கா... தேடப்...

## தீவீரமாக முன்...

டமஸ்கஸ், செப். 1
ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் தலைவர் அபூபக்கர் அல் பக்தாதி, சிரியாவின் ரக்கா நகரில் உள்ள சுரங்கங்களில் தேடப்படுகிறார். அதிலும் இந்தத் தேடல் நடவடிக்கைகளில் அமெரிக்கா உச்சக்கட்டமாக ஈடுபட்டு வருகிறது என்று தெரியவருகிறது.
ஐ.எஸ்.ஐ.எஸ். (ஈராக், சிரிய இஸ்லாமிக் ஸ்ரேட்) அமைப்பின் தலைவர் அபூபக்கர் அல் பக்தாதியின் குரல் என்று நம்பப்படுகின்ற ஒலிப்பதிவு ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் இணையத்தளத்தில் கடந்த மாதம் 22ஆம் திகதி வெளியிடப்பட்டது. அந்த ஒலிப்பதிவில், "எமது அமைப்பினர் பயத்துடனும், பசியுடனும் உள்ளனர். ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு சமீபத்தில் பல தோல்விகளைச் சந்தித்துள்ளது. இது கடவுள் எம்மைச் சோதிக்கும் காலம். இதை பொறுமையுடன் கையாள வேண்டும். நிச்சயம் இறைவன் பொறுமையாக இருப்பவர்களுக்கு நற்செய்தியை அறிவிப்பார்" என்று ஒலிவடிவத்தில் ஓர் உரை இடம்பெற்றிருந்தது. இதையடுத்து பக்தாதி உயிருடன் உள்ளார் என்று செய்தி வெளியிட்டன, பன்னாட்டு ஊட...



பிரான்ஸ், பிரிட்ட...
தமக்கிடையில் பே...
பன்னாட்டு ஊடக...


# தென்கொரியாவுடன் இராணுவப் பயிற்சி தற்போ...

## அமெரிக்க அதிபர் ட்ரம்ப் தெரிவிப்பு

வொஷிங்டன், செப். 1
தென்கொரியாவுடன் இராணுவப் போர்ப் பயிற்சியில் அமெரிக்கா ஈடுபடுவதென்பது தற்போது அவசியம் இல்லாததொன்று என்று தெரிவித்தார் அமெரிக்க அதிபர் ட்ரம்ப்.
வடகொரியா பன்னாட்டுச் சட்டதிட்டங்களை மீறிய வகையில் தொடர்ந்து அணுவாயுதங்களைச் சோதித்து வந்தது. இதனால் அமெரிக்காவுக்கும் வடகொரியாவுக்கும் இடையில் தீராப் பகை நிலவியது. இந்த நிலையில் எவரும் எதிர்பாரா விதமாக அமெரிக்க அதிபர் ட்ரம்ப் - வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன் இருவரும் சிங்கப்பூரில் அண்மையில் சந்தித்தனர். இந்தச் சந்திப்பின்போது தன்னிடத்தில் உள்ள அணுவாயுதங்களை அழிப்பதற்கு உறுதிபூண்டது வடகொரியா. எனினும் வடகொரியா அணுவாயுதங்களை அழித்ததாக இல்லை. இதனால் ட்ரம்ப் தான் வழங்கிய வாக்குறுதியையும் கைவிட்டு தென்கொரியாவுடன் அமெரிக்க இராணுவத்தைப் போர்ப் பயிற்சியில் ஈடுபடுமாறு அறிவுறுத்துவார் என்று கருதப்பட்டது. இந்த நிலையில் தென்கொரியாவுடனான போர்ப் பயிற்சி தற்போது அவசியமற்றதொன்று என்று தெரிவித்தார் அவர்.
"வடகொரிய அதிபருடன் தற்போதும் நல்லதொரு உறவுள்ள... வுடனான போர்ப்... மற்றது" என்று... அதேநேரம், "வ... தைக் கைவிடா... ஒரு காரணம்... மீறிய வகையில்... தேவையான அ... கிறது" என்றும்...

# ...ச் சுரங்கங்களில் ...படுகிறார் பக்தாதி

## ...னெடுக்கிறது அமெரிக்கா




...கங்கள். அவ்வாறு அவர் உயிருடன் இருந்தால் சிரியாவில்தான் இருக்க வாய்ப்புள்ளது. இதன்படி ரக்கா, பல்மைரா, டமஸ்கஸ், ஹோம்ஸ் ஆகிய நகர்களில் ஒன்றில்தான் பக்தாதி இருக்கவேண்டும் என்று கருதப்படுகிறது. ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் கோட்டையாக விளங்கிய ரக்காவில் பக்தாதி இருக்க வாய்ப்புள்ளது என்பதால் அங்கு அமெரிக்கா தீவிரத் தேடலில் ஈடுபடுகிறது என்கின்றன உத்தியோகபூர்வமற்ற தகவல்கள். ஆளில்லா வானூர்திகளும் இந்தத் தேடலில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன என்று கருதப்படுகிறது.

சிரியாவின் ரக்கா அருகே கடந்த வருடம் ஜுன் மாதம் 28ஆம் திகதி ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் முக்கியத் தலைவர்கள் பங்கேற்ற கூட்டம் நடந்தது. அப்போது சுகோய் ரக போர் வானூர்திகள் மூலம் அவர்கள் குழுமியிருந்த பகுதியில் சுமார் 10 நிமிடம் வான்வழித் தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் பக்தாதியும் 30 முக்கிய தளபதிகளும் உயிரிழந்தனர் என்று ரஷ்யா உறுதிப்படுத்தியது. எனினும் அமெரிக்கா அதை மறுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)



...ரிட்டன் நாடுகளைச் சேர்ந்த மீன்பிடிப் படகுகளில் இருந்த மீனவர்கள் ஆங்கிலக் கால்வாயில் நேற்றுமுன்தினம் முரண்பட்டு ...ல் மோதிக்கொண்டனர் என்கிற செய்தி பரப்பரப்பாகியிருந்த நிலையில் அது தொடர்பான ஒளிப்படத்தை வெளியிட்டது ...ஊடகமான ரொயிட்டர்ஸ். (ம)

# ...போதைக்கு அவசியம் அற்றதொன்று



...வுள்ளது. எனவே தென்கொரியா ...போர்ப் பயிற்சி தற்போது அவசிய ...ன்று ட்ரம்ப் குறிப்பிட்டுள்ளார். ... "வடகொரியா அணுவாயுதத் ...விடாமல் இருப்பதற்கு சீனாவும் ...னம். பன்னாட்டுத் தடைகளை ...கயில் சீனா வடகொரியாவுக்குத் ...ன அனைத்தையும் வழங்கி வரு...றும் ட்ரம்ப் குறிப்பிட்டார். (ம)



# தி.மு.கவில் இணைவதற்கு ஸ்டாலின் முட்டுக்கட்டை

## அழகிரி குற்றச்சாட்டு

சென்னை, செப். 1

"தி.மு.கவில் என்னைச் சேர்க்க தி.மு. கழகத்தின் தலைவர் ஸ்டாலின் விரும்பவில்லை. அவரே முட்டுக்கட்டையாக உள்ளார்'' என்று தெரிவித்தார் மு.க. அழகிரி. அழகிரியின் இல்லத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார் அவர்.

"என்னைத் தி.மு.கவில் மீண்டும் சேர்க்க வேண்டுமென நான் கோரி வருகிறேன். ஆனால் அதற்கு ஸ்டாலின் மறுத்து வருகிறார். எனக்கோ எனது மகன் துரை தயாநிதிக்கோ எந்தப் பதவியையும் நாங்கள் கேட்கவில்லை" என்று அழகிரி மேலும் தெரிவித்தார்.

தி.மு.கவின் தென்மண்டல அமைப்புச் செயலாளராக இருந்த மு.க. அழகிரி 2014ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் கட்சி விரோத நடவடிக்கைகளுக்காக கட்சியிலிருந்து நீக்கப்பட்டார். தி.மு.க. தலைவர் மு.கருணாநிதி உயிரோடு இருந்தவரை அவர் கட்சியில் சேர்க்கப்படவில்லை.

மு.கருணாநிதி மறைந்து சில நாள்களுக்குப் பிறகு அவரது நினைவிடத்தில் குடும்பத்தினருடன் அஞ்சலி செலுத்தவந்த அழகிரி, கருணாநிதியின் உண்மையான தொண்டர்கள் தன்னுடன்தான் உள்ளனர் என்று தெரிவித்தார். இதற்குப் பிறகு தன்னை மீண்டும் கட்சியில் சேர்க்க வேண்டுமென்றும் வலியுறுத்த ஆரம்பத்தார். ஆனால், கட்சித் தலைமையிலிருந்து எந்தச் சமிக்ஞையும் வராத நிலையில், செப்டம்பர் 5ஆம் திகதியன்று சென்னையில் கருணாநிதி நினைவிடத்தை நோக்கி நினைவஞ்சலி ஊர்வலம் ஒன்றை நடத்தப்போவதாக அறிவித்தார். (ம)

# இந்தியா விதிவிலக்கு

வொஷிங்டன், செப். 1

ரஷ்யாவிடம் இருந்து ஆயுதங்களைக் கொள்வனவு செய்த போதிலும் இந்தியா மீது அமெரிக்கா பொருளாதாரத் தடைகளை விதிக்க வாய்ப்பில்லை என்கின்றன பன்னாட்டு ஊடகங்கள்.

எதிரி நாடுகளின் ஏவுகணைத் தாக்குதலில் இருந்து நாட்டைப் பாதுகாத்துக்கொள்ளும் சாதனங்களை ரஷ்யாவிடம் இருந்து கொள்முதல் செய்ய இந்தியா திட்டமிட்டுள்ளது. இந்த சாதனங்களின் மதிப்பு ரூ.31 ஆயிரத்து 500 கோடி (இந்திய மதிப்பில்) ஆகும். ஆனால், பல்வேறு விவகாரங்களுக்காக, ரஷ்யா மீது அமெரிக்கா பொருளாதாரத் தடை விதி த்துள்ளது. ரஷியாவிடம் ஆயுதங்களைக் கொள்முதல் செய்யும் இந்தியா மீதும் அமெரிக்கா பொருளாதாரத் தடை விதிக்கும் என்ற யூகம் எழுந்துள்ளது. அதே சமயத்தில், நட்பு நாடாக இருப்பதால், பொருளாதாரத் தடை விதிக்கப்ப டுவதில் இருந்து இந்தியாவுக்கு அமெரிக்கா தானாகவே விலக்கு அளிக்கும் என்றும் கருதப்பட்டது. இந்த நிலையில், பொருளாதாரத் தடையில் இருந்து இந்தியாவுக்கு விலக்கு வழங்கப்படலாம் என்று அமெரிக்க இராணுவத்துறைத் தலைவர் மேட்டிஸ் அறிவித்தார். இந்த விவகாம் தொடர்பில் எதிர்வரும் 6ஆம் திகதி இந்திய - அமெரிக்கப் பிரதிநிதிகளுக்கு இடையில் பேச்சும் நடைபெறவுள்ளது. (ம)



# பிரபுதேவாவின் அடுத்த படம் 'தேள்'



பிரபு தேவா நடிப்பில் அண்மையில் 'லக்ஷ்மி' படம் வெளியானது. தற்போது 'சார்லி சாப்ளின் 2', 'யங் மங் சங்', 'காமோஷி', 'பொன் மாணிக்கவேல்' என அடுத்தடுத்து பல படங்களில் நடித்துக் கொண்டு இருக்கிறார்.

இப்போது இன்னுமொரு புதிய படத்தில் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார் பிரபுதேவா. இந்தப் படத்தை 'தூத்துக்குடி, மதுரை சம்பவம்' போன்ற படங்களில் நாயகனாக நடித்த ஹரிகுமார் இயக்குகிறார். படத்திற்கு 'தேள்' என பெயர் வைக்கப்பட்டுள்ளது.



## இன்றைய நாள்

**மேடம்:** நண்பர்கள் மூலம் உதவி கிடைக்கும். தொழிலில் உற்பத்தி விற்பனை அதிகரிக்கும். வருமானம் உயரும். பணியாளர்கள் நிர்வாகத்தினரிடம் பாராட்டும் வெகுமதியும் பெறுவர்.

**இடபம்:** பிறர் கூறும் குறைகளை கண்டு கொள்ள வேண்டாம். தொழில், வியாபாரத்தில் மூலதனம் அதிகம் தேவைப்படும். இலாபம் மிதமாக இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாக நேரிடலாம்.

**மிதுனம்:** குடும்பத்தில் குழப்பம் உண்டாகி மறையும். தொழில் வியாபாரத்தில் வளர்ச்சி சுமாராக இருக்கும். மிதமான வருமானம் கிடைக்கும்.

**கடகம்:** உற்சாக மனதுடன் செயல்படுவீர்கள். தொழில் வியாபாரத்தில் இலக்கு எளிதில் பூர்த்தியாகும். பணப்பரிவர்த்தனையில் நல்ல முன்னேற்றம் இருக்கும். பெண்கள் விரும்பிய பொருள் வாங்குவர்.

**சிங்கம்:** குடும்பத்தில் வீண் விவாதத்தை தவிர்க்கவும். தொழில் வியாபாரம் வளர்ச்சி பெற கூடுதலாக உழைப்பீர்கள். செலவில் சிக்கனம் தேவை.

**கன்னி:** எதிர்பார்ப்பு இனிதே நிறைவேறும். தொழில் வியாபாரத்தில் இலாபம் சிறப்பாக இருக்கும். பணவரவு படிப்படியாக அதிகரிக்கும். குடும்பத் தேவை பூர்த்தியாகும்.

**துலாம்:** பிறரிடம் குடும்ப விஷயத்தை பேச வேண்டாம். தொழில் வியாபாரத்தில் விழிப்புடன் செயல்படவும். மிதமான இலாபம் கிடைக்கும். ஒவ்வாத உணவுகளைத் தவிர்க்கவும்.

**விருச்சிகம்:** எதிரியால் இருந்த தொல்லை விலகும். சமயோசித செயலால் தொழில் வியாபாரத்தில் வளர்ச்சிகாண்பீர்கள். தாராளபணவரவு இருக்கும்.


**தனுசு:** உறவினர் அதிக அன்பு பாராட்டுவர். தொழில், வியாபாரம் செழித்து வளரும். பணவரவு அதிகரிக்கும். குடும்பத்தில் சுப நிகழ்ச்சி நடத்தத் திட்டமிடுவீர்கள்.

**மகரம்:** தகுதிக்கு மீறிய செயலில் ஈடுபட வேண்டாம். தொழில் வியாபாரத்தில் இலக்கு நிறைவேறும். வருமானம் திருப்தி தரும். ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துவீர்கள்.

**கும்பம்:** தீயவர்களிடம் அதிக நெருக்கம் வேண்டாம். தொழில் வியாபாரத்தில் இலாபம் சராசரி அளவில் இருக்கும். பணக்கடன் ஓரளவு அடைபடும்.

**மீனம்:** அறிவுத்திறனை வளர்த்துக் கொள்வீர்கள். தொழில் வியாபாரம் செழிக்க தேவையான மாற்றம் செய்வீர். தாராள பணவரவு இருக்கும். பெண்கள் விரும்பிய பொருள் வாங்குவீர்கள்.

## அடக்கத்தில் சிறந்தோர்...



கோவில் யானை ஒன்று நன்றாகக் குளித்துவிட்டு சுத்தமாக வந்து கொண்டிருந்தது. ஒரு ஒடுக்கமான பாலத்தில் அது வரும் போது எதிரே சேற்றில் குளித்துவிட்டு ஒரு பன்றி, வாலை ஆட்டிக் கொண்டே வந்தது.

யானை ஒரு ஓரத்தில் ஒதுங்கி நின்று அதற்கு வழி விட்டது. அந்தப் பன்றி, எதிரே இருந்த இன்னொரு பன்றியிடம், "பார்த்தாயா, அந்த யானை என்னைக் கண்டு பயந்து விட்டது!" என்று சொல்லிச் சிரித்தது.

அந்த யானையைப் பார்த்து இன்னொரு யானை, "அப்படியா, நீ பயந்து விட்டாயா?" என்று கேட்டது.

அதற்குக் கோவில் யானையின் பதில் "நான் தவறி இடறி விட்டால் பன்றி நசுங்கி விடும். மேலும் நான் சுத்தமாக இருக்கிறேன். பன்றியின் சேறு என் மேல் விழுந்து நானும் அசுத்தமாகி விடுவேன். இந்தக் காரணங்களால், நான் ஒதுங்கிக் கொண்டேன்."

**நீதி: தன் பலம், பலவீனம் தெரிந்தவர்கள் அடக்கத்தில் சிறந்தவர்களாக இருப்பார்கள்.**

மூன்றும் மூன்றும் சேர்ந்தால் ஆறு வரும்...
ஆறும் ஆறும் சேர்ந்தால்...?



வெள்ளம் வரும் சேர்....

பொய் சொல்லுவது ஸ்வீட் சாப்பிடுவது போல, இனிப்பாக இருக்கும், சுகர் வந்த பிறகு தான் கஷ்டம் தெரியும் !!



"நான் ராணியாக விரும்புகிறேன். ஆனால் சிம்மாசனத்தில் அமரும் ராணி அல்ல. மாறாக மக்கள் மனங்களில் என்றென்றும் ராணியாக இருக்கவே விரும்புகிறேன்"

- டயானா

## நாளை

**02.09.2018**

ஞாயிற்றுக்கிழமை

ஆவணி 17

திதி: ஸப்தமி மாலை 05.41 வரை
நட்சத்திரம்: கார்த்திகை மு.இ. 06.43 வரை
சுபநேரம்: 09.05 – 10.35 வரை
ராகுகாலம்: 04.35 – 06.05 வரை



## பாட்டி மொழிகள்

- தங்கச் செருப்பானாலும் தலைக்கு ஏறாது.
- தீயில் இட்ட நெய் திரும்ப வராது.
- நாடு கடந்தாலும் நாய்க்குணம் போகாது.
- தேரோடு போச்சுது திருநாள். தாயோடு போச்சுது பிறந்தகம்.
- தெய்வம் காட்டுமே தவிர ஊட்டாது.
- செத்த பிணத்திற்கு அருகே இனி சாகும் பிணம் அழுகிறது.
- கடலைத் தாண்ட ஆசையுண்டு, கால்வாயைத் தாண்ட கால் இல்லை.
- கரும்பு கசப்பது வாய்க்குற்றம்.
- காட்டிலே செத்தாலும் வீட்டிலே தான் தீட்டு.
- கூப்பாட்டால் சாப்பாடாகுமா?
- அடி நாக்கில் நஞ்சும், நுனி நாக்கில் அமிர்தமுமா?
- ஆனை இருந்து அரசாண்ட இடத்தில் பூனை இருந்து புலம்பி அழுகிறது!
- அறப்படித்தவன் அங்காடிக்குப் போனால் விற்கவும் மாட்டான், வாங்கவும் மாட்டான்.
- எடுப்பது பிச்சை. ஏறுவது பல்லக்கு.
- எட்டி பழுத்தென்ன? ஈயாதார் வாழ்ந்தென்ன?
- பண்ணின புண்ணியம் பலனில் தெரியும்.

## சுடோக்கு

எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 2 | | | | | | 4 |
| | 3 | | | 4 | | | 8 | |
| | | 6 | 5 | 7 | | | 3 | |
| | | | 6 | | 5 | 7 | | |
| 3 | | | 9 | 2 | 8 | | | 1 |
| | | 8 | 7 | | 4 | | | |
| | 9 | | | 6 | 2 | 4 | | |
| | 7 | | | 5 | | | 2 | |
| 1 | | | | | | 8 | | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 8 | 6 | 5 | 3 | 1 | 9 | 2 | 7 |
| 7 | 5 | 9 | 6 | 2 | 4 | 1 | 8 | 3 |
| 1 | 3 | 2 | 9 | 8 | 7 | 6 | 5 | 4 |
| 5 | 2 | 3 | 4 | 9 | 8 | 7 | 6 | 1 |
| 9 | 1 | 4 | 7 | 5 | 6 | 8 | 3 | 2 |
| 8 | 6 | 7 | 2 | 1 | 3 | 4 | 9 | 5 |
| 6 | 7 | 8 | 3 | 4 | 2 | 5 | 1 | 9 |
| 2 | 4 | 5 | 1 | 6 | 9 | 3 | 7 | 8 |
| 3 | 9 | 1 | 8 | 7 | 5 | 2 | 4 | 6 |

நேற்றைய விடை

# படிக்க நேரம் ஒதுக்கு



பண்டிதர் ஜவஹர்லால் நேரு அப்போது இந்தியாவின் தலைமை அமைச்சராக இருந்தார். அவர் நாடாளுமன்றத்தில் ஒவ்வொரு முறை பேசும்போதும் கேட்பவர்கள் அனைவரும் மிகவும் வியப்படைந்து போவார்கள். காரணம் அவர் பேசும் பேச்சில் புத்தங்களில் இருந்து மேற்கோள்கள் மிக அதிகமாகக் காணப்படும். இது எல்லோருக்கும் ஆச்சரியமாகவும் இருக்கும் அதிசயமாகவும் இருக்கும். ஒரு சமயம் அவரிடம் சிலர் "உங்கள் பேச்சுக்கள் எங்களுக்கு ஆச்சரியத்தையும் அதிசயத்தையும் உண்டு பண்ணுகின்றன. எதையாவது உங்களிடம் கேட்கும் போது நேரமில்லை என்று பதில் கூறும் நீங்கள் நிறையப் புத்தகங்களை மட்டும் படிக்க எப்படி நேரம் கிடைக்கிறது என்று சொல்லுங்களேன்" என்றார்கள். அப்படிக் கேட்டவர்கள் அவரின் நண்பர்களாக இருந்தால் கூடப் பரவாயில்லை. எதிர்கட்சியாளர்கள். கிண்டலுடனும் கேலியுடனும் அவ்வாறு கேட்டார்கள்.

நேருவோ அமைதியாகவும் புன்முறுவலோடும் சொன்னார் "நான் திருடுகிறேன்" என்று இந்தப் பதிலைக் கேட்டு திடுக்கிட்டுப் போனார்கள் அவரிடம் கேலி பேசியவர்கள். அவர்கள் தங்களுக்குள் கிசுகிசுத்துக் கொண்டனர்.

"தலைமை அமைச்சர் திருடுகிறேன் என்று சொல்கின்றாரே!எதைத் திருடுகிறார்?யாரிடமிருந்து திருடுகிறார். ஒருவேளை தன்னுடைய சொந்த அறிவைப் பயன்படுத்தாமல் உதவியாளர்கள் எழுதிக் கொடுக்கும் குறிப்புகளை வைத்து உதவியாள் மூலமே அறிக்கை தந்து அதை அவர் பேசுகிறாரா?


அவர்களுக்குப் புரியவில்லை.

"நீங்கள் சொல்வது புரியவில்லை!" என்று நேருவின் மேல் அன்பு கொண்ட அவர் கட்சிக்காரர்களில் ஒருவர் கேட்டார் ஏனென்றால் எதிர்க்கட்சிக்காரர்கள் தப்பாக அர்த்தம் செய்துகொள்ளக் கூடாது என்பது அவரது ஆதங்கம்.

நேரு புன்னகையுடன் சொன்னார். "நான் இரவில் எப்போது தூங்கப் போக வேண்டும் என்பதை நான் நிர்ண யிப்பதில்லை. அதை என் உதவியாளர்தான் தீர்மானிக்கிறார். நான் எப்போது காலையில் எழ வேண்டும் என்பதையும் அவரே நிர்ணயிக்கிறார். ஒருநாளைக்கு நான் ஐந்து மணி நேரம் உறங்கலாம். சில சமயம் ஆறு மணி நேரம் உறங்கலாம் என்று அவரே கட்டுப்பாடுகளை வைத்திருக்கிறார். இப்படி என் வாழ்க்கை நெறிமுறை ஓர் ஒழுங்குக்கு உட்படுத்தப்பட்டிருக்கிறது. என் செயலாளர் எனக்கு ஒதுக்கிய உறங்கும் நேரமான ஐந்து மணி நேரத்திலிருந்து நான் தினந்தோறும் இரண்டு மணிநேரத்தைத் திருடிக்கொண்டு விடுகிறேன்.

அந்த இரண்டு மணிநேர காலத்தில் நான் பல்வேறு புத்தங்களையும் படிக்கச் செலவிடுகிறேன்" நேரு சொல்லி முடித்தவுடன் கிசு கிசு பேசியவர்கள் வாயடைத்துப் போனார்கள்.

**படிக்க நேரம் ஒதுக்க வேண்டும். நேரம் இல்லை என்று சொல்வது அறிவீனம்.**



# வழிகாட்டுவோம்



## ஆடு

மே மே ஆட்டுக்குட்டி
மேய வாரீயா ஆட்டுக்குட்டி
புல்லு வேணுமா சொல்லு
பறித்துத் தாரேன் தின்னு
வெள்ளை நிறத்துக் குட்டி
கொள்ளை அழகுக் குட்டி
துள்ளித் துள்ளி ஓடாதே
தொல்லை பண்ணாதே நில்லு

# நான் விரும்பும் பண்டிகை




- நான் விரும்பும் பண்டிகை சித்திரைப் புத்தாண்டு.
- சித்திரைப் புத்தாண்டு பிறப்பதற்கு முன்பே சுற்றுச் சூழல் அழகும் பொலிவும் பெற்றுவிடும்.
- குயில்கள் மரங்களில் கூவி மகிழும்.
- மரங்கள் இலையுதிர்த்தி புதுத்தளிர் விட்டுப்பூக்கும்.
- பூக்கள் விரிந்து வண்டுகள் சுற்றும்.
- பழமரங்கள் பூத்துக் காய்க்கும்.
- இப்போது சித்திரைப் புத்தாண்டு மலர்ந்துவிடும்.
- புத்தாண்டை முன்னிட்டு பாடசாலை விடுமுறையும் ஆரம்பமாகி விடும். சிறுவர்களுக்கெல்லாம் கொண்டாட்டம்தான்.
- புத்தகப்பைகள் ஓய்வெடுக்கும்.
- புத்தாடைகளும் தீன்பண்டங்களும் கிடைக்கும்
- புத்தாண்டில் வீடு வாசல்கள் புதுப்பொலிவு பெறும்.
- சொந்தங்கள் ஒன்று கூடும்.
- எல்லா வீடுகளிலும் ஒரே கலகலப்புத்தான்.
- சிறுவர்கள் வீடுகளுக்குச் சென்று சிற்றூண்டிகள் மற்றும் விருந்துண்டு மரங்களில் ஊஞ்சல் கட்டி ஆடி மகிழ்வர்.
- நிலாவிலே கதைபேசி ஆடிப்பாடி விளையாடி மகிழ்வார்.
- சித்திரைப்புத்தாண்டை தமிழரும் சிங்கள மக்களும் கொண்டாடி மகிழ்வர்.
- புத்தாண்டு தினத்தில் அதிகாலையில் எழுந்து நீராடி புத்தாடை புனைந்து பெரியோரும் சிறியோரும் ஆலய தரிசனம் செய்தல் கண்கொள்ளாக் காட்சியாகும்.

# சுவைகள் அவசியம்

**துவர்ப்பு**

உடல் நலத்துக்கு இந்தச் சுவை மிகவும் உகந்தது. விருப்பு வெறுப்பில்லாதது. வியர்வை, குருதிப் போக்கு, வயிற்றுப் போக்கைச் சரி செய்யும். வாழைக்காய், மாதுளை, மாவடு, மஞ்சள் அத்திக்காய் போன்றவை துவர்ப்பு சுவையு டையவை.



**இனிப்பு**

மனதுக்கும் உடலுக்கும் உற்சாகத்தைத் தரக்கூடிய சுவை இது. இந்தச் சுவை கூடினால் உடலில் எடை கூடும். உடல் தளரும். சோர்வும் தூக்கமும் உண்டாகும். பழங்கள் உருளைக்கிழங்கு, கரட், அரிசி, கோதுமை, கரும்பு போன்ற பொருள்களில் இனிப்புச் சுவை அதிகம் இருக்கிறது.

**புளிப்பு**

உணவின் சுவையை அதிகரிக்கும் சுவை இது. பசியைத் தூண்டும் நரம்புகளை வலுவடையச் செய்யும் இது அளவுக்கு அதிகமானால் பற்களைப் பாதிக்கும். நெஞ்செரிச்சல், குருதிக்கொதிப்பு, அரிப்பு போன்றவற்றை உண்டாக்கும். உடல் தளரும். எலுமிச்சை, புளிச்சகீரை, இட்லி, தோசை, தக்காளி, புளி, மாங்காய், தயிர், மோர் போன்றவை புளிச்சுவை கொண்டவை.

**கசப்பு**

பெரும்பாலும் வெறுக்கக் கூடிய சுவை ஆனாலும் உடலுக்கு மிகுந்த நன்மையைத் தரக் கூடிய சுவை இதுவே. இது நோய் எதிர்ப்புச் சக்தியாகச் செயற்படும். தாகம் உடல் எரிச்சல் அரிப்பு காய்ச்சல் ஆகியவற்றைத் தணிக்கும். குருதியைச் சுத்திகரிக்கும். பாகற்காய், சுண்டை கத்தரி, வெங்காயம், வெந்தயம், பூண்டு எள், வேப்பம்பூ, ஓமம் போன்றவற்றிலிருந்து கசப்புச் சுவையைப் பெறலாம்.

**உவர்ப்பு**

அனைவரும் விரும்புகின்ற சுவை தவிர்க்க இயலாதது. உமிழ் நீரைச் சுரக்கச் செய்யும். மற்றைய சுவைகளைச் சமன் செய்யும். உண்ட உணவைச் செரிக்க வைக்கும். கீரைத்தண்டு, வாழைத்தண்டு, முள்ளங்கி பூசணி, சுரைக்காய், பீர்க்கங்காய் போன்றவற்றில் உவர்ப்புச் சுவை மிகுதியாக உள்ளது.

# அன்பின் வழியது உயிர்நிலை

## இன்பமொடு கூட்டாய் வாழும் சிறப்பே பயன் தரும்

அன்ரனி பீற்றர்

### மனிதம் கொண்ட பரிணாமம்

உலகம் என்பது பன்மைத்துவமானது. ஆங்கு மனிதங்கள் மரபியல் தொன்மையோடு வாழ்ந்து வருகின்றன. மனிதங்கள் இயல்பின் அடிப்படையில் இனக் குழுமங்களாக ஒன்றித்து தமக்கான வரையறைகளோடு எல்லையிட்டும், ஆங்காங்கு ஒத்திசைவின்றி முரண் நிலைப்பட்டு சண்டையிட்டும் பயணப்படுகின்றன. ஒவ்வொருவரும் தமக்குரித்தான மொழி, கலை, கலாசாரம், பண்பாடு, விழுமியங்கள் என தனித்துவமான சமூக அளவிடைப் பரிமாணங்களை முன்னிறுத்துகின்றனர். இனத்துவக் கட்டுமானங்களை பிறழ்வின்றி வழிநடத்திச் செல்கின்றனர்.

ஆம், மனிதனுடைய பரிணாம வளர்ச்சிப் படிநிலைகளை எடுத்து நோக்கின், ஆரம்ப காலத்தில் மனிதன் தனித்து வாழ்ந்தான். தானே தனித்து நின்று உணவைத்தேடல் புரிந்தான். 'தனிமை, மிருகங்கள், கொடிய பிராணிகளிடமிருந்து உயிராபத்தை எதிர்கொண்டான். அவற்றில் இருந்து தப்பித்து வாழப் பழகிக் கொண்டான். கால ஓட்டத்தில் தனிமை என்ற இயல்பு மூட்டத்தில் இருந்து விடுபட முயற்சித்தான். அதன் பயனாக புதிய வழிகளும் வழிமுறைகளும் தென்பட்டன. அதன்வழியே 'கூட்டாக வாழ்தல்' என்ற வழி காணல் மன பலத்தையும், சூழல் எதிரிகளிடம் இருந்தான பாதுகாப்பையும் தந்தன.

இவ்வாறான செயற்கூறுகளின் பயன் குழுக்களாகவும், இனக் குழுமங்களாகவும் மனிதன் வாழ்வதற்கான சந்தர்ப்பங்களை தந்தது. குறிப்பாக, 'உணவைத் தேடவும், தேடியவற்றைப் பாதுகாப்பாக வைத்திருக்கவும், பாதுகாப்பாக வாழவும்' என கூட்டிணைவான செயலுறுதி மனிதர்களிடையே இயல்பாகவும் பண்பாகவும் கட்டியெழுப்பப்பட்டது. இங்கு அவர்களுக்கிடையே சில முரண்பாடுகள் ஏற்பட்டாலும் நன்மைகளையே அவர்கள் அதிகமாக அனுபவம் செய்தார்கள். உண்மையில் சமூக வரலாறுகளை வாசிப்பதன் ஊடாக இவை குறித்து அறிந்து கொள்ள முடிகிறது.

### கூட்டுக் குடும்பம்

இந்தவகையிலே தமிழர்களுடைய வாழ்க்கைக் கட்டமைப்பை எடுத்து நோக்கின், கடந்து போன மூன்று தசாப்த காலங்களுக்கு முன்பான சமூக வெளி தனித்துச் சிறப்புடையது எனலாம். ஆம், தமிழ் மக்களுடைய வாழ்க்கை முறை மகிழ்ச்சியையும் சிறப்பையும் நிறைவாகவே தந்திருந்தன. இந்த நாட்டின் குடிமக்களாக எழுபது ஆண்டுகளுக்கும் மேலாக சம உரிமைகளை வேண்டினோம்.

அரசியல் உரிமை மீதான தாகமுடையவர்களாக போராட்டங்களை முன்னெடுத்தோம். இதனிடையேயும் தனித்துவமான சிறப்பும் ம்கிழ்ச்சியும் எம்மிடையே இழையோடி இருந்தன. இது குறித்து இன்றைய தலைமுறையினர் அறியாதவர்களாகவே இருக்கின்றனர்.

குறிப்பாக தமிழர்களுடைய வாழ்வியல் செழுமையில் இத்தகு சிறப்புக்களும் மகிழ்ச்சியும் நிலைபேறாக நிலைத்திருந்தமைக்கு காரணமாக கூட்டுக்குடும்ப வாழ்வை குறிப்பிட்டுச் சொல்லலாம்.

ஒரு குடும்பத்தில் 10 பிள்ளைகள் எனில், அவர்கள் தமது வாழ்வின் ஆரம்ப காலங்களை தாய் தந்தையரோடு கூடிக் களித்து வாழ்ந்தனர். அறிவூட்டம் கண்டனர். அரச மற்றும் தனியார் துறை சார்ந்து தொழில் நிலை பெற்றனர். பலர் விவசாயம் செய்தனர். மண் மணம் காத்தனர். சிலர் தந்தை வழி தொழில் நிலையில் தேர்ச்சி பெற்று உயர்நிலை பெற்றனர். திருமண வயதை அடைந்ததும் இருமனமும் ஒன்றித்திட திருமண பந்தத்தில் இணைந்து கொண்டு தமக்கான வாழ்வை கட்டமைத்துக் கொண்டனர். குடும்பத் தலைவன், தலைவியாக தமது பொறுப்புணர்ந்து செயலாற்ற ஆரம்பித்தனர்.

மூத்தோரின் ஆசீர்வாதத்தோடும் வழிகாட்டலோடும் உழைப்பை முயற்சியால் ஊதியம் செய்தனர். பகிர்ந்துண்டு அன்பு பாராட்டினர். 'நன்மை தீமை, உயர்வு தாழ்வு, மகிழ்ச்சி துக்கம்' என வாழ்கையின் அனைத்துப் படிநிலைகளிலும் ஒற்றுமையோடும், எனதல்ல எமது வெற்றி என்ற உணர்வோடும் வாழ்ந்தனர்.

இதன் காரணம் கொண்டே, 'பெரியவர்களை மதிக்கும் பண்பு, கீழ்படிவு, கடமை உணர்வு, ஒற்றுமை, புரிதல், விட்டுக்கொடுப்பு, மன்னிப்பு, பகைமை களைதல், நல்லுறவு, குடும்பப்பற்று' என அத்தனை வாழ்வியல் சிறப்புகளும் நிலைபெற்றன. கூட்டுக் குடும்ப வாழ்வின் பரிணாமம் மகத்துவம் பெற்றது. உறவினர்களின் வாழ்க்கை முறை, வழி காட்டல்கள், செயற்பாடுகள், கல்வி முன்னேற்றங்கள் என அனைத்துமே பிள்ளைகளை பிறழ்வின்றி நேர்வழியில் செல்ல வழிகாட்டின. ஒழுக்க சீலர்களாகவும் சமூகப்பற்றுள்ளவர்களாகவும் அவர்களை வளம்படுத்தின.

### நவீனத்துவங்களின் தாக்கம்

ஆனாலும் கால மாற்றம் பல உடைவுகளை தந்துள்ளது. தமிழ் சமூகத்தின் இருப்பை கேள்விநிலைக்கு உட்படுத்தியுள்ளது. குறிப்பாக உள்நாட்டுப் போரின் போதும், அதன் பின்பான காலப்பகுதியிலும் உலகமயமாதலின் தாக்கம் அதிகரித்துள்ளது. தேவைகளைக் கருத்தில் கொண்டு அல்லது தேவைகளை உருவாக்கி நவீன சாதனங்களைப் பாவனை கொள்கின்ற பழக்கம் வளர்ச்சி கண்டுள்ளது. இதன் விளைவாக கூட்டுக்குடும்ப வாழ்க்கை முறை சிதைவடைந்து போயுள்ளது. சுதந்திர மான செயலூக்கம் என்ற சாதனங்கள் குடும்பங்களை உடைத்து , தனித்தனியாகப் பிரிந்து வாழும் நிலையை தேடலாக்கியுள்ளது.

தேவையை நிறைவு செய்ய குடும்பத்தில் இருவரும் உழைக்க வேண்டும் என்ற நிலை உருவாகியுள்ளது. பிள்ளைகளை அன்போடு கவனிக்க முடியாத நிலை தோன்றியுள்ளது. பிள்ளைகள் அநாதரவான, பெற்றோரின் போதிய அரவணைப்பின்றி தனிமையுள் அங்கலாய்க்கின்ற போதாமைகள் தோற்றம் பெற்றுள்ளன. சமூக பிறழ்வுக்கான அடித்தளங்கள் உயிர்ப்புற ஆரம்பித்துள்ளன. இந்த நிலமைகள் மாற்றம் பெற வேண்டும். பெற்றோர்கள் பிள்ளைகளை ஆற்றுப்படுத்துவதிலும், அவர்களை பராமரிப்பதிலும், வெற்றி தோல்வி என்ற செயல் முடிவுகளில் அவர்களைத் தட்டிக் கொடுத்து ஊக்கப்படுத்துவதிலும், சமூக விழுமியங்களை சொல்லிக் கொடுப்பதிலும், ஆன்மிக நெறி நின்று பிள்ளைகளை அன்பு பாராட்டுவதிலும் அதிக காலத்தை செலவிட முயற்சிக்க வேண்டும்.

நிச்சயமாக பெற்றோரின் அன்புறவு, அரவணைப்பு, வழி. காட்டல் என்பன பிள்ளைகளுக்கு தன்னிறைவாக கிடைக்க வேண்டும் என்ற கருத்தையே சமூகவியலாளர்களும் உளவியலாளர்களும் குறிப்பிடுகின்றனர்.

### மீளுருவாக்கம் பெறுவோம்

ஆகவே, நடந்து முடிந்தவற்றையும், நடந்து கொண்டிருப்பவற்றையும் மாற்றுவது என்ற காரியம் கடினமானது. எதிர்காலத்தில் இடம்பெறப் போகின்ற விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்துவதன் ஊடே மாற்றங்களை உருவாக்கலாம். இங்கு, ஆரம்ப காலங்களைப் போன்று இனிவரும் காலங்களில் எல்லோரும் கூட்டுக் குடும்பமாக வாழ்வதற்கான முயற்சிகளை மேற்கொள்ளலாம். கிராமங்களில் இந்த முயற்சி வெற்றியைத் தந்தாலும் நகரத்தில் இவை சாத்தியமா என்பது கேள்விக்குரிய விடயமே. ஆனாலும் மீளுருவாக்கம் பெறுவோம். மனம் இருந்தால் மார்க்கம் உண்டு என்பதைப் போல, உறவினர்களோடு கூடி வாழப் பழகிக் கொள்வோம். பிள்ளைகளை நல்வழிப்படுத்துவோம். ஆம், எமது சொல், செயல், செயற்பாடுகள் என அத்தனை இயல்புறுதிகளும் தவறானவையாக இருக்கும் சந்தர்ப்பத்தில் பிள்ளைகள் சரியான வழி முறைகளைப் பின்பற்ற வில்லை என்று கூறுவது ஏற்கத்தக்க விடயமல்ல. பேச்சிலும் செயலிலும் உண்மையுடன் நடப்பவர்களாக, 'அன்பு, அக்கறை, அரவணைப்பு, கண்டிப்பு, மன்னிப்பு, பாசம், பகிர்வு விருந்தோம்பல் பண்பு' என நற்பண்புகளை பிள்ளைகளிடத்தே வளம்படுத்திக்கொள்வோம்.

**அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்**
**வற்றல் மரந்தளிர்த் தற்று!**

# மக்கள் எங்களை மீண்டும்...

(07 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தவநாதனின் உரையைத் தொடர்ந்து மீண்டும் எழுந்த ஐங்கரநேசன், கைகொடுத்த தவநாதனுக்கு, அவர்தான் விடயத்தை விளங்கிப் பேசினார் என்று சான்று பகிர்ந்தார். கொழும்பு அரசின் அனுமதிகள் எல்லாவற்றையும் பெற்று விட்டுத்தான் அந்த நிறுவனம் எங்களுடன் வந்து பேசியது. திட்டம் நடந்து கொண்டிருந்தபோதுதான் சி.எஸ்.ஆர். நிதியை நாங்கள் பெற்றோம். அவர்கள் இந்த நிதி விரும்பித் தருவது. வேண்டுமானால் அவர்கள் நிறுத்தலாம். இந்தத் திட்டத்துக்காக ஒப்பந்தம் இரவில் கைச்சாத்திடப்பட்டதாக எதிர்க்கட்சித் தலைவர் குற்றம் சுமத்தியது தவறு. அந்த ஒப்பந்தம் பகலில், முதலமைச்சர் அலுவலகத்தில்தான் நடந்தது என்று திருத்தம் முன்வைத்தார் ஐங்கரநேசன். இந்தத் திட்டத்துக்காக நாங்கள் கேள்விகோரலும் செய்ய முடியாது என்பதையும் ஐங்கரநேசன் கூறினார்.

முதலமைச்சரின் அனுமதிக்காக வந்திருந்த சந்தர்ப்பத்தில் அவர்களிடம் பேரம் பேசியிருக்கலாம். அப்படிச் செய்திருந்தால் மாகாணத்துக்கு அதிக வருவாயைப் பெற்றிருக்கலாம் என்று எதிர்க்கட்சித் தலைவர் பதிலடி கொடுத்தார். அதற்கு ஐங்கரநேசனிடமிருந்து பதில் வரவில்லை.

மீண்டும் ஐங்கரநேசனை சீண்டினார் அஸ்மின். கொழும்பு அரசின் அனுமதியைப் பெற்று வந்த திட்டங்களை வவுனியாவில் எப்படி நிறுத்தினீர்கள். வவுனியாமல்லிகைத்தோட்டம், கரும்புஉற்பத்திமுதலீடுகளை எந்த அடிப்படையில் நிறுத்தினீர்கள்? அப்பாவி விவசாயிகளிடம் காசு பார்க்க முடியாது. இங்கே காசு பார்கலாம் என்று சாடினார் அஸ்மின். விவாதம் நீண்டு செல்லாம் இருக்க, இந்த விடயத்தில் அதிகாரிகள் விளக்கமளித்த பின்னர் மீண்டும் சபையில் எடுக்கலாம் என்று தெரிவித்தார் அவைத் தலைவர்.


அனந்தி சசிதரனின் அமைச்சின் செயலரின் மன்னிப்புக் கடிதத்தை சபையில் வாசித்தார் அவைத் தலைவர். மாகாணசபையின் அனுமதி பெறாமல் நிதி செலவு செய்யப்பட்டமைக்கு மன்னிப்புக் கேட்டு, தழுவல் அனுமதி கோரிய கடிதத்துக்கு மாகாணசபை சம்மதம் கொடுக்க அவைத் தலைவர் கோரினார். காலையில் அனந்தி ஒரு பிடிபிடித்தீர்கள். இப்போது அவருக்கு ஆதரவாக செயற்படுகின்றீர்கள் என்று சாடினார் சுகிர்தன். உங்களின் கதிரைக்கு சுதந்திரம் இருக்கு. இந்தக் கதிரையில் இருந்து எல்லாம் சொல்லேலாது என்று நிலமையின் பரிதாபத்தை விளக்கினார் அவைத் தலைவர்.

நிகழ்ச்சி நிரலுக்கு அமைவாக விடயங்களை வேகமாக நகர்த்தினார் அவைத் தலைவர்.

ஐங்கரநேசனின் தீர்மான வரைவு சபையில் முன்மொழியப்பட்டது. மீண்டும் தலையிட்டார் அஸ்மின். ஐங்கரநேசன் எந்தக் கட்சி சார்பாக தீர்மான வரைவை முன்மொழிந்தார் என்று கேள்வி எழுப்பினார். முதலில் வழிமொழியுங்கள் என்று கூறினார் அவைத் தலைவர். எந்தக் கட்சி என்று கூறட்டும் நான் வழிமொழிகின்றேன் என்று விடாப்பிடியாக நின்றார் அஸ்மின்.

மாகாணசபை உறுப்பினராக முன்மொழிந்தேன் என்று ஐங்கரநேசன் பதிலளித்தார். மாகாணசபையில் ஆளும் கட்சி உறுப்பினரா? எதிர்க்கட்சி உறுப்பினரா? என்று மீண்டும் கேள்வி எழுப்பினார் அஸ்மின். ஐங்கரநேசன் அமைதியானார். அவைத் தலைவர், அவர் ஆளும் கட்சி உறுப்பினராகத்தான் இந்தச் சபையில் இருக்கின்றார். நீங்கள் வழிமொழியுங்கள் என்றார். அவர் ஆளும் கட்சி உறுப்பினர் என்றால் வழிமொழிகின்றேன் என்றார் அஸ்மின்.

**சபை அமர்வை அடுத்த மாதம் 11ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார் அவைத் தலைவர்.**



## நல்லூர் கந்தன் 17ஆம் நாள் திருவிழா

### நல்லூர் எமக்குப் பொற்கோவில்!

கந்தபுராண மாண்பின் நாதம் யாழில் ஒலிக்கிறது
கந்தனின் ஆட்சி நல்லூரில் அமைதியை கொழிக்கிறது
எந்தக் கோவிலிலும் இல்லாத மாட்சிமை ஓங்கி நிலைக்கிறது
எதுவும் அழகாகி காலத்துள் அரங்கேறுகிறது!

முந்தையோர் அனுபவித்த முருகனின் அலங்காரம்
முறையாக இன்றும் வரமாகிறது – ஆங்கு
சிந்தையுடையோர் இலட்சம் கோடியெனச்
சேர்ந்திடுவர் சுகம் பெற்றிடுவர்!

விந்தையிதோவெனக் கோபுரம் பார்த்து
வெற்றிகொள்வர் தம்மை மாற்றிக்கொள்வர்
சந்தமுடைய கவிஞர்கள் சதா எழுதி எழுதி
சமயம் காத்து சரணம் எய்துவர் அந்தமிலா
தங்கமுருகன் வெளிவீதியில் வர
அப்பப்பா அழகு சொட்டுகிறது பிரமாதம்!

இந்த வாழ்வு இனிக்கிறது கந்தப் பெருமான்
இலங்கு நல்லூர் எமக்குப் பொற்கோவில்!

கே.எஸ். சிவஞானராஜா

## வேலை வாய்ப்பு

யாழ்ப்பாணம், கிளிநொச்சி போன்ற இடங்களில் வேலை செய்வதற்கு மேசன், காப்பென்ரர், கம்பிவேலை செய்பவர்கள் தேவை. தொடர்ச்சியாக வேலையும், கவர்ச்சிகரமான சம்பளம் வழங்குவதோடு நிறுவனத்தில் ஒரு வருடத்திற்கு மேல் வேலை செய்பவர்களுக்கு பல சலுகைகள் வழங்கப்படும்.

**தொடர்பு - 076 826 4859, 077 712 0945**

## 10 ஆம் ஆண்டு நினைவுகளுடன்



தோற்றம்
15.02.1939

மறைவு
22.08.2008

திதி: ஷஷ்டி
(01.09.2018)

### திருமதி வீரசிங்கம் தெய்வநாயகி

அன்னையாய் இருந்து அரவணைத்து வளர்த்தீர் அம்மா
ஆலமர விழுதுகள் போல் நாம் இங்கிருக்க பூவுலகு
சென்றீர் அம்மா...
ஏழேழு ஜென்மம் எடுத்தாலும்
நின்றன் பிள்ளைகளாய் வாழ
வேண்டுதல் பல செய்கின்றோம்
உங்கள் நினைவுகள் பசுமரத்தாணிபோல என்றும்
எம் மனங்களில்

"கௌரி கோட்டம்"
அல்வாய்.

**குடும்பத்தினர்.**
**077 735 1803**

## கணிதம், வரலாறு

மாணவர்களின் விருப்பத்துக்கேற்ப தரம் 06 -11 வரை தனியாகவோ குழுவாகவோ வீடுகளுக்கு வந்து அடிப்படையிலிருந்து கற்பிக்கப்படும்.
(கல்வி நிறுவனங்களும் தொடர்பு கொள்ளலாம்)

**078 491 4259**

## கார் விற்பனைக்கு

**NISSAN SUNNY, N -16 Car, NP HU -XXXX, Super Saloon, Silver Colour**

**077 015 5039**

## நாகபூஷணி திருமணசேவை

மிகப் பொருத்தமான மணமக்கள் ஜாதகங்கள் உடன் தெரிவு செய்து தரப்படும்.

**257, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.**
021 222 9306, 077 138 7596

(CS 18781/15/17)

## வேலைக்கு ஆள் தேவை

யாழ். நகரில் இயங்கும் வியாபார நிலையத்திற்கும், வாகனசுத்திகரிப்பு நிலையத்திற்கும் ஆள் தேவை.

**தொடர்பு - 077 776 3533**

## எரிபொருள் நிரப்புனர் தேவை

இல.21, மகாத்மா காந்தி வீதி, யாழ்ப்பாணம் (வைத்தியசாலை முன்பாக ) என்னும் முகவரியில் அமைந்துள்ள **Rajan Umayal (pvt) Ltd** எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு எரிபொருள் நிரப்புனர் தேவை. **02.09.2018 முற்பகல் 11 மணிக்கு நேர்முகத் தேர்வு** நடைபெற இருக்கின்றது. சான்றிதழ்களுடன் நேரில் வரவும்.

(CS/19459)(11,17)

## வேலையாள் தேவை

**சாவகச்சேரியில் இயங்கும் எமது பிறிண்டிங் ஸ்ரூடியோவுக்கு நன்கு அனுபவமுள்ள**

**Photoshop, Corel Drow**

தெரிந்தவர்கள் வேலைக்குத் தேவைப்படுகின்றார்கள்.

**077 110 2810**

## கண்ணீர் அஞ்சலி

யாழ்.போதனா வைத்தியசாலையில் தாதிய உத்தியோகத்தராக கடமைபுரியும் **இராஜரட்ணம் கலைவாணி** அவர்களின் அன்புத்தாயார்

### இராஜரட்ணம் சிவயோகம்மா

அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**தாதியர் நலன்புரிக்கூட்டுறவுச்சங்கம், யாழ்ப்பாணம்.**

## மரண அறிவித்தல்



### மரியதாஸ் நாகலிங்கம் மரியதிரேஸ்

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் சுண்டுக்குளி யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட மரியதாஸ் நாகலிங்கம் மரியதிரேஸ் நேற்று (31.08.2018) வெள்ளிக்கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான றப்பியேல், பிரகாச குமாரத்தி தம்பதியரின் அன்பு புதல்வியும், காலஞ்சென்ற மரியதாஸ் நாகலிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற பெனடிற்றின் அன்புச் சகோதரியும், மரியகோகிலா (ஜேர்மனி), காலஞ்சென்ற பிரான்சிஸ் (றஞ்சன்), மேரி றோசலின் (றஞ்சனி - ஆசிரியை யாழ். இந்து மகளிர் கல்லூரி), காலஞ்சென்ற மரியலீலா (றஜனி) ஆகியோரின் அன்புத் தாயும், பிலிப்யோசப் டெலிக் (ஜேர்மனி), ஜெபராஜா (இலங்கை அப்போஸ்தல திருச்சபை) ஆகியோரின் அன்பு மாமியும், சிப்போறா (சுவிஸ்), அனிஸ் (ஜேர்மனி), மேஷாக் (யாழ். பல்கலைக் கழக கல்லூரி), அனுஜா (ஜேர்மனி),பிறிஸ்சில்யா (கொழும்பு மகளிர் கல்லூரி - ஆசிரியை), ஜொய்ஸ் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், பெனடிற் பிலோமினாவின் மைத்துனியும், ஜோய், ஆன், ஜீன், எரிக் ஆகியோரின் அன்பு மாமியும், திவாதரனின் பூட்டியும் ஆவார். அன்னாரின் நல்லடக்க ஆராதனை பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**அப்போஸ்தல திருச்சபை,**
**26/3 . சோமசுந்தரம் அவனியு,**
**சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.**

**தகவல் :**
**போதகர் ஜெபராஜா**

077 468 3477, 077 843 5143



UNIVERSITY of GREENWICH

உலகின் முதன்மையான GREENWICH பிரித்தானிய பல்கலைக்கழகத்தில் கணனி துறையில் பட்டதாரியாகுங்கள்

# BSc ( Hons) in COMPUTING




14.09.2018 ஆம் திகதிக்கு முன்னர் பதிவினை மேற்கொள்ளும் மாணவர்களுக்கு ரூபா 25000.00 கட்டணக்கழிவாக வழங்கப்படும். பதிவுகளுக்கு முந்திக் கொள்ளுங்கள்

**Why should you select IIS ?**

- IIS set high standards for teaching quality.
- The lecture panel consist of eminent academic and industry experts.
- Facilities for extracurricular activities.
- Bank loan facilities and easy payment schemes.
- Industrial placement at leading companies.



புதிய பிரிவுகள் ஆரம்பம்


பிரிவு 1 : 14.09.2018

பிரிவு 11 :16.09.2018

பல நூறு மாணவர்கள் பயணித்த இவ் வெற்றிப் பாதையில் உங்கள் காலடியையும் பதித்துக்கொள்ளுங்கள்

**IIS CITY CAMPUS**
#200, Sivan Pannai Road, Jaffna
TEL :- 021 222 8060 web : iis.edu.lk
HOTLINE 077 757 0038 / 071 777 5666


# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



## அமரர் இராசம்மா நடராசா

தோற்றம் 10.04.1935 — மறைவு 02.08.2018

கடந்த 02.08.2018 வியாழக்கிழமை சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வத்தின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (01.09.2018) சனிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்

முதலாம் ஒழுங்கை,
கச்சாய் வீதி,
கொடிகாமம்.

குடும்பத்தினர்.
077 657 6413

# Raveens EMC Karaveddy

மேற்படி நிறுவனத்திற்குரிய Grade 11 மாணவர்கள் பங்குபெறும்

**IMPROMPTU ORATORY (ENGLISH) AND PRIZE GIVING DAY**

**முன் ஆயத்தமில்லாப் பேச்சும் (ஆங்கிலம்)**

**பரிசளிப்பு விழாவும் (10 ஆவது ஆண்டு விழா)**

குறிப்பு : சபையோர் ஆங்கிலத்தில் வழங்கும் விடயத் தலைப்புகளுக்கே மாணவர்கள் பேசுவார்கள்.
இடம் : அல்வாய், மாலைசந்தை ஸ்ரீ வரதராஜ விநாயகர் ஆலய திருமண மண்டபம்
காலம் : 02.09.2018 ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணி
தலைவர் : ப. ஈஸ்வரநாதன் - நிர்வாகி, ரவீன்ஸ் EMC, கரவெட்டி

Chief Guest
**Prof.B.Nimalathasan**
Professor & Head, Department of Accounting
Director,CODL
University of Jaffna.

Distribution of prizes
**Mrs. Tharany Nimalathasan**

ஆர்வலர்களை அன்புடன் அழைக்கின்றோம்

ரவீன்ஸ் கல்விச் சமூகம்

(cs.00578) (13.17)

# மரண அறிவித்தல்கள்

## சபரிமுத்து அந்தோனிப்பிள்ளை

**(றூபினி ரெக்ஸ்ரைல் உரிமையாளர் - கொழும்பு)**



கரம்பனை பிறப்பிடமாகவும் சூராவத்தை, கொழும்பு ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட சபரிமுத்து அந்தோனிப்பிள்ளை நேற்று (31.08.2018) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபரிமுத்து - மரியை தம்பதிகளின் மகனும், பாக்கியரத்தினத்தின் அன்பு கணவரும், ஜெராட் (லண்டன்), றூபினி (St.Annas' Maha Vidyalayam Col.13), றெஜினோல்ட் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான பொனிஸ்லஸ், ராசமணி, ரட்ணம் மற்றும் சூசைப்பிள்ளை ஆகியோரின் அன்பு சகோதரரும், ஆனந்தி (லண்டன்), றொகான் தம்பிராஜா (Ret. Assitant General Manager HNB - Colombo), நிசானியா (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சிந்துஜா, சம்யுதா, சுரேனிகா, சஞ்சிதா, சுவேதா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (01.09.2018) சனிக்கிழமை 21/6, யூபிலி மாவத்தை, கொழும்பு - 15 இல் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 3.30 மணியளவில் மாதம்பிட்டிய சேமக்காலையில் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(CS/19449) (11.17)

தொடர்புகளுக்கு-
றொகான் தம்பிராஜா
011 254 6969
21/6 யூபிலி மாவத்தை, கொழும்பு - 15

தகவல்
ஜெயக்குமார் லியோலக்சன்
075 042 8633
தேனருவி, சூராவத்தை,
சுன்னாகம்.

## திருமதி திலகவதி கணேசு



சுதுமலையைப் பிறப்பிடமாகவும், கொக்குவிலை வதிவிடமாகவும், அரசடி லேன், சுதுமலை, வடக்கு ரான்ஸ்போமர் அடியை தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட திருமதி திலகவதி கணேசு 29.08.2018 புதன்கிழமை காலமானார்.

அன்னார் வல்லிபுரம் - லக்சுமி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கந்தையா கணேசுவின் அன்பு மனைவியும், புவனேஸ்வரி , இரத்தினம், காலஞ்சென்றவர்களான சிங்கராஜா, ஜெகநாதன் (இராசு) மற்றும் ருக்குமணி, வேவி, யோகா, கலா (கனடா), சந்திரா ஆகியோரின் பாசமிகு சகோதரியும், குமார் (சவுதி), கங்கா, கவி, செல்வி (ஜேர்மனி), பிரபா (ஜேர்மனி), புனிதா (ஜேர்மனி), பபிதா (ஜேர்மனி), துசி (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயும், சாந்தினி, விஜயகுமார், சுந்தரலிங்கம், WolfGang (கியூ மெடிக்கா இயக்குநர் ஜேர்மனி), குமார் (ஜேர்மனி), ஜோன்சன் (ஜேர்மனி), ரெடன்ஸ் (ஜேர்மனி), கிருபா (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும், எப்சிபா, எபூசி, ரதீபன் - நிவேதா, காஜா - துஷ்யந்தன், லக்சன், லக்சி, ரெபேக்கா, பிறிசில்லா, பெஞ்சமின், அபிகாயில், காலேப், யோசுவா, சியான், சோபிகா, அஸ்வின், மேசாக், அபிசேக் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், கிசான், தர்மிகா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (02.09.2018) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தாவடி மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அரசடி லேன்,
சுதுமலை வடக்கு, ரான்போமர் அடி.


தகவல்:
குடும்பத்தினர்.

077 635 1801, 077 661 2018


# பாரம்பரியங்களை உள்ளடக்கியது ஸ்பெய்ன்

ஆகக்கூடுதலான பாரம்பரியப் பண்டிகைகளையும், கொண்டாட்டங்களையும் தன்னுள் உள்ளடக்கிய ஐரோப்பிய நாடென்றால் அது ஸ்பெய்ன்தான். சேற்றுச் சண்டை, காளையை அடக்குதல், காளையைக் கொல்லுதல் என்று இந்தப் பட்டியல் நீண்டு கொண்டே செல்லும். அந்தப் பட்டியலில் தக்காளிச் சண்டைக்கும் முக்கிய இடமுண்டு. தக்காளித் திருவிழா அல்லது தக்காளிச் சண்டை என்று இந்த விழா அறியப்படுகிறது. இந்த வருடத்துக்கான தக்காளித் திருவிழர ஸ்பெய்னின் வலென்சியா நகரில் அண்மையில் நடைபெற்றது. அது தொடர்பான ஒளிப்படங்களை பன்னாட்டு ஊடகமான ரொயிட்டர்ஸ் வெளியிட்டது. (ம)













**வீடு வாடகைக்குண்டு**

நீர்வேலி சந்தி பருத்தித்துறை வீதியில்
வீடு வளவும் சுற்றுமதில் கட்டப்பட்டுள்ளது.
வாடகைக்குண்டு.
**077 633 1914**

**விற்பனைக்கு**

பொமேரியன் ஆண், பெண்நாயும், டசோன் ஆண், பெண் நாயும், பொக்கட்ஸ் பெனியர் ஆண், பெண் நாயும், அல்சேசன், வன்ரம் வெள்ளடியன், சடைமுயல்,நல்ல இனபுறா ஊர்க்கோழி

**தொடர்பு - லி.மயூரன் புன்னாலைக்கட்டுவன் தெற்கு. ஆயக்கடவை பிள்ளையார் கோயில் முன்பாக பூதராயர் கோயிலடி டயலைக் ரவர் அருகில். 077 0158 690**

கோடிபதி சனிதா KOTIPATHI SHANIDA
சீட்டிழுப்பு வாரம்: 335
வர்ணம் : செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 2018.08.31
அடுத்த ஞாயிற்றுக்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 92,713,798/-
U 05 48 54 77
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 359
வர்ணம் : செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 2018.08.31
இன்றைய ஜக்பொட் பரிசு
ரூ. 65,186,690/-
வெற்றி இலக்கங்கள்
15 20 61 67 J
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 849
சீட்டிழுப்பு திகதி 2018.08.30 வியாழக்கிழமை
U 03 27 61 70
அடுத்த சுப்பர் ஜக்பொட்
ரூ. 50,724,952/-
தொ.பே: 011 4062002 / 011 4062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்
நீல நிற டிக்கட்டுகள் 2018.09.01ம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

நியத ஜய நியத்த ஜய Niyatha Jaya
சீட்டிழுப்பு வாரம் : 698 வர்ணம் : நீலம்
திகதி : 2018.08.31
வெற்றி இலக்கங்கள் ஆங்கில எழுத்து
27 34 53 63 I
அடுத்த செவ்வாய்க்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 14,573,416/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
1919 இற்கு அனுப்பவும்.
துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

## ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் தில்லைநாதன் கமலாசினி**


*எம் குடும்ப பாச விளக்காய் ஒரு கூட்டுக் கிளியாக*
*எம்மோடு வாழ்ந்து எமையெல்லாம் தவிக்கவிட்டு*
*விண்ணுலகு புகுந்த உங்களை*
*நாம் எண்ணாத நாளில்லையம்மா!*

**கல்லூரி ஒழுங்கை,**
**நீராவியடி, யாழ்ப்பாணம்.**

**குடும்பத்தினர்.**

(IN7574/11/17)

## மரண அறிவித்தல்கள்



### மார்க்கண்டு சொர்ணரூபன்

புங்குடுதீவு 5 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட மார்க்கண்டு சொர்ணரூபன் 12.08.2018 ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மார்க்கண்டு மற்றும் பரமேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகனும், பகீரதி, ஜெயரூபன், மோகனரூபன் ஆகியோரின் அன்பு சகோதரரும் ஆவார்.

**அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.**

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(CS19455/11/17)

**தகவல்: குடும்பத்தினர்.**

**077 500 6945 - ஜெயரூபன்,**
**077 714 0055 - மோகனரூபன்**

### கதிரவேலு திருநாவுக்கரசு



குஞ்சுப்பரந்தனைப் பிறப்பிடமாகவும், கச்சாய் தெற்கு கொடிகாமத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு திருநாவுக்கரசு ( கிளி அண்ணா) நேற்று (31.08.2018) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு காசிப்பிள்ளை தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும் மயில்வாகனம் சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகனும் திலகவதி, புலேந்திரன் ஆகியோரின் அன்புச்சகோதரரும் அன்னபூரணத்தின் அன்புக்கணவரும் உதயறஞ்சினி (தாதியர் உத்தியோகஸ்த்தர், போதனா வைத்தியசாலை யாழ்ப்பாணம்) காந்தரூபன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத்தந்தையும் க. துற்ஜெயந்தனின் (ஆசிரியர், கிளி/ சிவநகர் அ.த.க. பாடசாலை) அன்புமாமனும் ஹரிப்ரவீனின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (31.08.2018) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகள் எறியால்பிட்டி இந்து மயானத்தில் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**புங்கடி பிள்ளையார் வீதி,**
**கச்சாய் தெற்கு, கொடிகாமம்.**

**தகவல் : குடும்பத்தினர்.**

### தம்பித்துரை அருணபாலன்



பிறப்பு 07.01.1941 இறப்பு 31.08.2018

கொழும்பை பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணத்தைவசிப்பிடமாகவும் கொண்ட தம்பித்துரை அருணபாலன் நேற்று (31.08.2018) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பித்துரை - மங்கையர்க்கரசி தம்பதிகளின் மகனும், செல்வராசா-மகேஸ்வரி தம்பதிகளின் மருமகனும், ஜெயமணியின் அன்புக்கணவரும், அம்பிகைபாகனின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.09.2018) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**182, இராமநாதன் வீதி**
**திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.**

(CS19447/11/17)

**தகவல்: குடும்பத்தினர்.**

## கட்சி...

தொடங்குவது. நான்காவது கட்சி அரசியலை விட்டு எமது தமிழ் மக்கள் பேரவையை ஒரு உண்மையான மக்கள் பேரியக்கமாக மாற்றி உள்நாட்டு வெளிநாட்டு தமிழ் மக்களை ஒன்றிணைத்து அரசுடன் எமக்கேற்ற தீர்வொன்றை முன் வைத்துப் பெற முயற்சிப்பது. இந்தத் தெரிவுகள் தொடர்பில் தமிழ் மக்கள் பேரவையின் உறுப்பினர்களிடம் கருத்துக் கேட்கப் பட்டது.

அரசியலிருந்து ஒதுங்குவது என்ற தெரிவை பேரவையினர் ஏகமனதாக நிராகரித்தனர். அரசியல் கட்சியில் இல்லாமல் பேரவையில் மாத்திரம் தொடர்வது பாதிப்பை ஏற்படுத்தும் என்று முதலமைச்சருக்கு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. மக்கள் பிரதிநிதியாக இல்லாவிடின் பன்னாட்டு அரங்குகளில் பங்கேற்று கருத்துத் தெரிவிக்க முடியாத மற்றும் தெரிவிக்கும் கருத்துக்களைப் பன்னாட்டுச் சமூகம் ஏற்றுக் கொள்ளாத நிலமை ஏற்படும் என்று முதலமைச்சருக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிய கட்சியை ஆரம்பிக்குமாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் முதலமைச்சரை கடுமையாக வலியுறுத்தியுள்ளார். (5.105)

## கூட்டாட்சி...

காரப் பகிர்வே தேவை என்றுதான் நான் குறிப்பிட்டேன் என்று பதிலளித்தார்.

புதிய அரசமைப்புத் தொடர்பான விழிப்புணர்வூட்டும் தொடர் கலந்துரையாடல் தென்னிலங்கையில் நடத்தப்பட்டு வருகின்றது. காலியில் சில தினங்களுக்கு முன்னர் கலந்துரையாடல் நடைபெற்றது. அந்தக் கலந்துரையாடலில் பங்கேற்ற நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்ததாவது. தமிழ் மக்களின் அனைத்துப் பிரச்சினைகளும் புதிய அரசமைப்பால் தீரப்போவதில்லை. புதிய அரசமைப்பு ஒரு அடிப்படை ஆகும். அது இல்லையேல் ஒரு பிரச்சினையையும் ஆராய முடியாது.

நிலையான பெரும்பான்மையைக் கொண்ட நாடொன்றில் அனைத்து மக்களுக்கும் சமனான முறையில் குடியுரிமை. உரிமைகள் கிடைக்கத்தக்க வகையில் ஆட்சி அதிகாரங்கள் பகிரப்படுதல் முக்கியமானது. சாதாரண பெரும்பான்மை ஆட்சியின் காரணமாக ஏற்பட்ட அநீதிகளைச் சிங்களப் பெரும்பான்மையினர் ஒத்துக் கொள்வதுடன் ஏனைய மக்களுக்காக மறுசீரமைப்பு மற்றும் நீதிக்காக முன்வர வேண்டும் - என்றார்.

நிகழ்வில் உரையாற்றி முடித்த பின்னர், கூட்டாட்சி தீர்வு மாத்திரம்தான் வேண்டுமா? என்று தன்னிடம் கேள்வி எழுப்பப்பட்டதாகக் குறிப்பிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அதற்கு. கூட்டாட்சி என்ற பெயர்ப் பலகையில் தொங்கிக் கொண்டிருக்க வேண்டியதில்லை. ஆக்கபூர்வமான அதிகாரப் பகிர்வே தேவை என்று பதிலளித்தாகத் தெரிவித்தார். (5)

## நானே...

கொண்டு ஒப்புதல் வாக்குமூலம் வழங்கியுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கிளிநொச்சியில் கடந்த 28ஆம் திகதி பெண்ணொருவரின் சடலம் மீட்கப்பட்டிருந்தது. அவர் முருகண்டியைச் சேர்ந்த கருப்பையா நித்தியகலா (வயது32) என்று அடையாளம் காணப்பட்டிருந்தார். அவர் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்று சந்தேகம் ஆரம்பத்தில் வெளியிடப்பட்டிருந்தது. மறுநாள் இடம்பெற்ற உடற்கூற்றுப் பரிசோதனையில் அது உறுதியானது. அத்துடன் அவரது வயிற்றில் ஐந்து மாத கரு இருப்பதும் தெரியவந்தது.

### அலைபேசி அழைப்பு பரிசீலனை

நித்தியகலாவின் அலைபேசி மீட்கப்பட்டது. அலைபேசித் தரவுகளை பரிசீலனை செய்த பொழுது. நித்தியகலா பணியாற்றிய நிறுவனத்தில் பணிபுரியும் இன்னொரு ஆண் பாதுகாப்பு உத்தியோகத்தரின் அலைபேசியில் இருந்தே இறுதியாக அழைப்பு எடுக்கப்பட்டுள்ளது. நித்தியகலாவும் அவரும் நீண்டகாலமாக அலைபேசி அழைப்புகள் ஊடாகத் தொடர்பில் இருந்துள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. சம்பவம் நடைபெற்ற அன்று இரு அலைபேசிகளும் நீண்ட நேரமாக ஒரே கோபுர அலையிலையே நகர்ந்துள்ளமை கண்டறியப்பட்டது.

### சந்தேக நபர் கைது

இதனடிப்படையில். நேற்று மதியம் ஆடைத் தொழிற்சாலையில் கடமையில் இருந்த பாதுகாப்பு உத்தியோகத்தரான கிருஸ்ணகீதன் கைது செய்து விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார். விசாரணையின் போது. இந்தக் கொலையை தானே செய்ததாக அவர் வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் கிளிநொச்சி விநாயகபுரத்தைச்சேர்ந்த இரண்டுபிள்ளைகளின் தந்தையாவார். அவரது ஒப்புதல் வாக்குமூலத்தில் தெரிவித்திருப்பதாவது.

### தற்கொலை

கொல்லப்பட்ட பெண்ணுடன் எனக்குத் தொடர்பு இருந்தது. அவரது வயிற்றில் வளர்ந்த குழந்தை என்னுடையது தான். அவள் தன்னைக் கூட்டிச் செல்லுமாறு வற்புறுத்தினாள்.

எனக்கு குடும்பம் இருந்தது. அவளைக் கூட்டிச்செல்ல முடியவில்லை. இருவரும் தவறான முடிவெடுத்து உயிரிழப்போம் என்று தீர்மானித்தோம். கடந்த 28ஆம் திகதி அவள் கடமை முடிந்து தொழிற்சாலையை விட்டு வெளியில் வந்ததும். நான் எனது வீட்டில் இருந்து நடந்து வந்து அவளது உந்துருளியில் ஏறிக் கொண்டேன். பின்னர் அம்பாள்குள வீதியூடாக கிளிநொச்சி வந்து உள் பாதைகளால் கரடிப்போக்கு வந்து. பின்னர் மீண்டும் உள் பாதைகளால் சம்பவ இடத்துக்குச் சென்றோம்.

### கழுத்து நெரித்துக் கொலை

வரும்போதே நித்தியகலாவை மருந்துப் போத்தல் வாங்கிவந்தாள். அங்கு சென்றதும் குடிப்போம் என்றதும் எமக்குள் சிறு பிரச்சினை வந்துவிட்டது. நித்தியகலா பாதுகாப்பு உத்தியோகத்தரின் உடையில் வந்தமையால்-அவளது கழுத்துப் பட்டியில் தொழில் அடையாள அட்டை தொங்கிக் கொண்டிருந்தது. கழுத்தில் இருந்த பட்டியைக் கொண்டே கழுத்தை நெரித்துக் கொலை செய்தேன்.

உயிரிழந்தவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் என்று அடையாளம் காணப்படக் கூடாது என்பதற்காக நித்தியகலாவின் பாவாடை. மேற்சட்டை என்பவற்றை கழற்றி எடுத்துவிட்டு. சடலத்தை அருகில் இருந்த வயல்வெளிக்குள்ளால் இழுத்துச் சென்று. வாய்க்காலுக்குள் போட்டேன்.

### தடயங்கள் மறைப்பு

உந்துருளியை எடுத்துக் கொண்டு வந்து கனகபுரம் பகுதியில் அவரின் பாவாடையை எறிந்துவிட்டு, கைப்பை மற்றும் மேற்சட்டை என்பவற்றை அம்பாள்குளப் பகுதியில் எறிந்தேன். உந்துருளியில் நள்ளிரவு நேரம் வீட்டுக்கு வந்தேன். பின்பக்கமாக இருக்கும் அறையில் உந்துருளி தலைக்கவசத்தை ஒழித்து வைத்து விட்டு மருந்துப் போத்தலை எடுத்து குடிக்க நினைத்தேன். எனது பிள்ளைகள் நினைவு வந்ததால் அதனையும் வீட்டுக்குள் ஒளித்துவைத்து விட்டேன். சம்பவ இடத்தில் இடுப்புபட்டி மற்றும் சில தடயங்களை மட்டும் விட்டுவிட்டு, மற்றவற்றை நானே கொண்டு வந்தேன். இந்தக் கொலையை நான் மட்டுமே செய்தேன். என்னால் சம்பவ இடம், மற்றும் பொருள்கள் வீசப்பட்ட இடங்கள் என எல்லாவற்றையும் அடையாளம் காட்ட முடியும், என்று வாக்குமூலத்தில் குறிப்பிட்டிருந்தார்.

### பொருள்கள் மீட்பு

வாக்குமூலம் பதிவு செய்யப்பட்ட பின்னர், பொருள்கள் வீசப்பட்ட இடத்துக்கு அவரைப் பொலிஸார் அழைத்துச் சென்றனர். கனகபுரத்தில் வீசப்பட்ட பாவாடை மீட்கப்பட்டது. பின்னர், அவரது வீட்டுக்குச் சென்று உந்துருளி, அவர் பாவித்த அலைபேசி, தலைக்கவசம் மற்றும் மருந்துப் போத்தல் என்பவற்றை மீட்டனர். அம்பாள்குளம் பகுதியில் வீசப்பட்ட மேற்சட்டையை சம்பவம் நடைபெற்ற மறுநாளே பொலிஸார் மீட்டிருந்தனர்.

சந்தேகநபரின் மனைவியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. சந்தேகநபர் கிளிநொச்சிப் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

### உடல் அடக்கம்

நித்தியகலாவின் இறுதிக் கிரியைகள் நேற்று நடைபெற்று உடல் அடக்கம் செய்யப்பட்டது. முருகண்டியில் உள்ள அவரது இல்லத்தில் இறுதிக் கிரியைகள் நடைபெற்றன. பிற்பகல் உடல் அடக்கம் செய்யப்பட்டது. (5,35)

## வித்தன்...

புதுக்குடியிருப்பு. உடையார் கட்டு பாவாடைக்கல் பிரதேசத்தில் நேற்றுக் காலை இடம்பெற்றது. சுதந்திரபுரம் வெள்ளப்பள்ளம் என்ற இடத்தில் தற்காலிகமாக தங்கியுள்ள. யாழ்ப்பாணம் வடமராட்சி. குடத்தனை கிழக்கு குடத்தனையை சொந்த இடமாகக் கொண்ட செல்வராசா சுதாகரன் (வயது-40) என்பவரே உயிரிழந்தார்.

ஆற்றின் இரு கரையிலும் உள்ள வித்தனையை கீழே நின்று குடைந்து அகழ்ந்துள்ளார். வித்தனை சரிந்து அவர் மீது விழுந்துள்ளது. அந்தப் பகுதியில் நின்று கொண்டிருந்தவர்கள் அவரை மீட்டு உடையார்கட்டு மருத்துவமனையில் சேர்ப்பித்தனர். அங்கிருந்து புதுக்குடியிருப்பு மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டார். பின்னர் மாஞ்சோலை மருத்துவனைக்கு கொண்டு செல்லப்பட்டார். அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

ஆற்றின் வித்தனையை குடைந்து மணல் அகழ்வது சட்டவிரோதமானது என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, உடையார் கட்டு பாவாடைக்கல் ஆற்றின் வித்தனைக் குடைந்து மணல் அகழ்வதற்கு எதிராக அந்தப் பகுதி மக்கள் நேற்று கவனயீர்ப்புப் போராட்டத்தையும் மேற்கொண்டிருந்தனர்.

இந்தச் சம்பவங்கள் தொடர்பில் பொலிஸார் எதுவித நடவடிக்கைகளையும் மேற்கொள்வதில்லை என்று மக்களால் குற்றஞ் சுமத்தப்படுகின்றது.

(21.ரி3.105)

## மரண அறிவித்தல்

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 15 . 05 . 1927 | 30 . 08 . 2018 |



## மகேஸ்வரி வைத்திலிங்கம்

கோண்டாவில் குமரகோட்டத்தைப் பிறப்பிடமாகவும். வசிப்பிடமாகவும் கொண்ட மகேஸ்வரி வைத்திலிங்கம் கடந்த (30.08.2018) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விஸ்வலிங்கம் அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்ற வல்லிபுரம் வைத்திலிங்கத்தின் அன்புமனைவியும் பர்வதபத்தினிதேவி. சரவணபவன் (ஜேர்மனி). காலஞ்சென்ற அருந்ததிதேவி மற்றும் பவானந்தன் (லண்டன்). கோதைநாயகி ஆகியோரின் அன்புத்தாயும் காலஞ்சென்ற இராஜேஸ்வரன் மற்றும் அம்பிகாதேவி காலஞ்சென்ற பத்மநாதன் மற்றும் புஸ்பராணி. நடராசா ஆகியோரின் அன்புமாமியும் சோமசுந்தரத்தின் அன்புச்சகோதரியும் இராஜேஸ்வரியின் அன்பு மைத்துனியும் இராஜஸ்ரீ (கனடா). இராஜதேவி (பிரான்ஸ்). கலைச்செல்வி (ஆஸ்திரேலியா). இராஜேஸ்வரி (இலங்கை). சோபியா (லண்டன்). பிரணவன் (ஜேர்மனி). பார்த்தீபன் (ஜேர்மனி).பத்மஸ்ரீ (கனடா). நிரஞ்சன் (பிரான்ஸ்). அகிலன் (கனடா). கார்த்திகா (கனடா). சஞ்சீவன் (ஆஸ்திரேலியா). தரங்கினி (பிரான்ஸ்). யாசோதரன் (சிங்கப்பூர்). யாதவன் (சிங்கப்பூர்). ஹம்சவாகினி (இலங்கை) ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் வித்தகன் (கனடா), சுபாணன் (கனடா). சுபாங்கன் (பிரான்ஸ்). சங்கரன் (பிரான்ஸ்). சாருஜா (பிரான்ஸ்). சிவானி (ஆஸ்திரேலியா). சிவானுஜன் (ஆஸ்திரேலியா). சாயகீத் (இலங்கை). அவினா (லண்டன்). அகன்யா (லண்டன்). விதுனன் (லண்டன்). வனிஷா (கனடா). பவிஸ் (கனடா). பிரதீன் (பிரான்ஸ்). பிரதியும்னன் (கனடா). ஸ்ருதிகா (கனடா). அக்ஷா(பிரான்ஸ்). அகரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப்பூட்டியும் ஆவார்.

அன்னாரின இறுதிக்கிரியைகள் நாளை (02.09.2018) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11 மணியளவில்கோண்டாவில் குமரகோட்டத்தில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : குடும்பத்தினர்

021 205 3603

W K



# மயக்கம் வருவதற்கான காரணங்கள்

சில பேருக்கு திடீரென மயக்கம் வரும். அப்படி மயக்கம் வரக்காரணம் என்னவாக இருக்கும் என யோசனை செய்துள்ளீர்களா? நான் நன்றாய்த் தான் இருந்தேன், ஆனால் திடீரென்று மயக்கம் ஏற்பட்டு என் நினைவுகளை இழக்கிறேன் என புலம்புவர்களா நீங்கள்? இதற்கான காரணங்கள் என்ன என்று அறிந்து கொள்ளுங்கள்?

மருத்துவ ஆராய்ச்சியின் படி மூளைக்கு செல்லும் ஒக்சிசன் பற்றாக்குறையால் ஏற்படும் உணர்வுதான் இந்த மயக்கம் வர காரணம் என்று தெரியவந்துள்ளது.

மயக்கம் வர முக்கிய காரணங்கள் என்னவென்று பார்ப்போம்.

- எமது உடம்பில் குறைந்த குருதி அழுத்தம் காரணமாக கூட மயக்கம் வரலாம். இது அனேகமாக வயதானவர்களுக்கு தான் அதிகமாக இருக்கும். அதாவது 65 வயது கடந்தவருக்கு தான் குறைந்த குருதி அழுத்தத்தால் மயக்கம் ஏற்படும்.
- உடலில் உள்ள நீரின் சமநிலை சேதப்படும் போது குருதியின் வேகம் குறைந்து குருதி அழுத்தம் வேகமாகும். அப்பொழுது உடம்பில் நடுக்கம் ஏற்பட்டு நரம்புமண்டலம் பாதிக்கப்படும். இந்த சமயத்தில் மயக்கம் ஏற்பட வாய்ப்புள்ளது.
- இன்சுலின் சமசீர் நிலையை இழப்பதால் ஏற்படும். மனித உடம்பில் சர்க்கரையை உடலுக்குத் தேவையான சக்தியாக மாற்ற இன்சுலின் அத்தியாவசியமாக உள்ளது. குருதியில் சர்க்கரை அளவு சரியாகக் கட்டுப்படுத்தப்படவில்லை எனில் உயர் குருதி அழுத்தம், நாடிகளில் குருதி சரியாக செல்லாது. அடிக்கடி சிறுநீர் கழித்தல் ஏற்படும், அதிகமாக தாகமெடுக்கும் போன்ற அறிகுறிகள் உடம்பில் ஏற்படும். அச்சமயங்களில் உடல் சோர்வடைந்து மயக்கம் ஏற்படலாம்.
- இருதயத் தசைகளும், குருதிக் குழாய்களும் வலுவிழந்து விடுவதாலேயே இந்த நோய் ஏற்படுகிறது. இதனால் மூளைக்கு செல்லும் குருதியின் பாதையில் தடங்கல் ஏற்பட்டு மயக்கம் வரும்.



## இது புதுசு

பெண்களுக்கான செருப்பு வகைகள் சில சந்தைக்கு அறிமுகமாகியுள்ளன. இவை 900 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றன.

## கிராம்பு...!



- கிராம்புத் தூளை பற்பொடியுடன் கலந்து பயன்படுத்தி வர, வாய் நாற்றம், ஈறு வீக்கம், பல்வலி ஆகியவை குணமாகும். கிராம்பு எண்ணெயை பாதிக்கப்பட்ட ஈறுகளில் தடவிவர குணம் கிடைக்கும்.
- பித்தம் அதிகம் உள்ளவர்கள் தினமும் ஒன்று அல்லது இரண்டு கிராம்பை வாயில் போட்டு மெதுவாக மென்று சாறு உண்டால் பித்தம் குறையும்.
- பேருந்துகளில் பயணம் செய்பவர்களக்கு சில சமயங்களில் வாந்தி ஏற்படும். மலை ஏறுபவர்கள் சிலருக்கு வாந்தி உண்டாகும். இவர்கள் கிராம்பை வாயில் போட்டு இலேசாக மென்று சாப்பிட்டால் வாந்தி நிற்கும்.
- வறட்டு இருமல் உள்ளவர்கள் கிராம்புப் பொடியுடன் பனங்கற்கண்டு சேர்த்து பாலில் கலந்து காய்ச்சி அருந்தி வந்தால் வறட்டு இருமல் நீங்கும்.

## மரக்கறிகளின் நேற்றைய விலை


| மரக்கறிகள் | சுன்னாகம் | மருதனார்மடம் | நெல்லியடி | திருநெல்வேலி |
|---|---|---|---|---|
| கத்தரி | 120 | 90 | 100 | 100 |
| முள்ளங்கி | 80 | 80 | 120 | 120 |
| மரவள்ளி | 40 | 40 | 40 | 40 |
| பயிற்றை | 120 | 80 | 40 | 100 |
| பாகல் | 280 | 160 | 180 | 240 |
| க.கிழங்கு | 100 | 100 | 220 | 120 |
| பெ.வெங்காயம் | 100 | 105 | 140 | 110 |
| சி.வெங்காயம் | 120 | 120 | 140 | 140 |
| பூசணி | 40 | 80 | 100 | 60 |
| தக்காளி | 180 | 160 | 100 | 160 |
| வாழைக்காய் | 70 | 80 | 80 | 80 |
| கீரை | 20 | 20 | 10 | 20 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 40 | 40 |
| ப.மிளகாய் | 400 | 400 | 300 | 500 |
| புடோல் | 110 | 70 | 100 | 100 |
| கோவா | 150 | 180 | 180 | 160 |
| வெண்டி | 100 | 50 | 100 | 100 |
| போஞ்சி | 300 | 250 | 260 | 280 |
| லீக்ஸ் | 240 | 150 | 140 | 180 |
| தேங்காய் | 70 | 50 | 60 | 70 |
| உ.கிழங்கு | 100 | 100 | 100 | 100 |
| தேசிக்காய் | 80 | 50 | 40 | 50 |
| வல்லாரை | 20 | 40 | 15 | 20 |
| கறிமிளகாய் | 280 | 200 | 300 | 300 |
| கரட் | 280 | 300 | 320 | 180 |
| முருங்கைக்காய் | 200 | 120 | 60 | 180 |

## கடலுணவின் நேற்றைய விலை நிலவரம்



| | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| இறால் | 1000 | 1000 | 1200 | 1000 |
| நண்டு | 600 | 500 | 700 | 600 |
| கணவாய் | 800 | 900 | 1000 | 1000 |
| பாரை | 700 | 900 | 800 | 1100 |
| சுறா | 900 | 900 | 1200 | 1200 |
| சீலா | 500 | 500 | 700 | 400 |
| விளை | 600 | 500 | 700 | 700 |
| முரல் | 400 | 400 | 600 | 500 |
| கும்பிளா | 400 | 350 | 500 | 300 |
| கிளாக்கன் | 800 | 400 | 600 | 600 |
| ஓரா | 400 | 500 | 600 | 500 |
| திரளி | 250 | 300 | 300 | 250 |
| நகரை | 250 | 300 | 500 | 250 |
| சூடை | 180 | 150 | 300 | 150 |
| ஒட்டி | 300 | 300 | 400 | 400 |
| திருக்கை | 350 | 300 | 500 | 400 |
| மதனம் | 250 | 300 | 300 | 300 |
| கொய் | 200 | 100 | 100 | 100 |
| பாலை | 250 | 300 | 700 | 300 |
| வாளை | 200 | 300 | 500 | 200 |

# பழைய சோறு அற்புதமான மருந்து




முதல் நாள் சோற்றில் நீரூற்றி, மறுநாள் சாப்பிடும் இந்த பழைய சோற்றில் தான் விற்றமின் பி6 விற்றமின் பி12 ஏராளமாக இருக்கிறது என்கிறது ஆய்வு. தவிரவும் உடலுக்கு, குறிப்பாக சிறு குடலுக்கு நன்மை செய்யும் 'ட்ரில்லியன்ஸ் ஒப பக்ரீரியாஸ்' பெருகி எமது உணவுப் பாதையையே ஆரோக்கியமாக வைத்திருக்கிறதாம்!

கூடவே இரண்டு சிறிய வெங்காயம் சேரும்போது, நோய் எதிர்ப்பு சக்தி அபரிமிதமாகப் பெருகுகிறதாம்.

**பழைய சோற்றின் நன்மைகள் சில**

1. காலையில் உணவாக இந்த பழைய சோற்றைக் குடிப்பதால், உடல் இலேசாகவும், அதே சமயம் சுறுசுறுப்பாகவும் இருக்கிறது.
2. இரவே தண்ணீர் ஊற்றி மூடி வைப்பதால் இலட்சக்கணக்கான நல்ல பக்ரீரியாக்கள் இதில் உருவாகின்றன.
3. மறுநாள் இதை குடிக்கும் போது உடல் சூட்டைத் தணிப்பதோடு குடல்புண், வயிற்று வலி போன்றவற்றையும் குணப்படுத்தும்.
4. அதுமட்டுமில்லாமல் இதிலிருக்கும் நார்ச்சத்து, மலச்சிக்கல் இல்லாமல் உடலை சீராக இயங்கச் செய்கிறது.
5. இந்தப் பழைய சோறு உணவு முறையை சில நாள் தொடர்ந்து சாப்பிட்டால், குருதி அழுத்தம் கட்டுக்குள் வந்துவிடும், உடல் எடையும் குறையும்.
6. மிகவும் முக்கியமான விஷயம் என்னவென்றால் உடலுக்கு அதிகமான சக்தியை தந்து நாள் முழுக்க சோர்வின்றி வேலை செய்ய இது உதவுகிறது.
7. அலர்ஜி, அரிப்பு போன்றவை கூட சட்டென்று சரியாகிவிடும்.
8. அல்சர் உள்ளவர்களுக்கு இதைக் கொடுத்து வர, ஆச்சரியப்படும் அளவிற்குப் பயன் கிடைக்கும்.
9. எல்லாவற்றிற்கும் மேலாக நோய் எதிர்ப்பு சக்தி அதிகளவில் கிடைப்பதால், எந்த நோயும் அருகில்கூட வராது.
10. ஆரோக்கியமாக அதே சமயம் இளமையாகவும் இருக்கலாம்.

# அரச வருமானம்



தகவல் மூலம் : நிதி மற்றும் பொது தகவல் சாதனங்கள் அமைச்சு

## தங்கத்துக்கான இறக்குமதி வரியைக் குறைக்கத் தீர்மானம்




தங்கத்துக்கான இறக்குமதி வரியை 50 சதவீதத்தால் குறைப்பது தொடர்பில் தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபையின் தலைவர் பேசல ஜெயரத்ன தெரிவித்துள்ளார்.
மேலும் இதுவிடயம் தொடர்பான கலந்துரையாடல் அரச தலைவர் மற்றும் நிதியமைச்சர் இடையே இடம்பெற்றுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
கடந்த மார்ச் மாதம் தங்கத்துக்கான இறக்குமதி வரி நூற்றுக்கு 15 சதவீதத்தினால் அதிகரிக்கப்பட்டதோடு, தங்க வர்த்தகத்தில் ஈடுபடுகின்ற வர்த்தகர்கள் இறக்குமதி வரியை குறைக்குமாறு தொடர்ச்சியான அழுத்தங்களை அரசுக்கு முன்வைத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஓ)

## ஏற்றுமதி உற்பத்திக் கிராமங்களை அமைக்க அரசு முயற்சி

நாட்டில் ஐந்தாயிரம் ஏற்றுமதி உற்பத்திக் கிராமங்களை அமைப்பது தொடர்பில் சமூக சேமநல ஆரம்ப கைத்தொழில்துறை அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.
ஏற்றுமதி உற்பத்திக் கிராமங்களை அமைப்பது தொடர்பில் சமூக சேமநல மற்றும் ஆரம்ப கைத்தொழில்துறை அமைச்சர் தயா கமகே சமர்ப்பித்த அமைச்சரவை பத்திரத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
முதல் கட்டமாக 300 பிரதேச செயலகப் பிரிவுகளில் ஆயிரம் ஏற்றுமதி கிராமங்கள் அமையவுள்ளன.
[illegible] 2020 [illegible] காலப் பகுதியில் [illegible] நடைமுறைப்படுத்தவும், [illegible] கிராமங்களில் எண்ணிக்கையை 5 [illegible]ஆக அதிகரிப்பதற்கும் தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ஓ)

## தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் அதிகரித்துள்ளது

*ஜூலை மாதத்தில் 3.4 வீதமாகப் பதிவு*

தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்கள் அடிப்படையான வருடத்தின் மீது வருட பணவீக்கம் கடந்த ஜூன் மாதத்தில் 2.5 வீதத்திலிருந்துடன் ஜூலை மாதத்தில் 3.4 வீதமாக அதிகரித்துள்ளது.
இந்த தகவலை தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரப் பணிப்பாளர் நாயகம் திருமதி இந்து பண்டார வெளிப்படுத்தியுள்ளார்.
நடப்பு வருடத்தின் ஜூலை மாத காலப்பகுதியில் உணவு மற்றும் உணவல்லாப் பிரிவுகளிலிருந்து பணவீக்கத்துக்கான பங்களிப்புகள் முறையே 1.09 வீத மாகவும், 2.31 வீதமாகவும் இருந்ததுடன் 2017 ஆண்டு இதேகாலப்பகுதியில் பணவீக்கத்துக்கான மேற்படி இரு பிரிவுகளில் இருந்தான பங்களிப்புகள் முறையே 3.7 வீதமாகவும், 2.6 வீதமாகவும் பதிவாகியுள்ளது.
தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்களின் மாதம் மீது மாத மாற்றங்களை ஒப்பிட்டு நோக்குகையில், கடந்த ஜூன் மாதத்தில் பதிவாகிய 126.5 என்ற மாற்றம் ஜூலை மாதத்தில் 126.6 ஆக அதிகரித்துள்ளது. குறிப்பாக ஜூன் மாதத்துடன் ஒப்பிடுகையில் அதன் பின்பான ஜூலை மாதத்தில் 0.1 சுட்டெண் புள்ளி அல்லது 0.01 சதவீத அதிகரிப்பை வெளிக்காட்டியுள்ளது.
உணவுப்பொருள்களின் செலவுப் பெறுமதியானது 0.07 வீதத்தாலும் மற்றும் உணவல்லாப்பொருள்களின் செலவுப் பெறுமதியானது 0.08 வீதத்தாலும் அதிகரித்துள்ள தன்மைகளே இந்த மாதாந்த மாற்றங்களுக்கான முதன்மைக் காரணங்களாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.
தவிர உணவுப்பொருள்களின் குறைந்த செலவுப் பெறுமதிகள், 'தேங்காய், அரிசி, எலுமிச்சம் பழம், மரக்கறி, சீனி, சின்ன வெங்காயம், கடலை, மைசூர் பருப்பு, வெள்ளைப் பூடு மற்றும் மிளகு' என்பன பொருட்டு பதிவாகியுள்ளன. பச்சை மிளகாய், புதிய மீன், முட்டை, கருவாடு, பப்பாசிப் பழம், வாழைப்பழம், பால்மா, பெரிய வெங்காயம், குழந்தைப் பால்மா, உருளைக் கிழங்கு, மாம்பழம் மற்றும் அன்னாசிப் பழம்' போன்ற உணவுப் பொருள்கள் குறித்து சுட்டெண்ணில் அதிகரித்த செலவுப் பெறுமதிகள் பதிவாகியுள்ளன. (ஓ)

## ரூபாவின் பெறுமதியை அதிகரிக்க நடவடிக்கை

*தலைமை அமைச்சர் கருத்து*

டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதியை அதிகரிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.
பண்டாரநாயக்க ஞாபகார்த்த பன்னாட்டு மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.
மேலும் இது குறித்து கருத்து தெரிவித்துள்ள அவர்.
கடந்த காலங்களில் டொலரின் மதிப்பு தொடர்பிலும் பிரச்சினைகளை நாம் எதிர்கொண்டுள்ளோம். உள்ளூர் கட்டுமானப்பணிகளை போட்டித்தன்மை வாய்ந்ததாக மாற்றியமைப்பதற்கான முன்னாயத்த நகர்வாகவும் டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதியை அதிகரிப்பதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.
இலங்கை போன்றே ஏனைய நாடுகளிலும் டொலரின் பெறுமதி தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றது." - என்றார். (ஓ)


CSE COLOMBO STOCK EXCHANGE

கொழும்பு பங்குப்பரிவர்த்தனை - 147-2/3, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் - 0212221455

31/8/2018
www.cse.lk

பங்குச்சந்தைத் தகவல்கள்

| சுட்டிகள் | | இன்று | நேற்று |
|---|---|---|---|
| ASPI | 3.58 | 6,080.26 | 6,076.68 |
| S&P SL20 | -11.79 | 3,229.21 | 3,241.00 |
| வியாபாரப்புரள்வு | | 639,003,390 | 337,890,496 |
| உள்நாடு:- கொள்வனவு | | 470,476,928 | 253,385,376 |
| விற்பனை | | 370,617,600 | 176,495,952 |
| வெளிநாடு:-கொள்வனவு | | 168,526,432 | 84,505,112 |
| விற்பனை | | 268,385,760 | 161,394,528 |



| கம்பனி அதிகூடிய பங்குப்பரிமாற்றம் | குறியீடு | இறுதிவிலை | பங்குகள் | புரள்வு (Rs) |
|---|---|---|---|---|
| கொமர்சியல் வங்கி | COMB.N | 125 | 1,075,914 | 133,464,572 |
| ஜோன் கீல்ஸ் கோல்டிங்ஸ் | JKH.N | 139.9 | 789,056 | 110,047,114 |
| ஹைஆர்வுர் பைனான்ஸ் | BLI.N | 30.80 | 2,696,535 | 94,365,376 |
| சம்பத் வங்கி | SAMP.N | 281.00 | 331,308 | 93,158,954 |
| யூனியன் அஷ்யூரன்ஸ் | UAL.N | 290.30 | 201,956 | 55,561,737 |
| செலான் வங்கி | SEYB.N | 70.00 | 1,101,425 | 39,947,755 |
| டயலொக் | DIAL.N | 12.00 | 1,190,969 | 14,489,509 |
| சிலோன் டொபாக்கோ | CTC.N | 1339 | 10,000 | 13,390,000 |
| லங்கா ஓரிக்ஸ் லீசிங் | LOLC.N | 87 | 75,000 | 6,527,353 |
| லயன் பிரெவெரி சிலோன் | LION.N | 645 | 8,700 | 5,611,500 |

பங்குலாபம் அறிவித்தல்
தொழில்துறை ASPHALTS (சிலோன்) ரூபா 1.50
செரண்டிப் காணி ரூபா 10.00
ஆட்டோட்ரோமே (AUTO) ரூபா 0.50
Call 0777 822 014 / 0777 105 205

| சந்தைக் குறிகாட்டிகள் | |
|---|---|
| கம்பனிகள் | 297 |
| பரிமாற்றத்தில் | 231 |
| விலை உழைப்பு | 9.5 |
| புத்தகப்பெறுமதி | 1.2 |
| பங்குலாப விளைவு | 3.2 |

## 4ஆம் திகதி...

கின்றன. சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் துரித கதியில் கைது செய்யப்பட்டு தண்டனை வழங்கப்படவேண்டும்.

இவற்றை வலியுறுத்தி எதிர்வரும் 4ஆம் திகதி செவ்வாய்கிழமை காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தின் முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்துவதற்கு யாழ்ப்பாண மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் ஏற்பாடு செய்துள்ளது. இந்த ஆர்ப்பாட்டத்தில் மகளிர் அமைப்புகள், பொது மக்கள் ஆகியோர் கலந்து கொள்ள அழைக்கின்றோம் என்றுள்ளது. (ந-114)

## காணிகளை...

அறிக்கையை வெளியிட்டார். அதில் இலங்கை தொடர்பிலும் கருத்துக்களை முன்வைத்திருந்தார். தனது யாழ்ப்பாணப் பயணத்தையும் அதில் சுட்டிக்காட்டியிருந்தார்.

அவரது அறிக்கையில் இலங்கை தொடர்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது. இராணுவம் நிலங்களை கையகப்படுத்தியுள்ளது. தசாப்தகாலமாக தங்களுடைய வீடுகள், நிலங்கள் இழந்து துன்பப்பட்ட மக்கள் தொடர்ந்தும் கவலை தரும் நிலையில் வாழ்கின்றனர்.

அந்த மக்களுடைய சொந்தக் காணிகளை விடுவிப்பதாக அரசு வாக்குறுதியளித்தபோதும், அதனை ஏற்று நடப்பதற்கு இராணுவத்தினர் மறுத்துள்ளனர். இதன் காரணமாக அப்பாவி மக்கள் இடம்பெயர்ந்துள்ள நிலையிலும், தொடர்ந்தும் மோசமான துன்பங்களை அனுபவிக்கின்றனர் என்று குறிப்பிட்டுள்ளார். (5)

## பெண்கள்...

மக்கள் பிரதிநிதிகள் மற்றும் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டன.

**நீதி வேண்டும்**

கடந்த 28ஆம் திகதி திருமுருகண்டியைச் சேர்ந்த கறுப்பையா நித்தியகலா படுகொலை செய்யப்பட்டு நீர்ப்பாசனக் கால்வாயில் போடப்பட்ட கோரச் சம்பத்துக்கு வேதனையுடனான கண்டனத்தை தெரிவிக்கின்றோம். போரால் பாதிக்கப்பட்ட எமது உறவுகள் போரின் வடுக்களில் இருந்து இன்னம் மீளாத நிலையில் தொடர்ந்தும் படுகொலைகளும் ஏனைய குற்றச் செயல்களும் எம்மை மீளவும் கதிகலங்க வைத்துள்ளன.

திருமுருகண்டி நகரம் நாளாந்தம் இலட்சக்கணக்கில் பொதுமக்கள் ஒன்றுகூடும் இடம். பல்கலைக்கழகம், ஆடைத் தொழில்சாலை, பழங்கள் பதனிடும் தொழில்சாலை எனப் பெருமளவான மக்கள் பயன்டுத்தும் நகரமாக திருமுருகண்டி நகரம் காணப்படுகின்றது.

மக்களின் பாதுகாப்புக்காக திருமுருகண்டியில் நிரந்தரப் பொலிஸ் நிலையம் அமைக்க வேண்டும் என்று பல ஆண்டுகளாகக் கோரிக்கை விடுக்கப்பட்டபோதும் பயன் கிடைக்கவில்லை. மாறாக குற்றசெயல்கள் அதிகரித்துக் கொண்டிருக்கின்றன.

எமது மக்களைப் பாதுக்காகவேண்டியது நாட்டின் தலைவர் என்ற ரீதியில் தங்களின் தலையான கடமையாகும். பரிதவித்து உயிரிழந்த உறவுகளுக்குநீதி கிடைக்க வேண்டுமானால் குற்றவாளிகள் இனம்காணப்பட்டு காலம் தாழ்த்தாது தண்டனை வழங்கப்பட வேண்டும். அப்போதுதான் இனிமேலும் இந்த நாட்டில் இதுபோன்ற குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்த முடியும் என்று அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**விழிப்படைய வேண்டும்**

கண்டனக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்ததாவது. கொலைகளுக்குப் பின்னால் பெண்களின் வன்கொடுமைகளுக்கு பின்னால் அரசின் மறைமுகங்கள் இருக்கின்றன தெளிவாகத் தெரிகின்றது. முல்லைத்தீவு மாவட்டம் திருமுருகண்டியில் வசிக்கும் நித்தியகலா கிளிநொச்சி மாவட்டத்தில் உயிரற்ற நிலையில் மீட்கப்பட்டார். இதைப்போன்ற பல செய்திகளை கடந்த காலங்களில் நாங்கள் பார்க்கக்கூடியதாக இருந்தது.

பொலிஸார், அதிரடிப்படை, கடற்படை, வான்படை என்று எங்கு பார்த்தாலும் படையினர் குவிக்கப்பட்டுள்ள நிலையிலும், புலனாய்வாளர்களின் கண்காணிப்புகளுக்கு மத்தியில் இந்த மக்கள் வாழ்கின்ற சூழலில் பெண்கள் இளைஞர்கள், சிறுமிகள் மீதான தாக்குதல்கள் வன்முறைகள் எவ்வாறு நடைபெறுகின்றன.

அரசு நினைத்திருந்தால் இந்த விடயங்கள் நடைபெறாமல் தடுத்திருக்கலாம். திருமுருகண்டியில் பொலிஸ் நிலையம் இதுவரை அமைக்கப்படவில்லை என்றால் அதற்கு பின்னணியில் என்ன காரணங்கள் இருக்கின்றன?. இனியும் இவ்வாறு நடக்கக்கூடாது நாங்கள் விழிப்படையவேண்டும். நாம் விழிப்படைந்தால்தான் இவ்வாறான குற்றங்கள் தடுக்கப்படும் என்றார்.

**தீர்வு தேவை**

வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் தெரிவித்ததாவது. 2009ஆம் ஆண்டுக்கு முற்பட்ட காலத்தில் இப்படியான சம்பவங்கள் இல்லை. பெண்கள் தனியாக நள்ளிரவில் சென்றுவரக்கூடிய ஒரு ஆட்சி 2009ஆம் ஆண்டுக்கு முன்னர் இருந்தது. இப்போது பட்டப்பகலில் பெண்களுக்கு உத்தரவாதம் இல்லாத ஆட்சி நடக்கின்றது.

இதைப் பேசினால் நாங்கள் இனவாதம் பேசுகின்றோம் என்கிறார்கள். நாங்கள் இனவாதம் பேசவில்லை. மக்களின் பல போராட்டங்களுக்குத் தீர்வு வழங்கப்படவில்லை. நல்லாட்சி நடைபெற்றுக்கொண்டிருந்தால் மக்கள் ஏன் வீதியில் இறங்கிப் போராட வேண்டும்? என்றார்.

வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்களான சாந்தி சிறீஸ்கந்தராசா, சி.சிறீதரன் மற்றும் வடமாகாண சபை உறுப்பினர்களாக ஆ.புவனேஸ்வரன், து.ரவிகரன், சு.பசுபதிப்பிள்ளை, த.குருகுலராஜா மற்றும் புதுக்குடியிருப்புப் பிரதேச சபை தவிசாளர் செ.பிறேமகாந், பிரதேச சபை உறுப்பினர்கள், மக்கள் அமைப்புக்கள், பெண்கள் எனப் பலர் இதில் கலந்து கொண்டனர்.

**கிளிநொச்சியில் ஆர்ப்பாட்டம்**

அதேவேளை, வடக்கில் அண்மைக் காலமாகப் பெண்களுக்கு எதிராக இடம்பெற்று வருகின்ற வன்முறைகளைக் கண்டித்தும், பெண்களின் பாதுகாப்பை வலியுறுத்தியும் கொலை செய்யப்பட்ட முறிகண்டியைச் சேர்ந்த கர்ப்பிணியான கறுப்பையா நித்தியகலா விடயத்தில் குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டு நீதி நிலைநாட்டப்பட வேண்டும் என்று வலியுறுத்தியும் கிளிநொச்சியில் நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

கிளிநொச்சிச் சந்தைக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தின் பின்னர் ஏ9 வீதி வழியாக ஊர்வலமாகக் கிளிநொச்சிப் பொலிஸ் நிலையதுக்குச் சென்று பொலிஸ் மா அதிபருக்கான மனுவைக் கைளித்தனர். இந்த ஆர்ப்பாட்டத்தை சமத்துவம் சமூக நீதிக்கான மக்கள் அமைப்பு ஏற்பாடு செய்திருந்தது. (ந-35.6.214)

## தனிவழி...

இதேவேளை, வடக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து வெளியேறி இன்னொரு கட்சியுடன் இணைந்து போட்டியிட வேண்டும் அல்லது புதுக் கட்சி ஆரம்பிக்க வேண்டும் என்ற தெரிவுகள், முதலமைச்சரை இணைத் தலைவராகக் கொண்ட பேரவையின் உறுப்பினர்களால் முன்வைக்கப்பட்டுள்ளது.

பேரவையின் கூட்டத்தில் முதலமைச்சர் தெரிவித்ததாவது. ஒரு முக்கியமான கால கட்டத்தில் நாம் இங்கு கூடியுள்ளோம். மாகாண சபைத் தேர்தல்கள் வரப் போகின்றன.

என்னிடம் தற்போது நான்கு மாற்றுவழிகள் தரப்பட்டுள்ளன. திரும்ப என் வீட்டுக்குச் சென்று எனது ஓய்வு வாழ்க்கையைத் தொடர்வது. மற்றையது ஒரு கட்சியுடன் சேர்ந்து தேர்தலில் நிற்பது. மூன்றாவது புதிய கட்சி ஒன்றைத் தொடங்குவது. நான்காவது கட்சி அரசியலை விட்டு எமது தமிழ் மக்கள் பேரவையை ஒரு உண்மையான மக்கள் பேரியக்கமாக மாற்றி உள்நாட்டு வெளிநாட்டு தமிழ் மக்களை ஒன்றிணைத்து அரசுடன் எமக்கேற்ற தீர்வொன்றை முன் வைத்துப் பெற முயற்சிப்பது.

**புதிய கட்சி**

உண்மையில் நான்காவதாகக் கூறப்பட்ட விடயம் கடந்த இரண்டு நாள்களுக்கு முன்னர் முன்வைக்கப்பட்டது. நான்காவது மாற்றுவழி என்னைச் சிந்திக்க வைத்துள்ளது. கட்சி சாரா பேரியக்கங்கள் பல நாடுகளில் மக்களின் ஒத்துழைப்புடன் பல அரசியல் மாற்றங்களைக் கொண்டு வந்திருக்கின்றன. அதைப் பற்றி இன்றைய கூட்டத்தின் போது தமிழ் மக்கள் பேரவை உறுப்பினர்கள் சிந்தித்துக் கருத்துரை வெளியிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன். புதிய கட்சி தொடங்குவது பற்றியும் உங்கள் எல்லோரதும் கருத்தை அறிய ஆவலாய் உள்ளேன். கட்சி தொடங்குவது இலகுவானது அதை நடத்துவது சிரமமானது. மேலும் கட்சிகளைப் பதிவு செய்யப் பல காலம் எடுக்கும். தேர்தல்கள் வந்தால் எந்தச் சின்னத்தின் கீழ் போட்டியிட வேண்டும் என்ற கேள்வி எழும்.

**பலகோணங்களில் ஆராயவேண்டும்**

எது எவ்வாறு இருப்பினும் தமிழ் மக்கள் பேரவை ஒரு கட்சிசாரா, கட்சி அரசியலில் ஈடுபடாத இயக்கமாகவே தொடர்ந்து இயங்கி வருகின்றது. ஆனால் எமது நடவடிக்கைகள் காலத்திற்குக் காலம் முளைக்கும் காளான்கள் போன்று திடீரென்று வந்து மறைவதான இயல்பையே கொண்டிருக்கின்றன. தமிழ் மக்கள் பேரவை பல கோணங்களில் இருந்தும் தமிழ்ப் பேசும் மக்களின் நிலையை ஆராய வேண்டியுள்ளது.

கட்சி அரசியல் என்பது வேறு. மக்கள் அரசியல் என்பது வேறு. தேர்தல்கள், கட்சிகள், அவைசார்ந்த சட்ட திட்டங்கள் என்பன மக்கள் நலனுக்காக நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தாலும் அவை ஒரு குறுகிய வட்டத்தினுள் இயங்கும் அலகுகள். கட்சிகள் அடுத்த தேர்தலில் யார் வரவேண்டும், யாருடன் கூட்டுச் சேர வேண்டும். யாரை வெட்ட வேண்டும், யாரைப் புகழ வேண்டும் என்று தமது கட்சி நலன் சார்ந்தே சிந்திக்கின்றன. மக்கள் நலம் வேறு கட்சி நலம் வேறு - என்றார்.

**இரண்டு தெரிவுகள்**

முதலமைச்சரின் உரை முடிவடைந்த பின்னர் தமிழ் மக்கள் பேரவையின் உறுப்பினர்கள் கருத்துத் தெரிவித்தனர். முதலமைச்சர் அரசியலில் தொடர்ந்தும் இருக்க வேண்டும் என்றும் அவர் மக்கள் பிரதிநிதியாக இருக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினர். புதுக் கட்சி தொடங்குவதா, இருக்கும் கட்சி ஒன்றுடன் இணைவதா என்பதை முதலமைச்சரே முடிவெடுக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளனர்.

இரண்டு தெரிவுகளில் எதை முதலமைச்சர் தெரிவு செய்யப்போகிறார் என்பது தொடர்பில் அவர் நேற்றைய கூட்டத்தில் எதுவும் தெரிவிக்கவில்லை. (5.105)

## தமிழ்த் தேசியக்...

அவர் மேலும் தெரிவித்ததாவது, வரலாறு உங்களுக்கு வழங்க முன்வந்துள்ள தலைமைப் பாத்திரத்தை நீங்கள் ஏற்று முன்னெடுக்கத் தயாரா என்று தமிழ் மக்கள் பேரவையும் மக்களும் நீண்ட காலமாக என்னிடம் கேட்டு வருகின்றார்கள். இதற்குப் பதில் அளிக்க வேண்டிய கடப்பாடு எனக்கு இருப்பதை ஏற்றுக் கொள்கின்றேன்.

60 ஆண்டுகளுக்கு மேற்பட்ட தமிழ்த்தேசிய அரசியல் போராட்ட வரலாறு எனக்கு வகுத்து அளித்திருக்கும் பொறுப்பை நான் தெளிவாக உணர்ந்திருக்கின்றேன். இதில் எள்ளளவும் சந்தேகம் வேண்டாம்.

ஆனால் 2013ஆம் ஆண்டு ஆரம்பித்த வடக்கு மாகாணசபை தலைமைப் பதவி அதிகாரபூர்வமாக இன்னமும் சில வாரங்களில் முடிவுக்கு வருகிறது. இதை அடுத்து தமிழ்த் தேசிய அரசியல் தொடர்பில் நான் ஆழமாக ஆராய்ந்து வருகின்றேன். இது தொடர்பில் உங்களுடனும் (பேரவை) அனைத்து தமிழ்த் தேசிய கொள்கை சார் அமைப்புக்களுடனும் இணைந்து உரிய முடிவை விரைவில் அறிவிக்க உள்ளேன் - என்றார். (5.105)

## போர்...

கும்போதே மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

இராணுவத்தில் தற்போதுள்ளவர்களில் 40 சதவீதமானோர், 2009ஆம் ஆண்டு போர் முடிவுக்கு வந்த பின்னர், இணைத்துக் கொள்ளப்பட்டவர்களாவர். போர் முடிந்த பின்னர் இராணுவத்தில் இணைந்து கொண்ட இவர்களுக்கு நீர்க்காகம் கூட்டுப் பயிற்சி, ஒரு பெறுமதி மிக்க இராணுவப் பயிற்சிக்கான சிறந்த அடித்தளமாக இருக்கும்.

எதிர்காலத்தில் நாட்டுக்கோ மக்களுக்கோ ஏற்படக் கூடிய சவால்களை எதிர்கொள்வதற்கு இராணுவப் பயிற்சிகள் அவசியம் - என்றார். (ந)

## பிணை விண்ணப்பம் தொடர்பான
# சட்டமா அதிபரின் அறிக்கை கிடைக்கவில்லை; வித்தியா வழக்கின் நிரபராதிக்கு மறியல் நீடிப்பு

யாழ்ப்பாணம் செப் 1

வித்தியா கொலை வழக்கில் நிரபராதியாக விடுதலை செய்யப்பட்டும், அச்சுறுத்தினார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளவரின் பிணை விண்ணப்பம் தொடர்பான சட்டமா அதிபரின் அறிக்கை கிடைக்காததால் அவர் தொடர்ந்தும் மறியலில் வைக்கப்பட்டார். எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் சட்டமா அதிபருடைய அறிக்கையை மன்றில் சமர்ப்பிக்குமாறு நீதிபதி அ.பிறேம சங்கர் உத்தரவிட்டார்.

வழக்கு நேற்றையதினம் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் நீதிபதி அ.பிறேம சங்கர் முன்னிலையில் விளக்கத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. ஏற்றகனவே பிணை விண்ணப்பம் தொடர்பான சட்டமா அதிபர்திணைக்களத்தின் தீர்மானத்தை வழங்குமாறு கூறப்பட்டிருந்தது. சட்டமா அதிபரின் அறிக்கை இதுவரை வழங்கப்படவில்லை என்று பொலிஸார் மன்றில் தெரிவித்தனர். இதனை அடுத்து சட்டமா அதிபர் திணைக்களதினர் அறிக்கையை எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன்னர் ஊர்காவற்றுறை நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறும் சமர்ப்பிக்காது விட்டால் 10ஆம் திகதி யாழ்ப்பாணம் மேல்நீதிமன்றில் இந்த வழக்கு மீண்டும் விளக்கத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும் எனவும் உத்தரவிடப்பட்டது.

புங்குடுதீவு மாணவி வித்தியா கொலை வழக்கில் சந்தேகநபராகக் கைதுசெய்யப்பட்ட பூபாலசிங்கம் இந்திரகுமார் நிரபராதி எனத் தீர்பளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டார். எனினும் அவர் அச்சுறுத்தினார் என்றகுற்றச்சாட்டில் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். இந்திரகுமாருக்கு வழக்கு ஊர்காவற்றுறை நீதிவான் மன்றில் இடம்பெற்று வருகிறது. அந்த வழக்கை மீளப் பெறுவது தொடர்பான ஆலோசனை அறிக்கையை மன்று சட்ட மா அதிபரிடம் கோரியது.

இந்திரகுமார் சார்பில் அவரது மனைவி யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் பிணை கோரி மனுத் தாக்கல் செய்தார். இளம் சட்டத்தரணி சிவலிங்கம் ரிஷிகேசன் இந்திரகுமாருக்கான பிணை விண்ணபத்தை இலவசமாக யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யதார். அவரைத் தொடர்ந்து சட்டத்தரணி வி.திருக்குமரனும் அண்மையில் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் பிணை மனுவுக்கு விண்ணப்பம் செய்திருந்தார். சட்டத்தரணிகளின் விண்ணப்பங்களை ஏற்றுக்கொண்ட யாழ்ப்பாணம் மேல் நீதிமன்று எதிர் மனுதாரர்களான சட்டமா அதிபர் மற்றும் ஊர்காவற்றுறை பொலிஸாருக்கு அறிவித்தல் அனுப்ப உத்தரவிட்டிருந்தது. வழக்கை மீளப் பெற்று இந்திரகுமாரை விடுவிப்பது தொடர்பான ஆலோசனையை சட்ட மா அதிபரிடம் கோரி ஊர்காவற்றுறை பொலிஸார் அறிக்கை அனுப்பியிருந்தனர்.

நேற்றய வழக்கில் சட்டமா அதிபர் திணைக்களத்தால் ஆலோசனை அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை என்று பொலிஸார் மன்றில் தெரிவித்தனர். குறித்த வழக்கில் சட்டமா அதிபரின் தீர்மானம் சந்தேகநபருக்குச் சாதகமாக அமையும் போது அவர் இந்த வழக்கில் இருந்தும் விடுவிக்கப்படுவார் என தெரிவிக்கப்பட்டது. (21.114)

# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், செப். 1

**சங்கானை சுப்பர் லீக்**

சங்கானை பிரதேச கழகங்களை ஒன்றிணைத்து நடத்தப்படும் சங்கானை சுப்பர் லீக் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் துணைவி சென் ஸ்ரார் விளையாட்டுக் கழக மைதானத்தில் இன்று இடம்பெறவுள்ளன.

இதன்படி இன்று பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அராலி வாரியர்ஸ் அணியை எதிர்த்து அராலி கிங்ஸ் ஸ்ரார் அணி மோதவுள்ளது. தொடர்ந்து மாலை 5 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அராலி லேஜன் எவ்.சி அணியை எதிர்த்து வட்டு ஈகிள் எவ்.சி அணி மோதவுள்ளது.

**ஏபி வி.கழக துடுப்பாட்டம்**

ஏபி விளையாட்டுக் கழகம் நடத்தும் யாழ்;ப்பாணம் துடுப்பாட்ட லீக் தொடரின் ஆட்டங்கள் சில இன்று இடம்பெறவுள்ளன.

இதன்படி வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் காலை 10.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் விக்டோறி அணியை எதிர்த்து கிறாஸ் கொப்பர்ஸ் அணி மோதவுள்ளது. பிற்பகல் ஒரு மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து திருநெல்வேலி கிரிக்கெட் கழக அணி மோதவுள்ளது.

**ஜொலிஸ்ரார் கழகத் துடுப்பாட்டத் தொடர்**

ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் நடத்தும் ஜொலிஸ்ரார் வெற்றிக் கிண்ண த்துக்கான துடுப்பாட்டத் தொடரின் ஆட்டங்கள் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இந்தத் தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு இடம்பெறும் காலிறுதியாட்டத்தில் கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து யூனியன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**வெண்மதி வி.க. கரப்பந்தாட்டம்**

நாகர்கோவில் வெண்மதி விளையாட்டுக் கழகம் நடத்தும் கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் நாகர்கோவில் வெண்மதி விளையாட்டுக் கழக மைதானத்தில் இன்று சனிக்கிழமை மாலை 5 மணிக்கு ஆரம்பமாகின்றன.

இந்தத் தொடரில் 28 கழகங்கள் பங்குபற்றுகின்றன என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்தனர்.

(ம-23)

# தேசிய கால்பந்து அணியில் 3 தமிழர்கள்




யாழ்ப்பாணம், செப். 1

பங்களாதேஷில் எதிர்வரும் 4ஆம் திகதி முதல் 15ஆம் திகதி வரை இடம்பெறவுள்ள தெற்காசிய கால்பந்து சம்மேளனத்தின் தொடரில் பங்குபற்றும் இலங்கைத் தேசிய கால்பந்தாட்ட அணிக்கு 3 தமிழ் வீரர்கள் தெரிவாகினர்.

20 வீரர்களை உள்ளடக்கிய குழாம் இலங்கை கால்பந்து சம்மேளனத்தினால் நேற்றுமுன்தினம் அறிவிக்கப்பட்டது. அதில் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த தமிழ் வீரர்களான நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக் கழக அணியின் மரியதாஸ் நிதர்சன் மற்றும் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழக அணியின் யூட் சுபன் பள்ளிமுனை சென். ஜோசப் விளையாட்டுக் கழக அணியின் வீரன் டக்சன் பியூஸ்லஸ் ஆகியோரே அவ்வாறு உள்வாங்கப்பட்டவர்களாவர்.

(ம-23)

# அமெரிக்க தொடரில் முகுருசா வெளியே



பன்னாட்டு அந்தஸ்து பெற்ற பகிரங்கத் தொடர்களில் ஒன்றான அமெரிக்கத் தொடரில், பெண்கள் ஒற்றையர் பிரிவில் இரண்டாம் சுற்றுடன் வெளியேற்றப்பட்டார் ஸ்பெய்ன் வீராங்கனை முகுருசா.

நியூயோர்க் நகரில் இந்தத் தொடர் நடைபெற்று வருகிறது. நேற்று முன்தினம் நடைபெற்ற ஒற்றையர் பிரிவு ஆட்டத்தில் முகுருசாவை எதிர்த்து செக்குடியசு வீராங்கனை மச்சோவா மோதினார்.

மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதலாவது செற்றை 6:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிய போதிலும் அடுத்த இரண்டு செற்களையும் 4:6, 4:6 என்ற புள்ளிகளின் அடிப்படையில் இழந்து தொடரில் இருந்து வெளியேறினார் முகுருசா.

இந்தத் தொடரில் முன்னணி வீராங்கனைகளான கேலப், வோஸ்னியாக்கி ஆகியோர் ஏற்கனவே வெளியேறியுள்ள நிலையில் முகுருசாவின் வெளியேற்றம் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. (ம)

# கிங்ஸ்ரார் சம்பியன்!

யாழ்ப்பாணம், செப். 1


சிறிமுருகன் ஐக்கிய விளையாட்டுக் கழகத்தின் 45ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்ட ஓவர்கேம் முறையிலான கரப்பந்தாட்டத் தொடரில் கோண்டாவில் கிங்ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி சம்பியனானது.

சிறிமுருகன் ஐக்கிய விளையாட்டுக் கழக மைதானத்தில் அண்மையில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் உடுவில் அம்பாள் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கோண்டாவில் கிங்ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதியது.

இறுதியாட்டம் ஐந்து செற்களைக் கொண்டதாக அமைந்தது. முதலாவது செற்றை 15:13 என்ற புள்ளிகளின் அடிப்படையில் உடுவில் அம்பாள் விளை யாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது. எனினும் அடுத்த மூன்று செற்களையும் முறையே 15:09, 15:13, 15:12 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 3:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றது கிங் ஸ்ரார் அணி.

(ம-23)

# ரபேல் நடால் மிகச் சிறப்பான ஆட்டம்



அமெரிக்கப் பகிரங்கத் தொடரில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் மூன்றாவது சுற்றுக்குத் தகுதி பெற்றார் ஸ்பெய்ன் வீரர் ரபேல் நடால்.

நியூயோர்க் நகரில் இந்தத் தொடர் நடைபெற்று வருகிறது. நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆண்கள் ஒற்றையர் பிரிவு ஆட்டத்தில் பன்னாட்டுத் தரப்படுத்தலில் முதலிடத்தில் உள்ளவரான ஸ்பெய்ன் வீரர் நடாலை எதிர்த்து கனடாவைச் சேர்ந்தவரான பொஸ்பிசில் மோதினார்.

ஐந்து செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதல் மூன்று செற்களையும் முறையே 6:3, 6:4, 6:2 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 3:0 என்ற நேர்செற் கணக்கில் வெற்றிபெற்றார் ரபேல் நடால்.

இந்தத் தொடரில் நடால் பெறும் இரண்டாவது நேர்செற் வெற்றி இதுவாகும். நடால் தனது அடுத்த ஆட்டத்தில் ரஷ்யாவைச் சேர்ந்த கேச்சனோவை எதிர்கொள்கிறார்.

(ம)



# பெடரர் வெற்றி

பன்னாட்டு அந்தஸ்துபெற்ற பகிரங்கத் தொடர்களில் ஒன்றான அமெரிக்கத் தொடரில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் மூன்றாவது சுற்றுக்குத் தகுதி பெற்றார் சுவிற்சர்லாந்தின் வீரர் றோயர் பெடரர். நியூயோர்க் நகரில் இந்தத் தொடர் நடைபெற்று வருகிறது. நேற்று நடைபெற்ற ஆண்கள் ஒற்றையர் பிரிவு இரண்டாவது சுற்று ஆட்டத்தில் பெடரரை எதிர்த்து பிரான்ஸ் வீரர் பெனோஜிட் மோதினார்.

ஐந்து செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதல் செற் இருவருக்கும் சிறிது போராட்டகரமாக அமைந்தது. அந்த செற்றை 7:5 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றினார் பெடரர். அவர் அடுத்த இரண்டு செற்களிலும் முறையே 6:4, 6:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று 3:0 என்ற நேர்செற் கணக்கில் வெற்றிபெற்றார். (ம)

# சென். பற்றிக்ஸ் அரையிறுதியில்



யாழ்ப்பாணம், செப். 1

யாழ்ப்பாண மாவட்ட பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கம் நடத்தும் 19 வயதுக்குட்பட்ட அணிகளுக்கு இடையிலான ரி20 தொடரில் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.

சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து திருகோணமலை சிறிகோணேஸ்வரா இந்துக் கல்லூரி அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி 20 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 136 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக மொனிக் 54 ஓட்டங்களையும், திலக்சன் 34 ஓட்டங்களையும், பெனாசன் 18 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் டிருசன் 4 இலக்குகளையும், ராகவன், ரிசி, தயாகரசர்மா மூவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சிறிகோணேஸ்வரா இந்துக் கல்லூரி அணி 16.3 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 88 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. ரிசி பெற்ற 21 ஓட்டங்களே அதிகபட்சம். தினுக்சன் இரண்டாவது அதிகபட்சமாக 19 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்துவீச்சில் டனிசியஸ், டிலக்சன் இருவரும் தலா 3 இலக்குகளைக் கைப்பற்றினர். (ம-23)

# மாற்றமே மாறாதது

மாற்றமே மாறாதது என்பார்கள், ஆனால், இந்திய அணியின் தலைவர் விராட் கோக்லி, முதல் முறையாக எந்தவிதத்திலும் மாற்றமில்லாத அணியை இங்கிலாந்துக்கு எதிரான நான்காவது டெஸ்ட் ஆட்டத்தில் களமிறக்கியுள்ளார்.

இந்திய டெஸ்ட் அணியின் தலைவராகப் பொறுப்பேற்ற பின்னர் இதுவரை 38 ஆட்டங்களுக்குக் கோக்லி தலைவராகச் செயற்பட்டுள்ளார். 39ஆவது ஆட்டத்துக்கு தற்போது தலைமை தாங்குகிறார். முடிவடைந்த 38 ஆட்டங்களில் தான் களமிறக்கிய அணிகளில் அவர் ஏதேனும் ஒரு மாற்றத்தையாவது செய்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார். அதாவது ஓர் டெஸ்ட் ஆட்டத்தில் களமிறக்கிய அதே அணியை அவர் அடுத்த டெஸ்ட் ஆட்டத்தில் களமிறக்கியதில்லை. 'இது மிகவும் அதீதபட்சம்' என்று ஹர்பஜன் கூட ஒருமுறை கோக்லியை விமர்சித்திருந்தார்.

இவ்வாறாக அணியில் மாற்றத்தை விரும்பும் கோக்லி தற்போது முதல் முறையாக எந்த மாற்றமும் இல்லாத அணியைக் களமிறக்கியுள்ளார். இதன்படி இங்கிலாந்துக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் ஆட்டத்தில் விளையாடிய அணியையே நான்காவது டெஸ்ட் ஆட்டத்திலும் அவர் களமிறக்கியுள்ளார். அணியில் மாற்றம் ஏற்படாவிட்டாலும் கோக்லி இதுவரை தான் கொண்டிருந்த வழமையில் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளார். (ம)



# ஸ்கந்தவரோதயா அரையிறுதிக்குத் தகுதி

யாழ்ப்பாணம், செப். 1

யாழ்ப்பாண மாவட்ட பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கம் நடத்தும் 19 வயதுக்குட்பட்ட அணிகளுக்கு இடையிலான ரி20 தொடரில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்று மாலை இந்த காலிறுதியாட்டம் இடம்பெற்றது. சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணியை எதிர்த்து மட்டக்களப்பு சிவானந்தா தேசியப் பாடசாலை அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சிவானந்தா தேசியப் பாடசாலை அணி நிர்ணயிக்கப்பட்ட 20 பந்துப் பரிமாற்றங்களில் 9 இலக்குகளை இழந்து 137 ஓட்டங்களை மட்டும் பெற்றது. அதிகபட்சமாக அனுரன் 49 ஓட்டங்களையும், டருஸ்மன் 30 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணியின் சார்பில் சோபிகன், தனுஸ்ரன் இருவரும் தலா 2 இலக்குகளையும், டன்சன், அஜிந்தன் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி 17.4 பந்துப்பரிமாற்றங்களில் 7 இலக்குகளை இழந்து 138 ஓட்டங்களைப் பெற்று 3 இலக்குகளால் வென்றது. அஜிந்தன் ஆட்டமிழக்காமல் 31 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றுக் கொடுத்தார். (ம)



# ஆர்.சி.பிக்கு கிறிஸ்டன் பயிற்சியாளர்

ஐ.பி.எல். தொடரில் விளையாடும் அணிகளில் ஒன்றான பெங்களூர் றோயல் சலஞ்சேர்ஸ் அணியின் தலைமைப் பயிற்சியாளராக கிறிஸ்டன் நிய மிக்கப்பட்டார். 2011ஆம் ஆண்டு இந்திய அணி உலகக்கிண்ணம் வெல்வதற்கு கிறிஸ்டன் முக்கிய காரணியாக இருந்தார்.

கடந்த 4 ஆண்டுகளாக பெங்களூர் அணிக்கு பயிற்சியாளாக வெட்டோரி இருந்துவந்த நிலையில் அவர் திடீரென மாற்றப்பட்டுள்ளார். கடந்த ஆண்டு பெங்களூர் அணியின் துடுப்பாட்டப் பயிற்சியாளராக கிறிஸ்டன் செயற்பட்டிருந்தார். தற்போது அவர் தலைமைப் பயிற்சியாளராக நியமிக்கப்பட்டார். (ம)



# இங்கிலாந்துக்கு இந்தியா பதிலடி


இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான நான்காவது டெஸ்ட் ஆட்டத்தின் நேற்றைய இரண்டாம் நாளின் அடிப்படையில் இரண்டு அணிகளும் ஒப்பீட்டளவில் சமபலத்தில் உள்ளன.

நேற்றுமுன்தினம் இந்த ஆட்டம் ஆரம்பமானது. ஐந்து ஆட்டங்களைக் கொண்ட தொடரில் இங்கிலாந்து அணி 2:1 என்ற அடிப்படையில் முன்னிலையில் இருப்பதால் தொடரில் சமநிலையைப் பேணுவதற்கு இந்த ஆட்டத்தில் வெற்றிபெற வேண்டும் என்ற இக்கட்டான நிலை இந்தியாவுக்கும் தொடரைக் கைப்பற்ற இந்த ஆட்டத்தில் வெற்றிபெற வேண்டும் என்ற நிலை இங்கிலாந்துக்கும் உள்ளதால் ஆட்டம் பெரியளவில் எதிர்பார்க்கப்படுகிறது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 246 ஓட்டங்களுக்குச் சகல இலக்குகளையும் இழந்தது. கரன் அதிகபட்சமாக 78 ஓட்டங்களையும், மொயின் அலி 40 ஓட்டங்களையும், ஸ்ரோக்ஸ் 23 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் பும்ரா 3 இலக்குகளையும், இசாந் சர்மா, சமி, அஸ்வின் மூவரும் தலா 2 இலக்குகளையும், பாண்டியா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய இந்திய அணி நேற்றுமுன்தின முதல் நாள் முடிவில் இலக்குச் சரிவில்லாமல் 19 ஓட்டங்களைப் பெற்றது. தவான் 3 ஓட்டங்களுடனும், ராகுல் 11 ஓட்டங்களுடனும் இரண்டாம் நாளுக்காக நேற்றுக் களமிறங்கினர். அணி 37 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் 19 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் ராகுல். தவான் 23 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினார். புஜாரா, கோக்லி இருவரும் நிலைத்துநின்று விளையாடினார்கள். இங்கிலாந்துக்கு கலக்கத்தை ஏற்படுத்தும்படியான இணைப்பாட்டம் அது. பிறிதொரு இலக்கை இழக்காமல் 100 ஓட்டங்களைத் தொட்டது இந்திய அணி. 46 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் அணித் தலைவர் கோக்லி. புஜாரா அரைச்சதம் கடந்தார். அவர் ஒரு முனையில் நிலைத்து நின்றாலும் மறுமுனையால் இலக்குகள் சரிந்தன. ரகானே 11, பன்ட் 0, பாண்டியா 4 என்று பவிலியன் திரும்ப தேனீர் இடைவேளைக்குச் சற்றுப் பின்னர் இந்திய அணி 8 இலக்குகளை இழந்து 208 ஓட்டங்களைப் பெற்றது. (ம)



## கோக்லி 6,000

பன்னாட்டு டெஸ்ட் அரங்கில் 6 ஆயிரம் ஓட்டங்கள் என்ற மைல் கல்லை எட்டினார் இந்திய அணியின் தலைவர் விராட் கோக்லி.

இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான நான்காவது டெஸ்ட் ஆட்டம் தற்போது நடைபெற்று வருகிறது. நேற்று இந்திய அணியின் முதலாவது இன்னிங்ஸுக்காகக் களமிறங்கிய கோக்லி 46 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தர். இந்த 46 ஓட்டங்களின் உதவியுடன் பன்னாட்டு டெஸ்ட் அரங்கில் அவர் 6 ஆயிரம் ஓட்டங்கள் என்ற மைல் கல்லை எட்டினார். (ம)




### காணி / வீடு விற்பனை

வவுனியா உக்குளான்குளம் பகுதியில் 2.2 பரப்புக் காணியுள் சுற்றுமதில், கிணறு மற்றும் சகல வசதிகளுடன் அமைக்கப்பட்ட புத்தம் புதிய வீடு விற்பனைக்குண்டு. சனி, ஞாயிறு தினத்தில் 9.00 மணிமுதல் 5 மணிவரை பார்வையிடமுடியும்.

071 023 2288 / 077 615 2992

### உடனடி வேலை வாய்ப்பு

(1) சூப்பர் மார்க்கட் - (50 ஆண்கள்) SR 65 000 + OT

(2) ஏயாப்போட் - SR 65 000 + OT (20 ஆண்கள்)

(3)கொஸ்பிட்டல், வங்கி, ஏயார்போட் (ஆண்) SR 60 000 + OT

உணவு, தங்குமிட வசதிகள் உண்டு.

E mail : RelianceColombo@gmail.com

Phone No : 077 939 4727, 076 249 8674

### கணக்காய்வாளர் தேவை

**கணக்காய்வுத் துறையில் 3 வருட அனுபவமும் துறை சார் கல்வித் தகைமையும் உள்ள கணக்காய்வாளர்கள்** யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல நிறுவனத்துக்கு வேண்டப்படுகின்றனர். தகைமையுள்ளவர்கள் கீழ்க்காணும் முகவரியில் தொடர்பு கொண்டு **03.09.2018** இல் நடைபெறும் நேர்முகத் தேர்வில் பங்குபற்றவும். (C/7657)(11,17)

021 493 4444

105, Raja veethy, கோப்பாய்.

### காணவில்லை

இல.22. இராமநாதன் வீதி, நாச்சிமார் கோயிலடி யாழ்ப்பாணத்தைச் **சேர்ந்த புஸ்பராசா - உமாகரன்** அவர்கள் கடந்த 28.07.2018 அன்று தொடக்கம் உறவினர்களோடு எதுவித தொடர்பும் அற்றுக் காணாமல் போயுள்ளார். இவர் தொடர்பான தகவல் தெரிந்தவர் யாரேனும் இருப்பின் இவரது தந்தையாரான **குணசிங்கம் - புஸ்பராசா** அவர்களோடு தொடர்பு கொண்டு தகவல் தருமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:- **தந்தை கு.புஸ்பராசா**

(CS/19436)(11,17) **077 612 6485, 077 364 0424**

### VCM INSTITUTE

மனோகராச் சந்தி அருகாமை, யாழ்ப்பாணம்.

**A/L 2018 REPEAT**

**இணைந்த கணிதம்**

*B. ரவீந்திரன் B.Sc*

ஆரம்பம் 05.09.2018 புதன் காலை 7.00 மணி

### விஸ்டம்

விஸ்டம்

தொழில் நுட்பக் கல்லூரி

இல63 சிவன் வடக்கு வீதி வண்ணார்பண்ணை யாழ்ப்பாணம்.

**A/L 2018 தொழில் நுட்பப் பிரிவு**

பொறியியல் தொ.நுட்பம் | உயிர்முறைமைகள் தொ.நுட்பம்

**செயன்முறை பயிற்சி வகுப்புக்களும் பரீட்சைகளும்**

குறிப்பு:- 01.அனைத்து மாணவர்களும் பங்குபற்றலாம்
02. இறுதிப் பரீட்சையை மையமாகக் கொண்டது.

ஆரம்பம் 2018.09.02 மாலை 2.00 மணி

மேலதிக தொடர்புகளுக்கு:- 077 248 7774, 076 552 9093, 021 221 7880

A/L தொழில்நுட்பப் பிரிவிற்கு தவித்துவமான ஒரே ஒரு தனியார் கல்வி நிறுவனம்


## யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட அணிக்கு தேசிய மட்டத்தில் வெள்ளிப் பதக்கம்



யாழ்ப்பாணம், செப். 1

ஸ்ரீ லங்கா என்ரபிரைசஸ் நிறுவனத்தின் அனுசரணையுடன் இலங்கை கரப்பந்தாட்டச் சம்மேளனம் நடத்திய தேசிய மட்ட கரப்பந்தாட்டத் தொடரில் யாழ்ப்பாண மாவட்ட அணி வெள்ளிப் பதக்கத்தைச் சுவீகரித்தது.

மொனராகல உள்ளக விளையாட்டரங்கில் நேற்று நடைபெற்ற இறுதியாட்டத்தில் யாழ்ப்பாண மாவட்ட அணியை எதிர்த்து மொனராகல மாவட்ட அணி மோதியது. முதலாவது செற்றில் யாழ்ப்பாண மாவட்ட அணி 25:16 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது. ஆனால் அடுத்த மூன்று செற்களிலும் ஆதிக்கம் செலுத்திய மொனராகல மாவட்ட அணி 25:20, 25:19, 25:19 என்ற புள்ளிகளின் அடிப்படையில் அந்த செற்களைக் கைப்பற்றி 3:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்றது. இதனால் யாழ்ப்பாண மாவட்ட அணி வெள்ளிப் பதக்கத்தைச் சுவீகரித்தது. (ம-422)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 01.09.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.